# காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்

## ஆண்டு அறிக்கை

## 2024

*இல.40இ 03ம் மாடி, இபுத்கமுவ வீதி, ராஜகிரிய*

**சொற்சுருக்கம்**

| | |
|---|---|
| COA | காணப்படாமைக்கான சான்றிதழ் |
| COD | மரணச் சான்றிதழ் |
| COI | விசாரணை ஆணைக்குழு |
| CTF | நல்லிணக்கப் பொறிமுறைக்கான ஆலோசனைச் செயலணி |
| DNA | தேசிய சுவடிக்காப்புத் திணைக்களம் |
| EU | ஐரோப்பிய ஒன்றியம் |
| GSP | பொதுவாக்கப்பட்ட முன்னுரிமை முறை |
| ICRC | சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் |
| INGOS | அரசசார்பற்ற சர்வதேச நிறுவங்கள் |
| MIA | இராணுவ நடவடிக்கையின் போது காணாமல் போன ஆட்கள் மற்றும் காணாமலாக்கப்பட்டவர்கள் |
| MOFA | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு |
| MOJ | நீதி அமைச்சு |
| MOU | புரிந்துணர்வு ஒப்பந்தம் |
| MSD | முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் |
| NGOS | அரசசார்பற்ற நிறுவனங்கள் |
| OMP | காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் |
| PC | ஜனாதிபதி சட்டத்தரணி |
| RTI | தகவல் அறியும் உரிமை |
| SLIDA | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் |
| UN | ஐக்கிய நாடுகள் சபை |
| UNWG | ஐக்கிய நாடுகள் சபையின் செயற்குழு |
| UNWGIE | தன்னிச்சையின்றி காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பிலான ஐக்கிய நாடுகள் சபையின் செயற்குழு |

உள்ளடக்க அட்டவணை


| | | |
|---|---|---|
| | தவிசாளரின் செய்தி | 3-4 |
| 1. | முன்னுரை | 5-6 |
| 2. | அறிமுகம் | 6-7 |
| 3. | 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகச் சட்டத்தின் பிரிவு 2 இன் நோக்குகள் | 7-8 |
| 4. | கடப்பாடு | 8 |
| 5. | தூரநோக்கு மற்றும் நிறுவனரீதியான முன்னுரிமைகள் (செயற்பாட்டு ரீதியான கொள்கைகள்) | 9 |
| 6. | காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் பிரசன்னம் | 10 |
| 7. | நிகழ்ச்சித் திட்டம் வாரியான இற்றைப்படுத்தல் | 11 |
| 8. | சட்டம், கொள்கை மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு | 11-17 |
| 9. | தரவு முகாமைத்துவ பிரிவு | 17-20 |
| 10. | பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் குடும்பங்களுக்கு ஆதரவளிக்கும் அலகு | 20 |
| | 10.1 ஒரு குடும்பம்/ குடும்ப உறுப்பினருடன் கலந்தாலோசித்து, முறைப்பாடுகளைப் பெற்றுக்கொண்டு அவற்றை பதிவுசெய்தல் | 21 |
| | 10.2 காணாமல் போன ஆள் தொடர்பில் பதிவு செய்யப்பட்ட குடும்ப உறுப்பினருக்கு கடிதங்களை அனுப்புதல். | 21 |
| | 10.3 விசாரணை பரிந்துரைகளைத் தொகுத்தல் விசாரணைக் குழுக்களின் பரிந்துரைகளை இற்றைப்படுத்துதல். | 21-25 |
| | 10.4 பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துதல் | 25-29 |
| | 10.5 ஏனைய செயற்பாடுகள் | 29 |
| 11. | நிதி மற்றும் பெறுகைப் பிரிவு | 30-31 |
| 12. | மனித வளங்கள் மற்றும் நிர்வாகப் பிரிவு | 32-33 |
| 13. | கண்டறிதல் மற்றும் புலன் விசாரணைப் பிரிவு | 34-36 |
| 14. | பாதுகாப்பு பிரிவு | 36-38 |
| 15. | தகவல் அறியும் உரிமை | 38-39 |
| 16. | பாராட்டுதல் | 39 |
| 17. | நிதிக் கூற்று | 40 |
| 18 | நிதிசார் கூற்றுகள் | 41 - 50 |
| 19 | நிதி அறிக்கை | 51 - 76 |

## தவிசாளரின் செய்தி

2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலக (தாபித்தல், நிர்வகித்தல் மற்றும் கருமங்களை ஆற்றுதல்) சட்டம் (OMP சட்டம்) 2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நிறைவேற்றப்பட்டது. அரசியலமைப்பு பேரவையின் பரிந்துரைகளின் பேரில், மேன்மைதங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 28.02.2018 அன்று அலுவலகத்தை நிறுவி வைத்தார். காணாமல் போன ஆட்கள் எத்தகைய சூழ்நிலையில் காணாமல் போனார்கள் என்பதையும் அவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதனை பற்றியும் தெளிவுபடுத்துதல், மீண்டும் அத்தகைய நிகழ்வுகள் நிகழாமல் இருப்பதை உறுதி செய்ய தொடர்புடைய அதிகாரிகளுக்கு பரிந்துரைகளை வழங்குதல் காணாமல் போன ஆட்கள், காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் அவர்களது உறவினர்களின் உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாத்தல், காணாமல் போன ஆட்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான நிவாரண வழிகளை அடையாளம் காணுதல் மற்றும் கைவசமுள்ள அனைத்து தகவல்களையும் ஒரு தரவுத்தளத்தில் ஒழுங்குபடுத்துதல் முதலிய கடப்பாடுகளை OMP கொண்டுள்ளது.

தற்சமயம் உள்ள சட்டங்கள் மற்றும் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் செயற்படுத்துவதற்கும் OMP உதவும் அதேவேளை காணாமல் போன ஆட்கள், காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் அவர்களது உறவினர்களின் உரிமைகள் மற்றும் நலன்களையும் சட்டவாட்சியினையும் சமநிலைப்படுத்தும் வகையில் தனது கடமையை மேற்கொண்டுள்ளது. OMP ஐ செயற்படுத்துவது குறித்து காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் கருத்துக்களைப் பெறுவதற்காக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் OMP நடத்திய பொதுக் கூட்டங்களில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் உள்ளடங்களாக OMP உடன் நேரடியாகப் பகிர்ந்து கொள்ளப்பட்ட கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டும் நல்லிணக்க பொறிமுறைகள் குறித்த ஆலோசனை செயற்குழுவின் (CTF) பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டும் OMP வழிநடத்தப்படுகின்றது.

ஏனைய அரச நிறுவனங்கள், தாபனங்கள், அரச திணைக்களங்கள், விசாரணை ஆணைக்குழுக்கள் மற்றும் விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் ஆகியவற்றால் முன்னர் மேற்கொள்ளப்பட்ட செயன்முறைகள் மூலம் பெறப்பட்ட காணாமல் போன ஆட்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான தரவுகளை ஒன்றிணைப்பதற்கும், கைவசமுள்ள அனைத்து தரவையும் OMP சட்டத்தின் பிரிவு 10(1)(உ) இன்கீழ் ஒரு தரவுத்தளத்திற்குள் ஒன்றுசேர்ப்பதற்கும் OMP க்கு வெளிப்படையான கடப்பாடு உள்ளது. கடந்த ஆண்டில் நாம் வெளிக்காட்டிய செயற்பாடுகளைப்போன்று காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் (OMP) 2024 ஆம் ஆண்டிற்கான ஆண்டு அறிக்கையை வழங்குவது எனக்கு பெருமையையும், ஆத்மார்த்தான பொறுப்புணர்வையும் ஏற்படுத்துகின்றது. இந்த அறிக்கை எமது அடைவுகள் மற்றும் சவால்களை உள்ளடக்குவது மட்டுமல்லாமல், சிக்கலானதும் வலி நிறைந்ததுமான பிரச்சினையால் பாதிக்கப்பட்ட இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் எண்ணற்ற குடும்பங்களின் மீட்சி மற்றும் நம்பிக்கைக்கு ஒரு சான்றாகவும் செயற்படுகிறது.

உண்மை, நீதி மற்றும் நல்லிணக்கத்திற்கான தேடல் எமது இலக்கின் முக்கிய புள்ளியாகும். காணாமல் போனவர்களின் குடும்பங்களின் குரல்கள் கேட்கப்படுவதையும் அவர்களின் கதைகள் அங்கீகரிக்கப்படுவதையும் உறுதி செய்வதனூடாக அவர்களின் தேவைகள் மற்றும் உரிமைகளுக்கு 2024 ஆம் ஆண்டில் தொடர்ந்து முன்னுரிமை அளித்து வருகிறோம். எங்களால் முன்னெடுக்கப்பட்ட சமூகத்துடனான பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள், ஆலோசனைகள் மற்றும் சமூக ஊடாட்ட முயற்சிகள் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் சமூகங்களுடனான எங்கள்

உறவை வலுப்படுத்தும் அதேவேளை நம்பிக்கை மற்றும் வெளிப்படைத்தன்மையான சூழலை ஏற்படுத்த எமக்குத் துணைபுரிந்துள்ளன.

இந்த ஆண்டில், காணாமல் போன ஆட்கள் பற்றிய வழக்குகளை ஆவணப்படுத்துவதில் எங்களது தகைமையை மேம்படுத்த தேசிய மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றுவதன் மூலம் எங்கள் புலனாய்வு முயற்சிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை அடைந்துள்ளோம். நாங்கள் எடுக்கும் ஒவ்வொரு முயற்சிப் படிநிலையிலும் பாதிக்கப்பட்டவர்களின் கண்ணியம் பேணப்படுவதை உறுதி செய்து அதனூடாக பாதிக்கப்பட்டவர்களை மையமாகக் கொண்ட அணுகுமுறையை கைக்கொள்ளும் எமது முயற்சி எமது பணியை திறம்பட வழிநடத்திச் சென்றுள்ளது. மேலும், இந்த மனிதாபிமான ரீதியான பிரச்சினையை நிவர்த்தி செய்வதில் சட்டவாக்கம் மற்றும் கொள்கை கட்டமைப்புகளின் முக்கியத்துவத்தை நாம் அங்கீகரிக்கின்றோம். அவ்வாறே, மனித உரிமைகளின் பாதுகாப்பை வலுப்படுத்தும் மற்றும் காணாமல் போன ஆட்களின் குடும்பங்களின் உரிமைகளை ஆதரிக்கும் வகையிலான சட்ட ரீதியான சீர்திருத்தங்களையும் கோரி கொள்கை வகுப்பாளர்களுடன் செயற்பாட்டு தன்மையுடன் நாம் இயங்கி வந்துள்ளோம். சிவில் சமூகம் உட்பட பல்வேறு பங்குதாரர்களுடனான எங்களது கூட்டு அணுகுமுறையானது பொறுப்புக்கூறல் மற்றும் நிலையான தீர்வுகளை வலியுறுத்துவதில் மிக முக்கியமான அம்சமாகத் திகழ்கின்றது.

2024 ஆம் ஆண்டில் நாம் தடம்பதிக்கின்ற இச்சந்தர்ப்பத்தில், காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு பதில்களும் நீதியும் கிடைப்பதை உறுதிப்படுத்துவதில் எமது கவனம் முதன்மையானதாக இருக்கும். இந்தப் பயணம் சவால்களால் நிறைந்தது என்பதை நாம் அறிவோம், ஆனால் எமது கூட்டிணைந்த தீர்மானம், தயை மற்றும் அர்ப்பணிப்பை குறைத்து மதிப்பிடவும் முடியாது. அத்துடன் எம்மால் துயரத்தை செயலாகவும், நிச்சயமற்ற தன்மையை நம்பிக்கையாகவும் மாற்ற முடியும். அசைக்க முடியாத அர்ப்பணிப்பினூடாக எமது பணியை சாத்தியமாக்குகின்ற எமது அர்ப்பணிப்புமிக்க குழுவினர், பங்குதாரர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். காணாமல் போன ஆட்களின் குடும்பங்களுக்கு, நாம் எங்கள் வாக்குறுதியை மீண்டும் உறுதிப்படுத்துகிறோம். நாங்கள் உங்களுக்குத் துணை நிற்கிறோம், ஒவ்வொரு உண்மையும் வெளிப்படும் வரையிலும் ஒவ்வொரு வரலாறும் மதிக்கப்படும் வரையிலும் உங்கள் உரிமைகளுக்காக தொடர்ந்து போராடவுள்ளோம். இந்த அறிக்கையை நீங்கள் வாசிக்கும்போது, புள்ளிவிவரங்கள் மற்றும் அடைவுகளை மட்டுமல்லாது, அரவணைப்பு மற்றும் அமைதிக்காக ஏங்கும் தாய்மார்கள், தந்தைமார்கள், சகோதரர்கள் மற்றும் சகோதரிகளின் பின்னால் உள்ள மனிதம் சார் சம்பவங்களையும் கருத்திற்கொள்ளுமாறு உங்களிடம் வேண்டிக்கொள்கிறேன்.

அவர்களின் பலமே எங்களது பணிகளுக்கு உத்வேகத்தை அளித்து எமது பணியை முன்னோக்கிக் கொண்டுசெல்லத் தூண்டுகின்றது. நிவாரணத்திற்கும் நீதிக்குமான பாதை ஒரு பகிரப்பட்ட பயணம் என்பதை அறுதியாக நாம் நினைவிற் கொள்வோம். ஒவ்வொரு முயற்சியும் பிரதிபலனை வழங்குகின்றது, அதுபோல் ஒவ்வொரு குரலும் ஒரு விடயத்தைப் பிரதிபலிக்கின்றது. இலங்கையில் காணாமல் போன ஆட்களின் காரணமாக ஏற்பட்ட துயரத்தால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் ஒளிமயமான, அனைவரையும் உள்ளவாங்கிய எதிர்காலத்தை உருவாக்க நாங்கள் பாடுபடுகின்றபடியினால், அனைத்து பங்குதாரர்களும் தொடர்ந்து எங்களுடன் இணைந்து செயற்படுவதை நாம் வரவேற்கின்றோம்.

மகேஷ் கட்டுலந்த,

தவிசாளர்

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்.

## 1.முன்னுரை

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தை (OMP) தாபிப்பதற்கான சட்டமூலம் 22.06.2016 அன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலக (தாபித்தல், நிர்வகித்தல் மற்றும் கருமங்களை ஆற்றுதல்) சட்டம் (OMP சட்டம்) 11.08.2016 அன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. 28.02.2018 அன்று, அரசியலமைப்பு பேரவையின் பரிந்துரைகளின் அடிப்படையில் தலைவர் உள்ளிட்ட 7 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர்.

காணாமல் போன ஆட்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகளில் OMP தாபிக்கப்பட்டமையானது ஒரு பிரதான மைல்கல்லாய் திகழ்கின்றது. மாறிமாறி வந்த அரசாங்கங்கள் காணாமல் போனவர்களை பற்றி விசாரணை நடாத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்தன, இதில் விசாரணை ஆணைக்குழுக்களை நியமித்தல் அல்லது வரையறுக்கப்பட்ட அதிகாரத்துடன் கூடிய காலத்திற்கு தேவையான பொறிமுறைகளை செயல்படுத்தல் ஆகியனவும் அடங்கும். முந்தைய காலங்களில் மேற்கொள்ளப்பட்ட இத்தகைய பொறிமுறைகளானவை பரிந்துரைகளை வழங்கும் வகையில் முக்கியமான பங்களிப்பைச் செய்தாலும், தமது அன்புக்குரியவர்களைத் தேடும் பல ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு பதில் வழங்க அவற்றால் முடியவில்லை.

ஒரு நிரந்தர மற்றும் சுயாதீனமான அரச நிறுவனம் என்ற வகையில், முரண்பாடுகள், அரசியல் அமைதியின்மை அல்லது சிவில் கலவரங்கள் அல்லது வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டதன் விளைவாக காணாமல் போன அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களுக்கு என்ன நேர்ந்தது என்பதையும் அவர்கள் எங்கு இருக்கின்றார்கள் என்பதையும் தெளிவுபடுத்துவது OMP இன் பொறுப்பாகும்.

OMP சட்டத்தின் பிரிவு 27 இல், காணாமல் போன ஆளை வரைவிலக்கணப்படுத்துகையில் ஒரு நபரிற்கு என்ன நேர்ந்தது அல்லது அவர் எங்கு உள்ளார் என்பது பற்றி தெரியவில்லை என்று நியாயமாக நம்பப்படும் ஒரு நபரே காணாமல் போன நபர் எனப்படுகிறது, மேலும் அந்த நபர் மோதல் காரணமாக, அரசியல் அமைதியின்மை காரணமாக அல்லது சிவில் கலவரங்கள் அல்லது வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டதன் விளைவாக கணக்கெடுப்பில் உள்ளடக்கப்படாது காணாமல் போனவர் என்று நியாயமாக நம்பப்படுவார். OMP இன் கடப்பாடு எந்தவொரு குறிப்பிட்ட காலம், சமூகம் அல்லது பிராந்தியத்திற்கும் மட்டுப்படுத்தப்படவில்லை. OMP சட்டத்தின் பிரிவு 10 (1) ஒரு வெளிப்படையான பணிப்புரையைக் கொண்டுள்ளது. OMP அதன் தலைமை அலுவலகத்தை கொழும்பில் நிறுவியுள்ளதுடன் மாத்தறை, மன்னார், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் ஆகஸ்ட் 2021 இல் கிளிநொச்சியிலும் அமைக்கப்பட்ட பிராந்திய அலுவலகங்களுடனும் அவ்வூர் பொதுமக்களுடனும் ஆலோசனைகளைத் தொடர்ந்து நடாத்தி வருகின்றது.

முன்பிருந்த ஆணைக்குழுக்கள் பல்வேறு மூலங்களில் இருந்து தகவல்களைச் சேகரித்தல், குடும்பங்களால் வழங்கப்படும் புதிய முறைப்பாடுகளுக்கு பதிலளித்தல் மற்றும் எளிமைப்படுத்தப்பட்ட தரவுத் தளங்களில் அவற்றின் மொழிபெயர்ப்பை நிரற்படுத்தல் ஆகிய செயற்பாடுகளில் முக்கியமாக ஈடுபட்டதுடன் அதே நேரத்தில் புதிய முறைப்பாடுகளையும் கவனித்து வந்துள்ளன. இதற்கு மேலதிகமாக, முதல் மூன்று ஆண்டுகளில் அலுவலகத்தை நிறுவுதல், தகுதிவாய்ந்த பணியாளர்களை நியமித்தல் மற்றும் அலுவலர்களின் திறன் மேம்பாடு ஆகியவற்றில் அதிக நேரம் செலவிடப்பட்டது.

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (OMP) 2018 இல் நிறுவப்பட்டதுடன் 31.12.2024 இன் நிலவரப்படி அலுவலகத்தில் காணாமல் போன ஆட்கள் பற்றிய 21,123 கோப்புகள் காணப்படுகின்றன. 14.03.2022 திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கிணங்க காணாமல் போன ஆட்கள் தொடர்பான முறைப்பாடுகள் குறித்து முதற்கட்ட விசாரணைகளை நடத்துவதற்கான விசேட செயற்றிட்டத்தை அமுல்படுத்த நீதி அமைச்சினால் அறிவுறுத்தப்பட்டபடி, OMP இனால் மொத்தமாக 6,449 விசாரணைகளை நடத்த முடிந்தது.

இந்த செயற்பாட்டை எளிதாக்குவதற்காக நிறுவன ஒருங்கிணைப்பை OMP வலுப்படுத்தியுள்ளதுடன் கொள்கை கட்டமைப்புகளையும் உருவாக்கியுள்ளது. சர்வதேச சமூகத்திற்கு தமது நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து தொடர்ச்சியாக தகவல் அளித்து வந்துள்ளதோடு பல மட்டங்களில் மேற்பார்வை வழிமுறைகளையும் நிறுவியுள்ளது. வழிகாட்டுதல் குழுவில் தேசிய மட்டத்தில் ஜனாதிபதி செயலகம், அமைச்சர்கள் மட்டம் மற்றும் வெளி விவகார அமைச்சு (நன்கொடையாளர்கள் மற்றும் இராஜதந்திர பிரதிநிதிகள்) உள்ளிட்ட முக்கிய அரச நிறுவனங்களின் பிரதிநிதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளனர். மேலும், OMP மட்டத்தில் தொழில்நுட்ப பணிக்குழுக்களும், குறிப்பாக கட்டமைக்கப்பட்ட அதிகார சமநிலைகள் மூலம் வெளிப்படைத்தன்மை மற்றும் பாரபட்சமற்ற தன்மையை உறுதி செய்வதற்கும், குடும்பங்களை ஆதரிப்பதற்கும் இவ்வாறாக உள்வாங்கப்பட்டுள்ளனர்.

## 2.அறிமுகம்

காணாமல் போன ஆட்கள், காணாமலாக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது உறவினர்களினது உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், காணாமல் போன ஆட்கள், காணாமலாக்கப்பட்டவர்களது குடும்பங்களுக்கு பொருளாதார ரீதியான, உளவியல் ரீதியான, சட்ட மற்றும் நிர்வாக ரீதியான உதவியை அணுகுவதனை எளிதாக்குவதற்குமான கடப்பாட்டையும் OMP கொண்டுள்ளது. இந்தக் காரணத்திற்காகவும், தொழில்நுட்பத் திறனை உறுதி செய்யும்பொருட்டும் OMP இன் கண்டறிதல் சார் கடப்பாட்டை நிறைவேற்றவும், சபை மற்றும் ஊழியர்களால் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட முக்கிய கடப்பாட்டினைப் பூர்த்தி செய்வதற்கு ஏதுவான பல்வேறு சாத்தியமான செயற்பாடுகளை ஆராயவும் துணைபுரிகின்ற வகையிலான ஒரு மூலோபாய நிகழ்ச்சித் திட்டம், சட்டக் கட்டமைப்பு ஆகியவற்றை உருவாக்கியுள்ளது.

மேற்படி கடமையை நிறைவேற்றுவதில், காணாமல் போன ஆட்கள் பற்றிய கோப்புகள் தொடர்பான சட்ட மற்றும் கொள்கை ரீதியான பரிந்துரைகளை OMP வழங்கியுள்ளது. மேலும் மேலதிக தகவல்களைப் பெறுவதற்காக அமைச்சரவை தீர்மானத்திற்கமைய விசாரணைகளை நடத்துதல், காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு CoAs/சட்ட நிவாரணங்களைப் பெற உதவும் வகையில் அவர்களுக்கு உதவுதல், அமைச்சரவை தீர்மானத்தின்படி குடும்ப ஆதரவை செயற்படுத்துதல், மனித எச்சங்கள் தொடர்பான விசாரணைகளில் நீதிவான் நீதிமன்ற அதிகாரங்களைப் பயன்படுத்துதல், காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு குடும்பசகிதம் நிவாரணம் மற்றும் தனிப்பட்ட வழக்குகளில் சட்ட மற்றும் நிர்வாக உதவிக்கான கோரிக்கைகளுக்கு பதிலளித்தல் ஆகிய விடயங்களையும் OMP முன்னெடுத்தன.

வெற்றிகரமான தேடுதலுக்கு, OMP க்கும் காணாமல் போன ஆட்களின் குடும்பங்களுக்கும் இடையே நம்பிக்கை மற்றும் மரியாதை ஆகியவற்றின் மீது கட்டமைக்கப்பட்ட இணக்கமான உறவு அவசியமாகும். சாத்தியமான முகவர்கள் மற்றும் இருப்பிடங்களை மையமாகக் கொண்டு

தேடுதல் முயற்சிகளை காணாமல் போனவர்களின் குடும்பங்கள் ஏற்கனவே மேற்கொண்டு மரணத்திற்கு முந்தைய பொருத்தமான தகவல்களை வைத்திருக்கின்றன.

நடைமுறை சார்ந்த பரிசீலனைகளுக்கு அப்பால், குடும்பங்கள் தங்கள் அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பது பற்றிய உண்மையை அறிந்துகொள்வதற்கும், இந்தச் செயற்பாட்டில் தீவிரமாகப் பங்கேற்பதற்கும் அவர்களுக்கு உரிமை உண்டு. குடும்பங்களுடனான ஊடாட்ட செயல்முறை தீர்மானம் மேற்கொள்வதில் இன்றியமையாத பாகமாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது, மேலும் பாலினக் கண்ணோட்டமும், கலாச்சாரங்களுக்கிடையிலான கண்ணோட்டமும் OMP எடுக்கும் ஒவ்வொரு முயற்சியிலும் ஒரு கொள்கையாகக் அங்கம் வகித்துள்ளது. இதன் காரணமாக, OMP அதன் பிராந்திய அலுவலகத்தை கிளிநொச்சியில் திறந்துள்ளதுடன் பொதுமக்கள், கல்வியாளர்கள், அதிகாரிகள், பரிந்துரையாளர்கள், நன்கொடையாளர்கள் மற்றும் பிறரினை எளிதாக அணுகும் வகையில் அதன் பிராந்திய அலுவலகத்தை யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்திற்கு மாற்றியுள்ளது.

அரச சேவைகளைப் பெறுதல், நிதிச் சேவைகள், இழப்பீடு, இறப்புச் சான்றிதழ் (CoDs) மற்றும் ஓய்வூதியங்களைப் பெறுதல், காணப்படாமைக்கான சான்றிதழை (CoAs) பெறுதல், நடந்துகொண்டிருக்கும் சட்ட வழக்குகள், சொத்துக்கள் தொடர்பான தகராறுகள், உரிமை மற்றும் வாரிசுரிமை உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பொதுமக்கள் மற்றும் இராணுவக் குடும்பங்களிடம் OMP தொடர்ந்தும் உதவி கோரிவந்துள்ளது. இழப்பீடுகளுக்கான அலுவலகம், பதிவாளர் நாயகத்தின் திணைக்களம், உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் ஆயுதப்படைகள் உள்ளிட்ட தொடர்புடைய அரச நிறுவனங்களுடன் இதுபோன்ற விடயங்களை OMP கையாண்டு பதிலளித்துள்ளது. சாத்தியமான தருணங்களில், OMP பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சட்ட ஆலோசனை, நடைமுறை வழிகாட்டுதல் மற்றும் பரிந்துரைகளை வழங்குவதன் மூலம் அவர்களுக்கு உதவியுள்ளது.

மேலும், காணாமல் ஆக்கப்படும் சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் இருப்பதனை உறுதி செய்வதற்கும், மனித எச்சங்களைக் கையாள்வதற்கும், சமூக மற்றும் பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துவதற்கும் அரச அதிகாரிகளுக்குப் பரிந்துரைகளை வழங்குவதற்கும் OMP அதிகாரம் கொண்டுள்ளது.

### 3. 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகச் சட்டத்தின் பிரிவு 2

தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதை உறுதி செய்ய:

அ. காணாமல் போன ஆட்களைத் தேடுவதற்கும் கண்டுபிடிப்பதற்கும் பொருத்தமான பொறிமுறைகளை வழங்குதல் மற்றும் அத்தகைய நபர்கள் காணாமல் போன சூழ்நிலைகளையும் அவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பது பற்றியும் தெளிவுபடுத்துதல்.

ஆ. சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட வகையில் "காணாமல் போகும் ஆட்கள்" பற்றிய சம்பவங்களைக் குறைப்பது தொடர்பாக தொடர்புடைய அதிகாரிகளுக்கு பரிந்துரைகளை வழங்குதல்

இ. சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி காணாமல் போனவர்களினதும் அவர்களது உறவினர்களினதும் உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாத்தல்

ஈ. காணாமல் போன ஆட்கள் அல்லது அவர்களது உறவினர்கள் அணுகக்கூடிய நிவாரணத்திற்கான சரியான பாதையை அடையாளம் காணுதல்.

**4. கடப்பாடு**

OMP க்குரிய கடப்பாடுகளாவன:

அ. காணாமல் போன ஆட்களைத் தேடுதலும், கண்டுபிடித்தலும் மற்றும் அதற்குரிய பொருத்தமான வழிமுறைகளை அடையாளம் காணுதல், மேலும் அத்தகைய ஆட்கள் எந்த சூழ்நிலையில் காணாமல் போனார்கள் என்பதை தெளிவுபடுத்துதல்.

ஆ. காணாமல் போன ஆட்கள் பற்றிய சம்பவங்களுக்கு பதிலளிப்பதற்கு தேவையான பரிந்துரைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்குதல்:

இ. சட்டத்தில் கூறப்பட்டுள்ளபடி காணாமல் போனவர்கள் மற்றும் அவர்களது உறவினர்களின் உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாத்தல்

ஈ. காணாமல் போன ஆட்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு உரித்துடைய நிவாரண வழிகளை அடையாளம் கண்டு, காணாமல் போன ஆளுக்கு (உயிருடன் காணப்பட்டால்) அல்லது காணாமல் போன நபரின் உறவினருக்கு அதனைத் தெரிவித்தல்

உ. தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் அல்லது முன்னர் பிற நிறுவனங்கள், தாபனங்கள், அரச திணைக்களங்கள், விசாரணை ஆணைக்குழுக்கள் மற்றும் விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட செயன்முறைகள் மூலம் பெறப்பட்ட காணாமல் போன ஆட்கள் தொடர்பான தரவுகளை ஒன்றிணைத்து, OMP சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட தரவுத்தளத்திற்குள் கைவசமுள்ள அனைத்து தரவுகளையும் நிரற்படுத்தல்

ஊ. சட்டத்தின் குறிக்கோள்களை அடைவதில் அவசியமாகக்கூடிய பிற தேவையான அனைத்து விடயங்களையும் மேற்கொள்ளுதல்.

மேலும், காணாமல் போன ஆட்கள் தொடர்பாக அவர்கள் எப்போது காணாமல் போனார்களெனும் கால அளவைப் பொருட்படுத்தாமல் அனைவர் மீதும் அக்கறை செலுத்தத்தக்க வகையில் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் கடப்பாடு நீடிக்கப்படும்.

5. தொலைநோக்குப் பார்வை மற்றும் நிறுவனரீதியான முன்னுரிமைகள் (செயல்பாட்டு கொள்கைகள்)


OMP இனால் 2023-2025 காலப்பகுதியில் இறுதியாக வரையப்பட்ட செயற்றிட்ட நோக்கு அடிப்படையில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள செயல்பாட்டுக் கொள்கைகளை அலுவலகம் அடையாளப்படுத்தியுள்ளது.

**தொலைநோக்கு மற்றும் பணிக்கூற்று**

| | | | |
|---|---|---|---|
| **எங்கள் தொலைநோக்கு** | அனைவரும் நீதியை அனுபவிக்கும் மற்றும் நல்லிணக்க செயல்முறை வளப்படுத்தப்பட்ட நாடு. | | |
| **எங்கள் பணிக்கூற்று** | தேசிய நல்லிணக்க பொறிமுறையின் ஒரு பகுதியாக, காணாமல் போனோரினதும் காணாமல் ஆக்கப்பட்டவர்களினதும் மற்றும் அவர்களது குடும்பங்களினதும் உரிமைகளைப் பாதுகாத்தல். | | |
| **முக்கிய விளைவுகள்** எதிர்காலத்தில் மீண்டும் மக்கள் காணாமல் போவதனை மற்றும் காணாமல் ஆக்கப்படுவதனை தடுத்தலும் காணாமல் போனவர்களின், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உரிமையை பாதுகாத்தலும் | **விளைவு 1: இலக்குடைய தடுப்பு நடவடிக்கைகள்** குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் பெரியவர்கள் மீண்டும் மீண்டும் காணாமல் போகும் சந்தர்ப்பங்களில் தடுப்பு உத்திகள், கல்வி, வேலை மற்றும் ஆரம்பகால தலையீடு ஆகியயவற்றின் மூலம் காணாமல் போகும் நபர்களின் எண்ணிக்கையை குறைத்தல். | **விளைவு 2: பாதுகாப்பு பொறிமுறைகள்** குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் பெரியவர்கள் காணாமல் போகும் சந்தர்ப்பங்களில் இடர்நேரவை அடிப்படையாகக் கொண்ட பதிலை சம்பந்தப்பட்ட முகவர்களுக்கு வழங்குவதன் மூலம் உள்நாட்டு மற்றும் தேசிய அளவில் வழக்குகளை விரைவாக முடிக்க இணைந்து பணியாற்றும் நபர்களைக் கண்டறிவதன் மூலமும் காணாமல் போகும் நபர்களுக்கு தீங்கு நேரும் அபாயத்தை குறைத்தல். | **விளைவு 3: நிவாரண தெரிவுகளை வழங்குதல்** காணாமல் போன ஆட்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் எப்படி மற்றும் எங்கு உதவியையும் ஆதரவையும் எதிர்பார்க்க முடியும் என்பதை உறுதிசெய்வதுடன் உடனுக்குடன் இத்தகைய மேற்கோள்களை எடுத்துக்காட்டி காணாமல் போன ஆட்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கான ஆதரவு மற்றும் வழிகாட்டுதல்களை வழங்குதல். |

6. காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் பிரசன்னம்

OMP தனது தலைமையகத்தை கொழும்பில் கொண்டுள்ள அதேவேளை பிராந்திய மற்றும் துணை பிராந்திய அலுவலகங்களையும் நாடு முழுவதிலும் கொண்டு தனது செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றது. OMP 12 பிராந்திய அலுவலகங்களை நிறுவுவதற்கு கடமைப்பட்டுள்ள நிலையில் அவற்றில் அறிக்கையிடற் காலப்பகுதியில் கிளிநொச்சியில் நிறுவப்பட்ட அலுவலகம் உள்ளடங்களாக தற்போது ஐந்து பிராந்திய அலுவலகங்களைக் கொண்டுள்ளது.




பிராந்திய அலுவலகங்கள்

1. **யாழ்ப்பாணம்-** மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம். தொலைபேசி இலக்கம்: 021-2219400
2. **கிளிநொச்சி-** A9 வீதி, நீதிமன்றிற்கு அருகாமையில், கிளிநொச்சி. தொலைபேசி இலக்கம்: 021-2286030
3. **மன்னார்-** மாவட்ட செயலகம், மன்னார். தொலைபேசி இலக்கம்: 023-2222083
4. **மட்டக்களப்பு-** பழைய மாவட்ட செயலக கட்டிடம், கோட்டை வீதி, மட்டக்களப்பு. தொலைபேசி இலக்கம்: 065-2224532/065-2224534/065-2224339
5. **மாத்தறை-** இல.54, தர்மராம வீதி, மாத்தறை. தொலைபேசி இலக்கம்: 041-222 4046

## 7. நிகழ்ச்சித் திட்ட ரீதியான இற்றைப்படுத்தல்

2022 ஆம் ஆண்டிற்கான மூலோபாயத் திட்டத்தை மறுபரிசீலனை செய்த பின்னர், தவிசாளர் மற்றும் நிருவாக சபையின் வழிகாட்டுதலின் கீழ், OMP, 2022 ஆம் ஆண்டிற்கான OMP இன் நிகழ்ச்சித்திட்ட உத்தியாக பின்வருவனவற்றை வடிவமைத்துள்ளது.

- தடுப்பு நடவடிக்கைகள்- குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் பெரியவர்கள் மீண்டும் மீண்டும் காணாமல் போகும் சந்தர்ப்பங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் ஆரம்பத்திலேயே தலையிடுவதன் மூலம் காணாமல் போகும் நபர்களின் எண்ணிக்கையைக் குறைத்தல்.
- பாதுகாப்பு பொறிமுறைகள்- காணாமல் போனவர்களைக் கண்டுபிடிப்பதற்கும், உள்ளூர் மற்றும் தேசிய மட்டங்களில் வழக்குகளை விரைவாக முடிப்பதற்கும்இலக்குடன் கூடிய இடர்நேர்வு குறித்த முன்னெச்சரிக்கையுடன் உள்ளூர் முகவர்கள் நடவடிக்கைகளை வழங்குவதை உறுதி செய்வதன் மூலம், காணாமல் போனவர்களுக்கு தீங்கு நேரும் அபாயத்தைக் கட்டுப்படுத்துகின்ற வகையிலான பாதுகாப்பு நடவடிக்கைகள்.
- நிவாரண பொறிமுறைகளை வழங்குதல் - காணாமல் போனவர்களும் அவர்களது குடும்பத்தினரும் உதவி மற்றும் ஆதரவை எப்படி, எங்கு பெறுவது என்பதைப் புரிந்துகொள்வதை உறுதிசெய்வதுடன் உடனுக்குடன் இத்தகைய மேற்கோள்களை எடுத்துக்காட்டுவதன் மூலம் காணாமல் போனவர்களுக்கு ஆதரவு மற்றும் வழிகாட்டுதலை வழங்குதல்

OMP க்கு கிடைத்த அதிகரித்த ஆதரவும், இலங்கையிலும் வெளிநாட்டிலும் உள்ள பல அரச சாரா நிறுவனங்களுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களும், ஆண்டு முழுவதும் OMP கைக்கொண்ட மேற்கூறிய முன்நகர்வுகளுக்கான சான்றாகவுள்ளது.

## 8. சட்டம், கொள்கை மற்றும் ஆராய்ச்சி பிரிவு

சட்டம், கொள்கை மற்றும் ஆராய்ச்சி பிரிவின் முக்கிய செயற்பாடு, பூர்வாங்க விசாரணை செயன் முறைகளைத் தொடங்குவதாகும். அலுவகத்தின் கடப்பாட்டில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பூர்வாங்க விசாரணை நடைமுறைகளின்படி, காணாமல் போன ஆட்களின் உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாப்பதில் உதவுதல், காணாமல் போன ஆட்கள் பற்றிய சம்பவங்களை நிவர்த்தி செய்வதற்கு தொடர்புடைய அதிகாரிகளுக்கு பரிந்துரைகளை வழங்குதல், கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தேவையான உதவியை பிற அரச அதிகாரிகளிடமிருந்து கோருதல், மேலும் மனித புதைகுழி வழக்குகள் தொடர்பாக ஒரு பார்வையாளராக செயல்படுதல் போன்ற விடயங்களை சட்டம், கொள்கை மற்றும் ஆராய்ச்சி பிரிவு மேற்கொள்கின்றது.

முதலாம் கட்டத்துடன் தொடர்புடைய காணாமல் போன ஆட்கள் பற்றிய வழக்குகளுக்கான பூர்வாங்க விசாரணை செயன்முறையை பூரணப்படுத்துவதற்கு சட்டம், கொள்கை மற்றும் ஆராய்ச்சி பிரிவு முழு முயற்சியையும் மேற்கொண்டுள்ளது. 2024 ஆம் ஆண்டில் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் அனைத்து துணை பிராந்திய இடங்களையும் மற்றும் தலைமை அலுவலகத்தையும் உள்ளடக்கிய, முதலாம் கட்டத்தைச் சேர்ந்த காணாமல் போன ஆட்கள் பற்றிய முன்கொண்டுவரப்படாத வழக்குகள் மற்றும் புதிய வழக்குகளை நிவர்த்தி செய்வதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. முதலாம் கட்டத்துடன் தொடர்புடைய மேற்கூறிய காணாமல் போன ஆட்கள் பற்றிய வழக்குகளை தீர்த்துவைப்பதற்காக, முன்னர் நடைபெற்ற விசாரணை செயன்முறைகளுக்கு மீண்டும் மீண்டும் சமுகம் தராதிருந்த விண்ணப்பதாரர்களை

இந்தப் பிரிவு வினைத்திறனான வகையில் தொடர்புகொண்டது. இப்பாரிய முயற்சியின் காரணமாக, காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலத்தினால் 1,227 முறைப்பாடுகள் தொடர்பிலான பூர்வாங்க விசாரணையை வெற்றிகரமாக முடிக்க முடிந்தது. மேலும், மீண்டும் மீண்டும் சமுகமளிக்கப்படாத முறைப்பாடுகள் சுமார் 1,000 இருப்பதால், எதிர்காலத்தில் முதலாம் கட்டத்தைச் சேர்ந்த காணாமல் போன ஆட்கள் பற்றிய வழக்குகளின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கான வாய்ப்பு அதிகளவில் உள்ளது.

விண்ணப்பதாரர்கள் பங்கேற்கக்கூடிய வகையில் விசாரணை செயன்முறையை மிக இலகுவில் அணுகக்கூடியதாகவும் வசதியானதாகவும் மாற்றும் நோக்கத்திற்காக, அவர்கள் வசிக்கும் இடங்களுக்கு அருகில் அமைந்துள்ள மாவட்ட மற்றும்/அல்லது பிரதேச செயலகங்களில் விசாரணைகளை நடத்த இந்தப் பிரிவு முயற்சிகளை மேற்கொண்டது. விசாரணை செயன்முறையை வெற்றிகரமாக நிறைவேற்றுவதை உறுதி செய்வதற்காக, அனைத்து மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களும் முன்னர் வருகை தராத விண்ணப்பதாரர்களுக்கு முதற்கட்ட விசாரணையின் திததி மற்றும் இடம் குறித்து அவர்களின் தொடர்புடைய கிராம அலுவலர் அலுவலகங்கள் மூலம் அறிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன.

மேலும், OMP இன் ஆணைக்குள் வந்தும் இன்னும் முறைப்பாடுகளை வழங்காதவர்களை காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தில் முறைப்பாடுகளை முன்வைக்குமாறு பொதுமக்களை கேட்டு அனைத்து கிராம சேவையாளர் அலுவலகங்களிலும் அறிவித்தல்கள் ஒட்டப்பட்டன. அதே போல், சட்டம், கொள்கை மற்றும் ஆராய்ச்சி பிரிவானது, காணாமல் போன ஆட்கள் பற்றிய வழக்குகளை நிவர்த்தி செய்வதில் எதிர்வரும் ஆண்டுகளில் தங்களின் அர்ப்பணிப்புடன் கூடிய பணியைத் தொடர விரும்புகிறது.

2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சட்டத்தின் பிரிவு 12(ஈ) இன் படி, மனித புதைகுழி வழக்குகளில் கண்காணிப்பாளராக OMP செயலாற்றுவதற்கான தகைமையை கொண்டுள்ளது. மேலும், சட்டத்தின் பிரிவு 13 ஓ (iii) இன் படி, அடையாளம் காண முடியாத மற்றும் அடையாளம் காணக்கூடிய எச்சங்கள் தொடர்பாக தொடர்புடைய அதிகாரிகளுக்கு பரிந்துரைகளை வழங்க OMP அதிகாரம் பெற்றுள்ளது. இந்த இலக்குகளை அடைய, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, மட்டக்களப்பு மற்றும் கொழும்பு மாவட்டங்கள் உட்பட 14 மனித புதைகுழி வழக்குகளில் OMP ஒரு கண்காணிப்பாளராகச் செயற்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து, துறைமுக நகரம், கொழும்பில் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழி தளம் தொடர்பிலும் ஒரு பார்வையாளராகப் பணியாற்றி வருகிறது. மேற்கூறிய அதிகாரம் நீதித்துறை மருத்துவ அதிகாரிகள், சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் தேசிய சுவடிக் காப்பகத் திணைக்களத்துடன் இணைந்து வினைத்திறனான வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் அரச செயற்பாட்டாளர்கள் மற்றும் சிவில் அமைப்புகளுடன் இணைந்து தனது கூட்டாண்மையை OMP திறம்பட மேம்படுத்தியுள்ளது.

### 8.1 விசாரணைச செயல்முறை

விசாரணைக்காக கோப்புகளை ஒப்படைப்பதற்கு முன், அந்த வழக்குகள் OMP இன் விடயப்பரப்புக்கு உட்பட்டதா என்பதை சரிபார்ப்பதற்காக பாதுகாப்பு பிரிவு பதிவு செய்யப்படாத கோப்புகளை சட்டம், கொள்கை மற்றும் ஆராய்ச்சி பிரிவுக்கு சமர்ப்பிக்கிறது. கோப்புகளில் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களுக்கமைய, 2016 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க OMP சட்டத்தின் பிரிவு 27 இல் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளபடி குறிப்பிட்ட வழக்கு அலுவலகத்தின்

விடயதானங்களிற்கு உட்பட்டதா என்பதை பிரிவுபரிசீலிக்கிறது. இந்தச் செயன்முறையின் போது வழக்கு விடயப்பரப்பிற்குள் வருகிறதா என்பது குறித்து பரிசீலிக்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட வழக்கு அலுவலகத்தின் வரையறுக்கப்பட்ட விடயப்பரப்புக்கு அப்பாற்பட்டதாக உள்ளமை தெளிவாகுமாயின், அது விடயப்பரப்புக்கு அப்பாற்பட்ட ஒன்றாகக் கருதப்படுகிறது. இருப்பினும், அது விடயப்பரப்பிற்குள் வருகிறதா என்பதில் ஏதேனும் சந்தேகம் இருந்தால், அது விடயப்பரப்பிற்குட்பட்டது என்று அடையாளம் காணப்படுகிறது.

அனைத்து விசாரணை செயன்முறைகளும் சட்டம், கொள்கை மற்றும் ஆராய்ச்சிப் பிரிவால் ஒழுங்கமைக்கப்பட்டு நடத்தப்படுகின்றன. பொதுவாக விசாரணைக் குழு 3 நிபுணர்களைக் கொண்டுள்ளதுடன் குழு உறுப்பினர்கள் வெளிப்படைத்தன்மை பேணும் விதிமுறைக்கமைய சபையின் தீர்மனத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஒரு முனைப்பான விசாரணையின் போது, தேர்ந்தெடுக்கப்பட்ட விசாரணைக் குழு காணாமல் போன நபரின் வழக்கைக் கருத்தில் கொண்டு, விண்ணப்பதாரர் சமர்ப்பித்த ஆவணங்களை பரிசீலித்து, விண்ணப்பதாரர் மற்றும் சாட்சியின் இரகசிய வாய்மொழிக் கூற்றுக்களை மறுபரிசீலனை செய்கிறது. இரகசிய கூற்றுக்களை வழங்கும் போது விண்ணப்பதாரரின் கோரிக்கைகள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில், ஒவ்வொரு வழக்குக்கும் பொருத்தமான பரிந்துரைகளை வழங்குவது தொடர்பில் இறுதியான முடிவுக்குவருகின்றது.

மேலும், விசாரணை செயற்பாட்டின் போது ஒரு குறிப்பிட்ட காணாமல் போன ஆட்கள் பற்றிய முறைப்பாட்டில் ஏதேனும் சட்ட ரீதியான சிக்கல்கள் தென்பட்டால், அவற்றைத் தீர்த்துவைப்பதற்காக சட்டப் பிரிவுக்கு குறித்த கோப்பு அனுப்பி வைக்கப்படுகிறது. நடைமுறையிலுள்ள சட்டப் பிரச்சினைகள் கவனமாக மதிப்பீடு செய்யப்பட்டு ஆராயப்படுகின்றன. இந்தப் பிரச்சினைகள் தீர்த்துவைக்கப்பட்ட பின்னர், நிறுவனத் தலைவரால் அங்கீகரிக்கப்பட்ட அறிக்கையுடன் சட்ட ரீதியான பிரச்சினைகள் முடிவுக்குக் கொண்டுவரப்படுகின்றன.

அதன்படி, விசாரணையின் போது காணாமல் ஆக்கப்படும் சம்பவங்கள் குறித்து OMP இன் விடயப் பரப்புக்குட்பட்ட வகையில் பின்வரும் 3 வகையான அம்சங்கள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன:

1. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நடந்த அல்லது நடந்த மோதலின் விளைவாக அல்லது அதற்கு பின்னர் ஏற்பட்ட சம்பவங்களின் விளைவாக, அல்லது ஆயுதப்படைகள் அல்லது காவல்துறையின் உறுப்பினராக "இராணுவ நடவடிக்கையின் போது காணாமல் போனவர்" என்று அடையாளம் காணப்படுதல் அல்லது

2. அரசியல் அமைதியின்மை அல்லது உள்நாட்டுக் கலவரங்கள் தொடர்பாக காணாமால் போனமை அல்லது

3. "வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்படுவதிலிருந்து அனைத்து நபர்களையும் பாதுகாத்தல் பற்றிய சர்வதேச சமவாயத்தில்" வரையறுக்கப்பட்டுள்ளபடி வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்படுதல் என்ற அடிப்படையில்

விசாரணை செயன்முறைகள் முடிவடைந்த பிறகு, காணாமல் போன ஆட்கள் தொடர்பான வழக்குக் கோப்புகளில் உள்ள தகவல்கள் சட்டப் பிரிவின் தரவுத்தளத்தில் பதியப்பட்டு, முறைப்படி குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளைத் கொண்டுநடாத்த VFSO பிரிவுக்கு ஒப்படைக்கப்படும்

### 8.2 சவால்கள்

விசாரணை முடிந்த உடனே விண்ணப்பதாரர்கள் உடனடி நிவாரணத்தை எதிர்பார்க்கின்ற போதிலும், உள்ளடக்கங்களை மதிப்பாய்வு செய்து, பொருத்தமான பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கு கணிசமான நேரம் எடுப்பதன் காரணமாக, அலுவலகம் இதற்கு பதிலளிக்க மிகுந்த சிரமத்தை எதிர்நோக்குகின்றது. பணிச்சுமையை நிர்வகிக்க அலுவலகத்தில் பணியாளர்கள் பற்றாக்குறையாக இருப்பதே இதற்கு முக்கிய காரணமாகும்.

முக்கிய சவால்களில் ஒன்று, OMP சட்டத்தின் பிரிவு 27 உடன் இணங்காததால் பரிந்துரைகளை வழங்குவதற்கு இயலாத கணிசமான எண்ணிக்கையிலான விடயப்பரப்புக்கு அப்பாற்பட்ட வழக்குகள் OMP-க்கு பரிந்துரைக்கப்படுதலாகும். எனவே, OMP சட்டத்தின் பிரிவு 12 (ஏ) இன் படி அந்தந்தக் கோப்புகளை தொடர்புடைய சட்ட அமுலாக்க அதிகாரிகளுக்கு அனுப்ப OMP முடிவு செய்துள்ளது. அதன்படி, விடயப்பரப்புக்கு அப்பாற்பட்ட வழக்குகளை மேலதிக சட்ட உதவிக்காக சட்ட உதவி ஆணைக்குழுவிற்கு பரிந்துரைப்பது குறித்து சட்டப் பிரிவு சட்ட உதவி ஆணைக்குழுவுடன் முதல் சுற்று கலந்துரையாடலை நடத்தியது. அதிர்ட்டவசமாக, முதல் சுற்று கலந்துரையாடல்கள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளன. தற்போது, விடயப்பரப்புக்கு அப்பாற்பட்ட வழக்குகளின் விண்ணப்பதாரர்களுக்கு உதவி வழங்குவதற்காக, சட்ட உதவி ஆணைக்குழுவின் எதிர்கால ஒத்துழைப்புகள் தொடர்பாக பணித்திட்டம் மற்றும் செயற்றிட்டங்கள் வகுக்கப்படுகின்றன. சட்டப் பிரிவு எதிர்கொள்ளும் மற்றொரு முக்கிய சவால் ஆட்கொணர்வு வழக்குகளைப் பின்தொடர்வது ஆகும். காணாமல் போன ஆட்கள் பற்றிய சம்பவங்கள் தொடர்பான ஆட்கொணர்வு வழக்குகள் நீதிமன்றங்களில் விசாரிக்கப்படுகின்றன. ஆனால் இந்த வழக்குகளில் பல OMP க்கு அறிக்கையிடப்படுவதில்லை. எனவே, வழக்குகளைப் பற்றிய தற்போதைய நிலையை அறிந்துகொள்ள தகவல்களைச் சேகரிப்பதில் அதிக நேரம் செலவிட வேண்டியகட்டாயம்ஏற்படுகிறது.

விசாரணை நடத்துவது தொடர்பாக இந்த நேரத்தில் OMP எதிர்நோக்கும் மற்றொரு சவாலானது, விசாரணை நடைபெறும் சில இடங்களுக்கு முன்னால், முறைப்பாட்டுக்காரர்கள் விசாரணையில் பங்கேற்பதைத் தடுக்க கடுமையாக முயற்சிக்கும் தனிநபர்கள் மற்றும் குழுக்கள் நடத்திய தொடர் போராட்டங்கள் ஆகும். இருப்பினும், அமைதியான பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு இந்த போராட்டங்களுக்கு மத்தியில் விசாரணை செயன்முறைகள் நடத்தப்பட்டன.

மேலும், சில முறைப்பாட்டுக்காரர்கள் ஆவணப்படுத்துவதில் உள்ள தேவைகளைப் பூர்த்தி செய்யத் தவறியதன் விளைவாக முறைப்பாட்டை வலுப்படுத்த போதுமான துணை ஆவணங்கள் இல்லை என்பதை OMP இனங்கண்டுள்ளது.

### 8.3 இதுவரையிலான முன்னேற்றம்

OMP இடத்தில் கோப்பிடப்பட்ட காணாமல் போனோர் தொடர்பான முறைப்பாடுகள் அவர்கள் காணாமல் போன நேரத்தின் அடிப்படையில் 3 கட்டங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இதில் 7,604 முறைப்பாடுகள் முதல் கட்டத்தின் கீழ் வருகின்றன. 31.12.2024 ஆந் திகதி வரையில், மொத்தம் 6,449 விசாரணைகள் நிறைவுபெற்றுள்ளன, அவற்றில் 1,227 விசாரணைகள் 2024 ஆம் ஆண்டிற்குள் மேற்கொள்ளப்பட்டன. மொத்தமாக, 864 வழக்குகள் பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்திற்கு பரிந்துரைக்காக அனுப்பப்பட்டுள்ளன, அதில் 727 வழக்குகள் COA க்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதுடன், 137 வழக்குகள் COD க்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளன, விசாரணையின் முடிவில், 1,078 வழக்குகள் இழப்பீட்டு அலுவலகத்திற்கு இழப்பீடு செலுத்துவதற்கான பணத்திற்காக பரிந்துரைகளுடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. விசாரணை

முடிவடைந்த 226 கோப்புகள் மேலதிக விசாரணைக்கான பரிந்துரைகளுடன் தடயவியல் பிரிவுக்கு பரிந்துரைக்கப்பட்டன. முதலாம் கட்டத்தின் கீழ் வரும் காணாமல் போனவர்களின் மரணத்தை COD இல் சுட்டிக்காட்டப்பட்டபடி உறுதிப்படுத்துவது குறித்த ஆராய்ச்சியை தற்போது நாங்கள் நடத்தி வருகிறோம். அதன்படி, கட்டம் 1க்கான விசாரணைகளை நடத்துவதற்கான இறுதி கட்டத்தை அடைந்துள்ளோம், மேலும் கட்டம் 2க்கான விசாரணைகளை நடத்துவதற்கான அனுமதியைப் பெற நீதி அமைச்சிற்கு ஒரு கோரிக்கை கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மேலும், தென் மாகாணத்தின் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில், வரவிருக்கும் விசாரணை அமர்வுகளை மையமாகக் கொண்ட அரச அதிகாரிகளுக்கான ஒரு விழிப்புணர்வு நிகழ்ச்சி வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இது அரச அதிகாரிகளுக்கு எங்களால் நடாத்தப்பட்ட முதலாவது நிகழ்ச்சி நிரலாகும், இதில் மொத்தம் 60 அரச அதிகாரிகள் கலந்து கொண்டனர். காணாமல் போன ஆட்கள் தொடர்பான கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளவும் வேலைசெய்யும் அனுபவத்தை பெற்றுக்கொள்ளவும் OMP ஊழியர்கள் மற்றும் அரச அதிகாரிகளுக்கு இது ஒரு நல்ல தளமாக அமைந்தது. எனவே, எதிர்வரும் ஆண்டுகளில் அதிகாரத்திற்குட்பட்ட வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், தமது கடமைகளை திறம்பட புரிவதற்கும் OMP தனது அர்ப்பணிப்புடனான முயற்சிகளைத் தொடர விரும்புகிறது.


மேலும், விடயப்பரப்புக்கு அப்பாற்பட்ட வழக்குகளுக்கான உதவியை வழங்குவது தொடர்பாக சட்ட உதவி ஆணைக்குழுவுடன் ஏற்கனவே ஒரு MoU வரையப்பட்டுள்ளது. இது எதிர்காலத்தில் கைச்சாத்திடத்திட்டமிடப்பட்டுள்ளது.

### 8.4 மனிதப்புதைகுழி

இலங்கை உள்நாட்டுப் போர் உத்தியோகபூர்வமாக 1983 இல் தொடங்கி 2009 வரை மூன்று தசாப்தங்களாக நீடித்தது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழ் சிறுபான்மையினருக்கு ஒரு சுதந்திர அரசை நிறுவுவதை பிரச்சாரம் செய்த தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் (LTTE) கிளர்ச்சிக் குழுவிற்கு எதிராக சிங்கள பெரும்பான்மை கொண்ட இலங்கை அரசாங்கம் இந்த போராட்டத்திற்கு எதிராகக் களமிறக்கியது. இந்த மோதல் உத்தியோகபூர்வமாக ஜுலை 1983 இல் தொடங்கியது, அந்த மாதம் கொழும்பில் தமிழர்களை குறிவைத்து வன்முறை கலவரங்கள் நிகழ்ந்தன, பின்னர் இது “கறுப்பு ஜுலை” என்று அழைக்கப்பட்டது. மூன்று தசாப்தங்களாக நீடித்த இப்போராட்டம் அரசாங்க பாதுகாப்புப் படைகள் LTTE தலைவரைக் கொன்றதாக அறிவித்தவுடன் மே 2009 இல் முடிவுக்கு வந்தது. மோதல் முடிவடைந்து பத்து ஆண்டுகளுக்கும் மேலாகியும், பல பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் உள்ளன. இவற்றில் ஒன்று தீவில் கண்டுபிடிக்கப்பட்ட அதிக எண்ணிக்கையிலான புதைகுழிகள் ஆகும். 2014 ஆம் ஆண்டில், ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கை 28 மனித புதைகுழிகள் இருப்பதைப் பட்டியலிட்டது, அதன் பின்னர் இன்னும் 4 மனித புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மனிதப் புதைகுழிகளில் உள்ள சிலர் வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்று பெரும்பாலும் சந்தேகிக்கப்படுகிறது. வலுக்கட்டாயமாக அல்லது தன்னிச்சையின்றிக் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் செயற்குழுவில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையில் இலங்கை உலகில் இரண்டாவது இடத்தில் உள்ளது. 1983 ஆம் ஆண்டு போர் தொடங்கியதிலிருந்து 14,988 பேர் வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டதாக இதில் மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த விசாரணைகள் காணாமல் ஆக்கப்பட்டவர்களின்

குடும்பங்களுக்கு தேவையான பதில்களை வழங்குவதுடன் போரின் போது இடம்பெற்ற மனித வன்முறைகளில் அரசாங்கத்தின் சாத்தியமான பொறுப்பையும் தெளிவுபடுத்தும். 32 மனித புதைகுழிகள் பட்டியலிடப்பட்டிருந்தாலும், சூரியகந்த, செம்மனி யாழ்ப்பாணம், மாத்தளை, களுவாஞ்சிகுடி, மன்னார் மற்றும் கொக்குத்தொடுவாய் ஆகிய இடங்களில் உள்ள ஏழு மனித புதைகுழிகள் மாத்திரமே தோண்டப்பட்டுள்ளன.




**<u>மனித எச்சங்கள் தொடர்பாக OMP ஆல் கண்காணிக்கப்பட்ட நீதிமன்ற வழக்குகள்.</u>**

| நீதிமன்றம் | புதைகுழி அமைவிடம் |
|---|---|
| மன்னார் நீதவான் நீதிமன்றம் | சதோச கட்டிடம் |
| | திருக்கேதீஸ்வரம் |
| முல்லைதீவு நீதவான் நீதிமன்றம் | புதுக்குடியிருப்பு |
| | சுதந்திரபுரம் |
| | மாங்குளம் |
| | ஒட்டுசுட்டான் |
| கிளிநொச்சி நீதவான் நீதிமன்றம் | பளை |
| | பளை 2 |
| களுவாஞ்சிகுடி நீதவான் நீதிமன்றம் | குருக்கள்மடம் |
| முல்லைத்தீவில் இயங்கி வரும் வட மாகாண நீதவான் நீதிமன்றம் | கொக்குத்தொடுவாய் |
| கொழும்பு நீதவான் நீதிமன்றம் | துறைமுக நகர மனித புதைகுழி வழக்கு |
| வவுனியா மேல் நீதிமன்றம் | மீளாய்வு விண்ணப்பம் (குடிமக்கள் பங்கேற்பு) |

i. கொழும்பு துறைமுக நகர மனித புதைகுழித் தளம்

2025 ஜனவரி 27 மற்றும் 2025 பெப்ரவரி 13 ஆகிய திகதிகளில் 2 ஆம் கட்ட அகழ்வாராய்ச்சி தொடங்கப்பட்டது. துறைமுக நகரத் திட்டத்திற்குத் தேவையான வளாகம் ஒப்படைக்கப்பட்டது. கொழும்பு நீதவான் மேற்பார்வையின் கீழ் பிரதான புதைகுழி தளத்தில் இன்னும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ii. கொகுத்தொடுவாய் மனித புதைகுழி தளம்

இது தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்க சட்ட வைத்திய அதிகாரி இரண்டு மாத கால அவகாசத்தை நீதவான் நீதிமன்றிடம் பெற்றுக்கொண்டதுடன், அடுத்த தவணை 27.02.2025 ஆகும்.

iii. மன்னார் சதோச மனித புதைகுழி தளம்

வைத்தியர் பிரணவனின் மேற்பார்வையின் கீழ் அனைத்து மனித எச்சங்களையும் யாழ்ப்பாணத்திற்கு அனுப்ப நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதுடன் ஆய்வகப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு நீதவான் நீதிமன்றத்தின் மூலம் நீதி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட உள்ளது. அடுத்த தவணை 12.03.2025 ஆகும்.

iv. மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி தளம்

DHL/கட்டுக்காவல் சங்கிலியின் மூன்றாம் தரப்பினர் மூலம் மாதிரிகளை அனுப்புவதற்கான கொள்முதல் கொள்கையை நீதிமன்றம் சரிபார்த்து, 12.03.2025 அன்று தீர்மானம் மேற்கொள்ளப்படும். மேலும், மாவட்டச் செயலக அலுவலகம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியன மேலதிக நடவடிக்கைகளுக்காக 06 மாத கால அவகாசம் கோரியுள்ளன.

## 9. தரவு முகாமைத்துவப் பிரிவு

காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான முறைப்பாடுகளைப் பெறவும், தரவுகளை ஒருங்கிணைக்கவும், தகவல்களைக் உள்ளடக்கிய ஒரு தரவுத்தளத்தை நிறுவுவதற்குமான அதிகாரத்தை OMP கொண்டுள்ளது. இதன் காரணமாக, காணாமல் போனவர்கள் பற்றிய கோப்புகள் தொடர்பான விடயங்களைக் கையாளவும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட விடயங்களைக் கையாளுவதற்கும் வழிகாட்டுதல் குழு மற்றும் தொழில்நுட்ப செயற்குழு ஆகியவை நிறுவப்பட்டுள்ளன. வழிகாட்டுதல் குழுவின் விளைவாக, ICRC இன் தரவுத்தளத்தை செயற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை மதிப்பிடுவதற்காக ஜனாதிபதி செயலாளரால் ஒரு தொழில்நுட்பக் குழு நியமிக்கப்பட்டதுடன் தற்போது கலந்துரையாடல்கள் ICRC மற்றும் OMP உடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி, ICRC ஆனது OMP உடன் MoU மற்றும் உரிம ஒப்பந்தத்தைப் நிறைவேற்றியுள்ளதுடன் தொழில்நுட்ப பணிக்குழுவின் கருத்துகளின் அடிப்படையில் ஆராய்ந்ததன் பின்னர் OMP நிருவாக சபையானது உரிம ஒப்பந்தத்தை அங்கீகரித்து வெளியுறவு அமைச்சு அல்லது நீதி அமைச்சிற்கு அதை அனுப்பியுள்ளது. எனினும், தரவுத்தள முகாமைத்துவ முறைமையை அமைப்பதற்கு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதைவிரைவுபடுத்தவேண்டும்.

ICRC மற்றும் UN இன் உதவியுடன், பல மூலங்களில் இருந்து பெறப்பட்ட தகவல்களை OMP தொடர்ந்து செயன்முறைக்குட்படுத்தி, சரிபார்த்து, தரவுத்தளத்தில் உள்ளீடு செய்தும் வருகின்றது. அதே நேரத்தில், OMP குடும்பங்களுடன் தொடர்பு கொண்டு, காணாமல் போன அல்லது காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுள்ளதனை ஏற்றுக்கொண்டுள்ளது. மேலும், முதல் முறையாக, காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்கள் தொடர்பாக கிடைத்த முறைப்பாடுகள் மற்றும் தகவல்களின் பட்டியலை வெளியிடுவதன் மூலம், காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்கள் தொடர்பான சம்பவங்கள் தொடர்பாக தொகுக்கப்பட்ட தகவல்களை OMP பகிரங்கமாகப் பகிர்ந்து கொண்டது. மேலும், மேலதிக தகவல்களை வழங்குவதன் மூலம் தரவுத்தளத்தை மேம்படுத்த உதவுமாறும், காணாமல் போனவர்கள் பற்றிய கோப்பு பட்டியலிடப்படவில்லையெனில் அதனை அறிக்கையிடுமாறும்குடும்பத்தினரைக்கேட்டுக் கொண்டது.

2024 டிசம்பர் மாதம் வரையிலான நிலவரப்படி, காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கு (OMP) நேரடியாக சமர்ப்பிக்கப்பட்ட கணிசமான அளவிலான முறைப்பாடுகளை கிட்டத்தட்ட மொத்தமாக 23,374 முறைப்பாடுகளை தரவுத்தளம் பதிவு செய்கிறது. இந்த நேரத்தில், பிரதானமாக தரவுத்தளத்திற்குள் நிலைத்தன்மையை நிலைநிறுத்தவும், அனைத்து முறைப்பாடுகளும் உட்படுத்தப்படும் விசாரணை செயன்முறையைத் தொடங்கவும் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்வது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. காணாமல் போன அல்லது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் அல்லது உறவினர்களால் ஏற்படும் துரதிர்ஷ்டவசமான சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு நீதி வழங்குவதற்கான OMP இன் முயற்சியை எளிதாக்குவதை இந்த நடைமுறை படிமுறை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தத் தரவுகளுக்குள் தரவு முகாமைத்துவ பிரிவு (DMU) 6,386 வழக்குகளை உன்னிப்பாகக் கண்டறிந்து அவற்றை இராணுவ நடவடிக்கையின் போது காணாமல் போனவர்கள் (MIA) அல்லது OMP இன் அதிகார எல்லைக்குள் வராத போலிகள்/வழக்குகள் என வேறுபடுத்திவகை ப்படுத்தியுள்ளது.

தரவு முகாமைத்துவ பிரிவின்(DMU) செயல்பாடுகள் முதன்மையாக தரவுத்தளத்தின் துல்லியமான ஒழுங்கமைப்பு, வகைப்படுத்தல் மற்றும் பராமரிப்பில் கவனம் செலுத்தும் நிர்வாக செயற்பாடுகளுடன் தொடர்புடையது. இது புலனாய்வு செயன்முறையின் வழியாக தனிப்பட்ட முறைப்பாடுகளின் நிலை மற்றும் முன்னேற்றம் தொடர்பில் தொடர்ச்சியாக தகவல்களை வழங்குவதுடன் ஒவ்வொரு தரவு உள்ளீட்டிற்குமான துல்லியத்தன்மை மற்றும் முழுமைத் தன்மை ஆகியவற்றைசரிபார்ப்பதையும்உள்ளடக்குகிறது.

இந்த முறைப்பாடுகள் தொடர்பில் விரைவாக தீர்மானித்தல், தரவு முகாமைத்துவ பிரிவு மற்றும் சட்டப் பிரிவு ஆகியவற்றுக்கு தங்கள் விசாரணை செயன்முறைகளை உடனடியாகத் தொடங்குவதற்கான வாய்ப்பை வழங்கியுள்ளது. அதன்படி, இராணுவ நடவடிக்கையின் போது காணாமல் போனமை தொடர்பாக மாறிமாறி மேற்கொள்ளப்பட்ட ஒரே வகையான முறைப்பாடுகள் மற்றும் அவற்றை தரவுத் தளத்தில் உள்ளீடு செய்துள்ளமை போன்றவற்றை நீக்கம் செய்த பின்னர் மொத்தம் 16,966 முறைப்பாடுகள் OMP இனால் நேரடியாகப் பெற்றுக்கொள்ளப்பட்டன. எனினும், 31.12.2024 ஆந் திகதியன்று வரையில், பிற மூலங்கள் வாயிலாகப் பெறப்பட்ட முறைப்பாடுகள் உட்பட மொத்தம் 40,266 முறைப்பாடுகளை OMP பெற்றுள்ளது.

| மூலம் | அறிக்கைகளின் எண்ணிக்கை |
|---|---|
| காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக OMP இன் தலைமை அலுவலகத்தில் நேரடியாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் (2018-2024) | 1,377 |
| காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக OMP இன் பிராந்திய அலுவலகங்கள் 4 இலும் நேரடியாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் (2018-2024) | 1,978 |
| காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக MNIR இலிருந்து பெறப்பட்ட அறிக்கைகள். | 14,702 |
| இராணுவ நடவடிக்கையில் காணாமல் போனதாக இலங்கை இராணுவத்தால் அனுப்பப்பட்ட ஆயுதப்படை வீரர்களின் பட்டியல்கள் | 3,752 |
| இராணுவ நடவடிக்கையில் காணாமல் போனதாக இலங்கை கடற்படையால் அனுப்பப்பட்ட ஆயுதப்படை வீரர்களின் பட்டியல்கள் | 452 |
| இராணுவ நடவடிக்கையில் காணாமல் போனதாக இலங்கை விமானப் படையினால் அனுப்பப்பட்ட ஆயுதப்படை வீரர்களின் பட்டியல்கள், | 34 |
| காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக இலங்கை பொலிசாரிடமிருந்து கிடைத்துள்ள அறிக்கைகள் | 5,307 |
| காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக WGEID இடமிருந்து கிடைத்துள்ள அறிக்கைகள் | 12,664 |
| **மொத்தம் – பலதரப்பட்ட நிறுவனங்களுக்கும் ஆணைக்குழுக்களுக்கும் அறிக்கையிடப்பட்டுள்ளவை (சரிபார்க்கப்படவில்லை)** | **40,266** |

மேலும், மாவட்ட வாரியாக பொதுமக்கள் தொடர்பாக OMP-க்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்

**மொத்த முறைப்பாடுகள் 31.12.2024**

| மாவட்டம் | 2000 ஆம் ஆண்டுக்கு முன்னர் இடம்பெற்ற சம்பவங்கள் | 2000 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இடம்பெற்ற சம்பவங்கள் | 2024 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட புதிய முறைப்பாடுகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| மட்டக்களப்பு | 2943 | 1931 | 84 | 4958 |
| கண்டி | 555 | 47 | 2 | 604 |
| திருகோணமலை | 778 | 571 | 51 | 1400 |
| மாத்தறை | 528 | 27 | 22 | 577 |
| அம்பாந்தோட்டை | 382 | 11 | 9 | 402 |
| | 458 | 124 | 15 | 597 |


| | | | | |
|---|---|---|---|---|
| குருநாகல் | 340 | 59 | 1 | 400 |
| மாத்தளை | 267 | 25 | 1 | 293 |
| கம்பஹா | 229 | 40 | 22 | 291 |
| காலி | 257 | 44 | 9 | 310 |
| அநுராதபுரம் | 248 | 25 | | 273 |
| யாழ்ப்பாணம் | 618 | 1791 | 43 | 2452 |
| இரத்தினபுரி | 185 | 44 | 1 | 230 |
| களுத்துறை | 166 | 27 | 10 | 203 |
| பொலந்நறுவை | 276 | 70 | 1 | 347 |
| கொழும்பு | 97 | 42 | 25 | 164 |
| மன்னார் | 127 | 415 | 53 | 595 |
| வவுனியா | 167 | 433 | 40 | 640 |
| கேகாலை | 94 | 17 | | 111 |
| மொனராகலை | 52 | 26 | 2 | 80 |
| புத்தளம் | 57 | 29 | | 86 |
| முல்லைத்தீவு | 66 | 540 | 62 | 668 |
| கிளிநொச்சி | 62 | 1105 | 101 | 1268 |
| நுவரெலியா | 9 | 7 | 1 | 8 |
| பதுளை | 2 | 4 | 3 | 9 |
| **மொத்தம்** | **8963** | **6951** | **558** | **16966** |

**10. பாதிக்கப்பட்டோர் மற்றும் குடும்பங்களுக்கான ஆதரவு வழங்கற் பிரிவு-2024**

காணாமல் போன ஆட்களது குடும்பங்களின் நலனை உறுதி செய்வதற்கான முழுமையான அணுகுமுறையை வழங்க பாதிக்கப்பட்டோர் மற்றும் குடும்பங்களுக்கான ஆதரவு வழங்கற் பிரிவு வடிவமைக்கப்பட்டுள்ளது. காணாமல் போன ஆட்களின் குடும்பங்களுக்கான முதல் தொடர்பு புள்ளியாகவும் இந்த பிரிவு காணப்படுகின்றது. மேலும், இந்த பிரிவு குடும்பத்தினரிடமிருந்து அனைத்து தகவல்களையும் துணை ஆவணங்களையும் பெறுகிறது. மேலும், OMP சட்டத்தின் பிரிவு 13 (1) (உ), (ஊ), (ஒ) மற்றும் (ஓ) இன் படி, மறுமலர்ச்சி கொடுப்பனவுகள், இறப்புச் சான்றிதழ்கள் காணப்படாமைக்கான சான்றிதழ்கள், குடும்ப ஆதரவு மற்றும் உளவியல் ஆதரவு ஆகியவற்றிற்கான தொடர்புடைய நிறுவனங்களுக்கு பரிந்துரைகளை வழங்குவது உட்பட நலன்புரி சேவையை இந்தப் பிரிவு வழங்குகிறது. மேலும் உணர்ச்சி ரீதியான துயரங்களைத் தடுக்கும் உளவியல் சமூக உத்திகளை குடும்பங்கள் மற்றும் ஊழியர்களுக்கு உருவாக்கிக் கொடுப்பதையும் இந்தப் பிரிவு உறுதி செய்கிறது. எனவே, 2024 ஆம் ஆண்டிற்கான பாதிக்கப்பட்டோர் மற்றும் குடும்பங்களுக்கான ஆதரவு வழங்கற் பிரிவின் செயற்பாடுகள் மற்றும் முன்னேற்றம் ஆகியன பின்வருமாறு:

**1. குடும்பம் ஒன்றுடன் / குடும்ப அங்கத்தவர்களுடன் கலந்துரையாடுதல், முறைப்பாடுகளைப் பெறுதல், அம்முறைப்பாடுகளைப் பதிவுசெய்தல்**

1.1 பாதிக்கப்பட்டோர், சாட்சிகள் மற்றும் காணாமல் போன ஆட்களின் உறவுகள் ஆகியோருக்கு உளவியல் சமூக ஆதரவு உட்பட நிருவாக சேவைகள் மற்றும் நலன்புரி சேவைகள் போன்றவற்றையும் வழங்குதல் அல்லது வசதியளித்தல் - இது விடயத்தில் இன் தலைமைக் காரியாலயத்திற்கு சமுகமளித்துள்ள 73 குடும்பங்கள் இவ்வாறு வசதியளிக்கப்பட்டுள்ளன.




**2. காணாமால் போன ஆட்களின் குடும்ப அங்கத்தவர்களாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளவர்களுக்கு கடிதங்கள் அனுப்புதல்**

VFS பிரிவு நீதியமைச்சு, பிரதேச செயலகங்கள், பிராந்திய ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் காணாமல் போன ஆட்களின் குடும்பங்களிடமிருந்து 188 கடிதங்களைப் பெற்றுள்ளது. இப்பிரிவு பெற்றுக்கொண்ட அனைத்து கடிதங்களும் இப்பிரிவின் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒட்டுமொத்தமாக, 2024 ஆம் ஆண்டில், பிரிவு காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு 62 ஏற்புறுதிக் கடிதங்களை அனுப்பியுள்ளது, மேலும் தரவுப் படிவங்களுடன் போதுமான ஆவணங்களைப் பெற 92 கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

**3. விசாரணை மூலம் எட்டப்பட்ட பரிந்துரைகளின் தொகுப்பு**

OMP நடத்திய விசாரணைக்குப் பிறகு, தொகுப்பு அறிக்கைகளைத் தயாரிப்பதில் இப்பிரிவுக்கு திரு. டி.யோகராஜா (நிருவாக சபை உறுப்பினர்) துணைபுரிந்தார். மேலும், விசாரணைகளின் பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கு முன்பு அவ்வறிக்கை நிருவாக சபையின் ஒப்புதலுக்காக அனுப்பப்படுகிறது. 2022 முதல் 2024 வரை மொத்தம் 6,449 வழக்குகள் தொகுக்கப்பட்டுள்ளன. 2024 ஆம் ஆண்டில், மொத்தம் 1,227 வழக்குகள் தொகுக்கப்பட்டு நிருவாக சபையின் ஒப்புதலைப் பெற்றுள்ளன.

2022 முதல் 2024 வரையான தொகுப்பு நடவடிக்கைகள்


| தொடர் இல: | மாவட்டம் | வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 ஆவது தொடர் | யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, மாத்தறை, கொழும்பு | 123 |
| 2 ஆவது தொடர் | யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, மாத்தறை, கொழும்பு | 61 |
| 3 ஆவது தொடர் | மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் | 81 |
| 4 ஆவது தொடர் | மாத்தறை, கொழும்பு | 14 |
| 5 ஆவது தொடர் | யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு | 327 |
| 6 ஆவது தொடர் | கொழும்பு | 18 |
| 7 ஆவது தொடர் | யாழ்ப்பாணம், | 102 |
| 8 ஆவது தொடர் | மட்டக்களப்பு | 302 |
| 9 ஆவது தொடர் | கொழும்பு | 18 |
| 10 ஆவது தொடர் | மாத்தறை | 39 |
| 11 ஆவது தொடர் | யாழ்ப்பாணம் | 123 |
| 12 ஆவது தொடர் | மட்டக்களப்பு | 219 |
| 13 ஆவது தொடர் | யாழ்ப்பாணம் | 123 |
| 14 ஆவது தொடர் | மன்னார் | 104 |
| 15 ஆவது தொடர் | அம்பாரை | 150 |
| 16 ஆவது தொடர் | கிளிநொச்சி | 186 |

| | | |
|---|---|---|
| 17 ஆவது தொடர் | கிளிநொச்சி | 187 |
| 18 ஆவது தொடர் | முல்லைத்தீவு | 54 |
| 19 ஆவது தொடர் | யாழ்ப்பாணம் | 159 |
| 20 ஆவது தொடர் | திருகோணமலை | 258 |
| 21 ஆவது தொடர் | மாத்தறை | 12 |
| 22 ஆவது தொடர் | கொழும்பு | 17 |
| 23 ஆவது தொடர் | யாழ்ப்பாணம் | 81 |
| 24 ஆவது தொடர் | கிளிநொச்சி | 122 |
| 25 ஆவது தொடர் | திருகோணமலை | 126 |
| 26 ஆவது தொடர் | மட்டக்களப்பு | 164 |
| 27 ஆவது தொடர் | கொழும்பு | 11 |
| 28 ஆவது தொடர் | யாழ்ப்பாணம் | 170 |
| 29 ஆவது தொடர் | கிளிநொச்சி | 45 |
| 30 ஆவது தொடர் | முல்லைத்தீவு | 68 |
| 31 ஆவது தொடர் | இரத்தினபுரி, பொலந்நறுவை, கேகாலை, அநுராதபுரம், குருநாகல் | 84 |
| 32 ஆவது தொடர் | யாழ்ப்பாணம் | 140 |
| 33 ஆவது தொடர் | மன்னார் | 131 |

| | | |
|---|---|---|
| 34 ஆவது தொடர் | அம்பாரை, திருகோணமலை | 390 |
| 35 ஆவது தொடர் | கொழும்பு | 1 |
| 36 ஆவது தொடர் | மட்டக்களப்பு | 235 |
| 37 ஆவது தொடர் | கொழும்பு | 30 |
| 38 ஆவது தொடர் | மாத்தறை | 15 |
| 39 ஆவது தொடர் | யாழ்ப்பாணம், கிளிநொச்சி | 304 |
| 40 ஆவது தொடர் | நுவரெலியா, மாத்தளை, கண்டி | 24 |
| 41 ஆவது தொடர் | முல்லைத்தீவு | 136 |
| 42 ஆவது தொடர் | வவுனியா | 267 |
| 43 ஆவது தொடர் | கொழும்பு | 1 |
| 2024 | | |
| 44 ஆவது தொடர் | வவுனியா, மன்னார், கிளிநொச்சி | 159 |
| 45 ஆவது தொடர் | வவுனியா, மன்னார் | 61 |
| 46 ஆவது தொடர் | முல்லைத்தீவு | 114 |
| 47 ஆவது தொடர் | திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், புத்தளம் | 235 |
| 48 ஆவது தொடர் | வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மாத்தறை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அம்பாரை, திருகோணமலை | 583 |
| 49 ஆவது தொடர் | இரத்தினபுரி, மொனராகலை, குருநாகல், அநுராதபுரம், புத்தளம், பொலந்நறுவை, கொழும்பு, களுத்துறை, கம்பஹா, | 41 |

| | | |
|---|---|---|
| | யாழ்ப்பாணம், கண்டி, மாத்தளை, பதுளை, கேகாலை, நுவரெலியா | |
| 50 ஆவது தொடர் | கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் | 35 |
| | **மொத்த இல: 2024 இல் தொகுக்கப்பட்ட வழக்குகள்** | **1,227** |
| | **மொத்த இல. 2022 முதல் 2024 வரை தொகுக்கப்பட்ட வழக்குகள்** | **6,449** |

தொகுப்புகளின் முன்னேற்றம் - 2024




**4. பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துதல்**

அறிக்கைகளை OMP இன் நிருவாக சபை அங்கீகரித்த பின்னர் விசாரணைக் குழாமினர் மேற்கொண்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதை VFS பிரிவு துவங்கியுள்ளது.


**4.1 மறுமலர்ச்சிக் கொடுப்பனவு**

VFS பிரிவானது 2022 முதல் 2024 இற்குள் 4,209 கடிதங்களை இழப்பீடுகளுக்கான அலுவலகத்துக்குப் பரிந்துரை செய்து அனுப்பிவைத்துள்ளது. எனினும், 2024 ஆம் ஆண்டில் மாத்திரம் 2,123 கடிதங்களை VFS பிரிவு இழப்பீடுகளுக்கான அலுவலகத்துக்குப் பரிந்துரைசெய்து அனுப்பிவைத்துள்ளது. அவற்றின் மாவட்ட ரீதியான இற்றைப்படுத்தல் வருமாறு:

**2022 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையிலான மறுமலர்ச்சிக் கொடுப்பனவின் முன்னேற்ற அறிக்கை**

| இல. | மாவட்டம் | இழப்பீடுகளுக்கான அலுவலகத்துக்கு பரிந்துரை செய்து வழங்கப்பட்டுள்ள கடதங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | யாழ்ப்பாணம் | 947 |
| 2 | கிளிநெச்சி | 637 |
| 3 | மன்னார் | 300 |
| 4 | முல்லைத்தீவு | 343 |
| 5 | வவுனியா | 319 |
| 2 | கொழும்பு | 40 |
| 3 | திருகோணமலை | 349 |
| 4 | மட்டக்களப்பு | 1086 |
| 7 | அம்பாரை | 155 |
| 9 | பொலந்நறுவை | 13 |
| 10 | இரத்தினபுரி | 1 |
| 11 | அநுராதபுரம் | 6 |
| 12 | கேகாலை | 1 |
| 13 | மாத்தளை | 3 |
| 14 | புத்தளம் | 2 |
| 15 | மொனராகலை | 7 |
| | **மொத்தம்** | **4,209** |

**குடும்ப மறுமலர்ச்சிக்கான கொடுப்பனவு முன்னேற்ற அறிக்கை – 2024**



**4.2 காணப்படாமைக்கான சான்றிதழ் மற்றும் மரணப் பதிவுச் சான்றிதழ்**

2022 முதல் 2024 வரையிலான காலகட்டத்தில், காணப்படாமைக்கான சான்றிதழ்களை வழங்குவதற்காக VFS பிரிவு 2,521 கடிதங்களைப் பதிவாளர் நாயகத்துக்குப் பரிந்துரை செய்து அனுப்பியுள்ளது, மேலும் 428 கடிதங்கள் இறப்புப் பதிவுச் சான்றிதழ்களை வழங்குவதற்காக பதிவாளர் நாயகத்திடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அவற்றின் மாவட்ட வாரியான விவரம் பின்வருமாறு:

| COA | | | COD | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | | பதிவாளர் நாயகத்திடம் பரிந்துரைக்கப்பட்டுள்ள கடிதங்களின் எண்ணிக்கை | மாவட்டம் | பதிவாளர் நாயகத்திடம் பரிந்துரைக்கப்பட்டுள்ள கடிதங்களின் எண்ணிக்கை |
| 01 | கிளிநொச்சி | 724 | மட்டக்களப்பு | 110 |
| 02 | யாழ்ப்பாணம் | 598 | யாழ்ப்பாணம் | 102 |
| 03 | வவுனியா | 244 | திருகோணமலை | 76 |
| 04 | திருகோணமலை | 242 | கிளிநொச்சி | 28 |
| 05 | முல்லைத்தீவு | 312 | மன்னார் | 28 |
| 06 | மன்னார் | 171 | வவுனியா | 20 |
| 07 | மட்டக்களப்பு | 157 | அம்பாரை | 18 |
| 08 | அம்பாரை | 22 | முல்லைத்தீவு | 10 |
| 09 | புத்தளம் | 17 | பொலந்நறுவை | 8 |
| 10 | கொழும்பு | 10 | அநுராதபுரம் | 5 |
| 11 | மாத்தறை | 9 | மொனராகலை | 5 |
| 12 | மொனராகலை | 3 | கொழும்பு | 3 |
| 13 | பொலந்நறுவை | 2 | கம்பஹா | 3 |
| 14 | அம்பாந்தோட்டை | 3 | இரத்தினபுரி | 3 |
| 15 | காலி | 2 | காலி | 2 |
| 16 | கம்பஹா | 1 | குருநாகல் | 2 |
| 17 | குருநாகல் | 1 | மாத்தறை | 2 |
| 18 | அநுராதபுரம் | 1 | களுத்துறை | 1 |
| 19 | கண்டி | 1 | கண்டி | 1 |
| 20 | களுத்துறை | 1 | புத்தளம் | 1 |
| 21 | **மொத்தம்** | **2,521** | **மொத்தம்** | **428** |

4.3 உளவியல் ரீதியான ஆதரவு


காணாமல் போன அட்கள் பற்றிய அலுவலகத்தின் விசாரணைக் குழாம் 18 விண்ணப்பதாரர்களை அவர்களுக்கு விசேட உளவியல் பராமரிப்பு அவசியம் என்று பரிந்துரை செய்துள்ளது. எனினும், இப்பிரிவினர் காணாமல போன ஆட்களது குடும்பங்களுக்கான உளவியல் ஆதரவு வழங்குவதற்காக 22 வழக்குகளை ஆரம்பித்துள்ளனர்.

| தொடர் இல: | விவரம் | வழக்குளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | உளவியல் ஆதரவுக்காகப் பரிந்துரை செய்யப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை | 18 |
| 2. | உளவியல் ஆதரவுக்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை | 22 |
| | 2.1 கிளிநொச்சி உளநலக் கழகம் | 21 |
| | 2.2 பிரதேச செயலகம் கண்டி – உளவாற்றுப்படுத்தல் பிரிவு | 01 |
| 3. | உள நலம் மற்றும் உளவியல் ஆதரவு பற்றிய வினாக்கொத்து நிரப்பி ஆய்வுக்குட்படுத்தப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை (முன்னோடி செயற்றிட்டம்)<br><br>** இந்த முன்னோடி செயற்றிட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் 02 | 02 |

- பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் குடும்பங்களுக்கான ஆதரவு வழங்கும் உத்தியோகத்தர்கள் OMP/களப் பயணத்திற்கு வருகை தரும் காணாமல் போன ஆட்களின் குடும்பங்களுடன் எவ்வாறு தொடர்புகொள்ள் வேண்டும் என்பது குறித்த வழிகாட்டுதல் ஒன்று 07/08/2024 அன்று தயாரிக்கப்பட்டது
- காணாமல் போன ஆட்களின் குடும்பங்களின் உளநலம் மற்றும் உளவியல் சமூக ஆதரவை அடையாளம் காண்பதற்கான வினாக்கொத்து ஒன்று உருவாக்கப்பட்டது.
- காணாமல் போன ஆட்களின் குடும்பங்களின் மனநலம் மற்றும் உளவியல் சமூக ஆதரவை அடையாளம் காண ஒரு வினாக்கொத்து உருவாக்கும் முன்னோடி செயற்றிட்டம் நெறிமுறைக் குழுவின் ஒப்புதலுக்குப் பிறகு செயற்படுத்தப்பட்டது.
- பூர்த்தி செய்யப்பட்ட வினாக்கொத்துகளுக்கான ஆராய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.
- காணாமல் போன ஆட்களின் குடும்பங்களுக்கு அவர்களின் அன்புக்குரியவர்களின் மரணம் குறித்து அறிவிப்பதற்கான வழிகாட்டுதல்கள் 20.08.2024 அன்று நிறைவேற்றுப் பணிப்பாளரின் அறிவுறுத்தல்களின்படி உருவாக்கப்பட்டன.
- 2024 நவம்பர் 7 மற்றும் 8 ஆம் திகதிகளில் CEWAS நிறுவனத்தின் மூலம் இரத்மலான நகரில் 2 நாள் மன எழுச்சி வெளியிடை முற்பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த 2 நாள் செயலமர்வுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வளவாளர்களாகப் பங்களித்திருந்தது.

### 4.4 குடும்பங்களுக்கான ஆதரவு வழங்கல்

OMP விசாரணைக் குழுக்கள் 596 குடும்பங்களுக்கு குடும்ப ஆதரவு வழங்குமாறு பரிந்துரைத்துள்ளன. இருப்பினும், காணாமல் போன ஆட்களின் குடும்பங்களுக்கு ஆதரவளிப்பதற்காக பிரிவு 644 பரிந்துரை கடிதங்களை அந்தந்த மாவட்ட செயலக அலுவலகங்கள் மற்றும் நீதி அமைச்சுக்கு அனுப்பி வருகின்றது.




மேலும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துடன் இணைந்து காணாமல் போன ஆட்களின் குடும்பங்களின் சமூக-பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்காக திட்ட முன்மொழிவு ஒன்று உருவாக்கப்பட்டது. பிரிவு 18/07/2024 மற்றும் 28/08/2024 ஆகிய திகதிகளில் கூட்டங்களுக்கான கோரிக்கைகளை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துக்கு அனுப்பி வைத்துள்ளது.

## 5. ஏனைய செயற்பாடுகள்

**காணாமல் ஆக்கப்படுதலுக்கு எதிரான சர்வதேச தினம் - 2024**

இந்த நிகழ்ச்சிக்கு காணாமல் போன ஆட்களின் குடும்பங்களையும் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் பிராந்திய அலுவலகங்களின் ஒருங்கிணைப்பாளர்களையும் வரவழைப்பதற்காக பாதிக்கப்பட்டோர் மற்றும் குடும்பங்களுக்கான ஆதரவு வழங்கும் பிரிவானது காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தடவியல் கண்டறிகைப் பிரிவுக்கு ஒத்தாசை புரிந்துள்ளது.

11. நிதி மற்றும் பெறுகைப் பிரிவு

| விவரங்கள் | வரவுசெலவு ஏற்பாடு (ரூ. மில்) | கட்டுநிதி பெற்றுக்கொண்டது (ரூ. மில்) | செலவினம் (ரூ. மில்) | செலவினம் (%) |
|---|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | | | | |
| சம்பளங்கள் ஆளணி வேதனாதிகள் | 50,460 | 56,680 | 45,982 | 91 |
| ஏனைய செயற்பாடுகளுக்கான செலவினங்கள் | 63,000 | 44,310 | 61,269 | 97 |
| கூட்டுத் தொகை | **113,460** | **100,990** | **107,161** | **94** |
| மூலதனச் செலவினம் | | | | |
| ஏனையவை | 16,200 | 7,500 | 9,487 | 59 |
| கூட்டு மொத்தம் | **129,660** | **108,490** | **116,648** | **90** |
| விவரங்கள் | வரவு செலவு ஏற்பாடு (ரூ. மில்) | கட்டுநிதி பெற்றுக்கொண்டது (ரூ. மில்) | செலவினம் (ரூ. மில்) | செலவினம் (%) |

| | | | | |
|---|---|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | | | | |
| சம்பளங்கள் ஆளணி வேதனாதிகள் | 50,460 | 56,680 | 45,982 | 91 |
| எனைய செயற்பாடுகளுக்கான செலவினங்கள | 63,000 | 44,310 | 61,269 | 97 |
| **கூட்டுத் தொகை** | **113,460** | **100,990** | **107,161** | **94** |
| **மூலதனச் செலவினம்** | | | | |
| ஏனையவை | 16,200 | 7,500 | 9,487 | 59 |
| **கூட்டுத் தொகை** | **129,660** | **108,490** | **116,648** | **90** |

## 12. நிருவாகம் மற்றும் மனிதவள முகாமைத்துவப் பிரிவு

காணாமல் போன ஆட்களின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்களுக்கு உச்ச அளவில் சேவையை வழங்குவதற்காக, கொழும்பில் உள்ள தலைமை அலுவலகம் மற்றும் கிளிநொச்சி, மன்னார், மாத்தறை, யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களில் உள்ள பிராந்திய அலுவலகங்களில் கணிசமான எண்ணிக்கையிலான பணியாளர்களை ஆட்சேர்ப்புச் செய்ததன் மூலமும், செயற்றிறனை அதிகரிப்பதன் மூலமும் OMP தனது பணியாட்டொகுதியை வலுப்படுத்தியுள்ளது. OMP 2024 ஜனவரியில் முல்லைத்தீவில் ஒரு உப அலுவலகத்தைத் திறந்துள்ளது. OMP மன்னார் பிராந்திய அலுவலகத்தை மன்னார் கச்சேரிக்கு மாற்ற, எமது மன்னார் பிராந்திய அலுவலகத்திற்கும் மன்னார் கச்சேரியில் உள்ள மாவட்ட செயலாளருக்குமிடையில் ஒரு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. காணாமல் போன ஆட்களின் குடும்பத்தினர் எமது அலுவலகத்தை எளிதாகத் தொடர்பு கொள்ளலாம், இதனால் இந்தச் செயற்பாட்டில் பணத்தை மிச்சப்படுத்தலாம். பிராந்திய அலுவலகங்களைத் தாபித்ததன் மூலம், பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள குடும்பங்களை OMP இனால் இப்போது எளிதாகச் சென்றடைய முடிந்துள்ளது. பாதிக்கப்பட்ட குடும்பங்கள் எல்லா நேரங்களிலும் உணர்ச்சிபூர்வமாகவும் கண்ணியத்துடனும் மரியாதையுடனும் நடத்தப்படுவதை உறுதி செய்வதற்கு OMP அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது.

ஒழுங்குபடுத்தல்கள், நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவம் மற்றும் ஏனைய அனைத்து நிர்வாக கடமைகளையும் எளிதாக்குவதுடன், அனைத்து பிரிவுகளுடனும் தங்கள் பணிகளை முடிக்க ஒத்துழைப்பது வழங்குதல் ஆகியவை மனிதவளம் மற்றும் நிர்வாக பிரிவின் முதன்மையான பொறுப்புகளில் ஒன்றாகும், இது OMP இன் ஒட்டுமொத்த செயற்பாட்டையும் கண்காணித்து மதிப்பிடுவதற்கு பொறுப்பாக்கப்பட்டுள்ள துறையாகும். மேலும், வெளியக முறையிலும் மற்றும் இரண்டாம் நிலைப் பணியமர்த்தல் முறைமை மூலமாகவும் பணியாளர்களை OMP ஆட்சேர்ப்பு செய்துள்ளது. மனிதவளம் மற்றும் நிர்வாகப் பிரிவு நிருவாக சபை உறுப்பினர்கள், பிராந்திய அலுவலகங்கள், அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களுடன் வழக்கமான மேற்கொண்டுள்ள தொடர்புகளின் விளைவாக அது சாத்தியமாகியுள்ளது. 2024 ஆம் ஆண்டில் OMP பணியாளர்களில் 3 பேர் இரண்டாம் மொழி பாடத்திட்டத்தை திருப்திகரமாக நிறைவு செயதுள்ளனர். எமது மூலோபாய மற்றும் நிகழ்ச்சித்திட்ட வரைவின் அடிப்படையில் தற்போது அவசரமான 66 பதவி வெற்றிடங்களை OMP கொண்டுள்ளது. இது குறித்து பிரதமர் அலுவலகத்திற்கு அறிவித்தல் விடுக்கப்பட்டு 47 ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான அங்கீகாரத்தை OMP பெற்றுக்கொண்டது.

மேலும், OMP இன் திறன் விருத்தித் திட்டங்களுக்காக உலகளாவிய சமூகங்கள் மற்றும் அமெரிக்க உதவிகளுடன் ஒரு ஒத்துழைப்புக்கான கூட்டு உருவாக்கப்பட்டுள்ளது. OMP குழாமினரின் திறன்களை வலுப்படுத்த, அமெரிக்க உதவிகள் மற்றும் உலகளாவிய சமூகங்கள் கொழும்பில் மூன்று நாள் வதிவிட செயலமர்வை நடத்தின. அதேபோல், OMP குழாம் கொழும்பில் உள்ள தேசிய ஒருங்கிணைப்பு அலுவலர்களுக்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்துடன் இணைந்து ஒரு துறைசார் நிகழ்ச்சித்திட்டப் பயிற்சியை அளித்தது. CEWAS இல் உள்ள OMP ஊழியர்கள் OMP மற்றும் ICRC நடத்தும் ஒரு மன எழுச்சி வெளியிடை முற்பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் பயிற்சி அமர்வில் பங்கேற்றனர். மேலும், OMP ஊழியர்களுக்கும் ஏனைய அரச பிரதிநிதிகளுக்கும் ஒரு தடயவியல் சம்பந்தமான செயலமர்வு ஒன்றை OMP மற்றும் FAFG நடாத்தியது. அமர்வின் முதல் நாள் நோக்குநிலையை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபம் நடாத்தியது, அதே நேரத்தில் அடுத்த 3 நாட்களுக்கான வதிவிட செயலமர்வுக்கு CEWAS துணைபுரிந்தது. மேலும், எமது பதவிநிலை

உத்தியோகத்தர் ஒருவர் ICRC இன் அனுசரணையுடன் நேபாளத்தில் இடம்பெற்ற வெளிநாட்டு பயிற்சியி நெறியில் பங்கேற்றுள்ளார்.

27 ஆகஸ்ட் 2024 அன்று, காணாமல் ஆக்கப்பட்டோரை நினைவுகூரும் சர்வதேச தினத்தை அனுஷ்டிக்கும் நிகழ்வு ஒன்றை ஹெக்டர் கொப்பேகடுவ ஆராய்ச்சி நிறுவனத்தில் OMP நடத்தியது. வெளிநாட்டுத் தூதுவர்கள், அரசு அதிகாரிகள், நீதி அமைச்சர், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் காணாமல் போன ஆட்களின் உறவினர்கள் போன்றோர் இந்த நிகழ்விற்கு OMP இனால் அழைக்கப்பட்டிருந்தனர்.

தீர்மானங்களை மேற்கொள்ளல், அத்தியாவசிய பணிகளை மேற்கொள்ளல் போன்ற பல நிலைகளை நடைமுறைப்படுத்துவதில் ஒட்டுமொத்த நிர்வாக செயல்பாடுகளில் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தவிசாளர் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள் முக்கிய பங்கு வகித்துள்ளனர். மூலோபாயத் திட்ட வரைவு, பணியாட்டொகுதி ஒழுங்கமைப்பு, விசாரணை செயன்முறை மற்றும் திறன் விருத்தி நிகழ்வுகள் ஆகியவை OMP இன் நிருவாக சபை உறுப்பினர்கள் தங்கள் அமர்வுகளின் போது கலந்துரையாடிய பல அம்சங்களில் ஒருசிலவாகும்.

**பணியாளர் ஆட்சேர்ப்பு**

வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியை முழுமையாகப் பயன்படுத்துவதில் விதிக்கப்பட்டிருந்த மட்டுப்பாடு மற்றும் பல்வேறு விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் காரணமாக முக்கியமான பதவிகளுக்கு ஊழியர்களைத் தக்கவைத்துக்கொள்வதில் OMP குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொண்டது. மேலும், கணிசமான எண்ணிக்கையிலான ஆட்சேர்ப்புகள் நிறுத்தப்பட்டதை OMP அவதானித்தது. இருப்பினும், அத்தியாவசிய அடிப்படையில் 02 பேரை நாம் ஆட்சேர்ப்பு செய்தோம்.

OMP ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து, பதவிகளை நிரப்ப தேவையான அனுபவமுள்ள திறமையான நபர்களை ஆட்சேர்ப்பு செய்வதில் OMP கணிசமான நேரம், முயற்சி மற்றும் வளங்களை செலவு செய்துள்ளது. 2024 ஆம் ஆண்டில், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 255 பணியாளர்கள் அமைந்திருக்கின்ற போதிலும், நிரந்தர பணியாளராக 38 பணியாளர்கள் மாத்திரமே உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அதன்படி, 2024 ஆம் ஆண்டில், பின்வரும் துறைகளுக்கு 02 அலுவலர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

| தொடர் இல. | பதவிகள் | பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | கண்டறிகைப் பிரிவின் தலைவர் | 01 |
| 02. | முகாமைத்துவ உதவியாளர் | 01 |

ஒற்றுமை, செயற்றிறன் மற்றும் நட்புரீதியான பணிச்சூழலை கட்டியெழுப்ப, சேர்ந்த OMP இன் தலைமை அலுவலகத்தின் மனிதவள, நிர்வாகப் பிரிவைச் சேர்ந்த ஊழியர்கள் குளிரூட்டி இயந்திரங்களைச் சரிசெய்தனர், ஒளி மின்குமிழ் தொகுதியை மாற்றியமைத்துள்ளனர். அத்துடன் அனைத்து பிரிவுகளையும் தனித்தனி அலகுகளாகத் தளபாடமிட்டு பிரிப்புகள் இட்டுப் பிரித்து ஒழுங்கமைத்துள்ளனர்.

## 13. கண்டறிகை மற்றும் புலனாய்வு

### 1. காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் கடப்பாடு

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் அதன் நடைமுறை ஒழுங்கில் வரையறுத்துக் காட்டப்பட்டுள்ளபடி ஒரு கண்டறிகை மற்றும் புலனாய்வுப் பிரிவை தாபித்துள்ளது. இந்தப் பிரிவானது அலுவலகத்தின் ஒரு முக்கிய பகுதியாக உள்ளதுடன் அதற்கு வழங்கப்பட்டுள்ள புலனாய்வு அதிகாரங்களின்படி செயற்படுகின்ற பிரிவாகும். காணாமல் போன ஆட்கள் பற்றிய வழக்குகள் குறித்த ஆரம்ப விசாரணையைத் தொடர்ந்து, மேலதிக விசாரணைக்குப் பரிந்துரைக்கப்பட்ட கோப்புகள் தொடர்பாகவும் இந்தப் பிரிவு மேலதிக நடவடிக்கையை மேற்கொள்கின்றது.

### 2. கூட்டாண்மை நிறுவப்பட்டது

காணாமல் போன ஆள் மற்றும் விண்ணப்பதாரரின் அடையாளத்தை விசாரிப்பதில் தொடங்கி, பல முக்கிய அம்சங்களில் இந்த பிரிவு கவனம் செலுத்துகிறது. இந்த செயன்முறைக்குத் துணைபுரியும் வகையில், ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம், இலங்கைத் தேர்தல் ஆணைக்குழு மற்றும் மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் உள்ளிட்ட பல்வேறு அரசாங்க மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இந்த பிரிவு ஒத்துழைத்து செயற்படுகின்றது.

2வது கட்டத்தில், காணாமல் போன ஆளின் தனிப்பட்ட விவரங்கள், காணாமல் போன சம்பவம், காலக்கெடு மற்றும் பிற தொடர்புடைய உண்மைகள் குறித்து விரிவான விசாரணை நடத்தப்படுகிறது. இதை எளிதாக்க, இலங்கைக் காவல் துறை மற்றும் அதன் தொடர்புடைய நிறுவனங்களிடமிருந்தும், முப்படைகள் உட்பட பாதுகாப்பு மற்றும் புலனாய்வு சேவைகளிடமிருந்தும் தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன. மேலும், விண்ணப்பதாரர் அல்லது சாட்சிகள் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் தேடல் முயற்சிகளுக்கு அனுசரணையளிக்கும் வகையில் சிறைச்சாலைகள் திணைக்களம் பல்வேறு அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் நிபுணத்துவ ஆலோசனை பெறப்பட்டு வருகின்றது.

### 3. முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது

2024 ஆம் ஆண்டின் இறுதியில், மேலும் விசாரணைக்கு பரிந்துரைக்கப்பட்ட 526 முறைப்பாடுகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, மேலே குறிப்பிட்டுள்ள கட்டங்கள் மூலம் முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. இந்தப் முறைப்பாடுகளில், 84 முறைப்பாடுகள் வழக்கு முகாமைத்துவ நடைமுறையை நோக்கி முன்னேற்றம் கண்டுள்ளன, அவற்றின் விவரங்கள் கீழே வழங்கப்படுகின்றன.

| # | விவரம் | வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | இலங்கையில் உயிருடன் உள்ளவர்கள் | 10 |
| 2 | சட்டபூர்வமாக வெளிநாட்டில் உள்ளோர் | 4 |
| 3 | சட்டபூர்வமாக வெளிநாட்டில் உள்ளோர் | 1 |
| 4 | இனிமேல் காணாமல் போனவர் அல்லாதோர் | 2 |
| 5 | வழக்கு முகாமைத்துவ நடைமுறையின் கீழ் உறுதிப்படுத்தப்பட்ட மரண வழக்குகள் | 67 |
| | மொத்தம் | 84 |

மேலும், நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் அறிவுறுத்தல்களின்படி, கண்டறிகை மற்றும் விசாரணை நடவடிக்கைகளின் செயற்றிறனை மேம்படுத்துவதற்காக, தடயவியல் வழிகாட்டுதல்களின் தொகுப்பு வரைவு செய்யப்பட்டது. இப்போது நாம் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் அது குறித்துக் கலந்தாலோசிப்பதற்காக காத்திருக்கிறோம்.

## 4. ICRC மற்றும் FAFG இன் தொழில்நுட்ப ஆதரவு

11 செப்டம்பர் 2024 அன்று, தடயவியல் அறிவியல் குறித்த ஒரு நோக்குநிலைத் திட்டத்தை கண்டறிகை மற்றும் புலனாய்வு பிரிவு, Fundación de Antropología Forense de Guatemala FAFG மற்றும் ICRC ஆகியவற்றின் பெறுமதிமிக்க ஆதரவுடன் BMICH இல் வெற்றிகரமாக ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நிகழ்வு, அரச மற்றும் அரச சார்பற்ற பங்குதாரர்களை ஒன்றிணைத்து, காணாமல் போனவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் ஒத்துழைப்பை வளர்ப்பதற்கும் முயற்சிகளை மேம்படுத்துவதற்கும் வழிவகுத்தது.

மேலும், 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20, 22 ஆந் திகதிகளில், தடயவியல் மற்றும் புலனாய்வு பிரிவு, Fundación de Antropología Forense de Guatemala FAFG மற்றும் ICRC ஆகியவற்றின் பெறுமதிமிக்க ஆதரவுடன், நீர் மற்றும் சுகாதாரத்திற்கான விசேட மையத்தில் (CEWAS) 3 நாள் வதிவிட "மேம்பட்ட தடயவியல் அறிவியல் செயலமர்வு" வெற்றிகரமாக ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தப் பட்டறை, 'காணாமல் போன ஆட்களது கோப்புகள்' சூழல் மற்றும் தடயவியல் அறிவியல் மற்றும் புலனாய்வு நடைமுறைகளுக்கு இடையிலான முக்கியமான தொடர்புகள் பற்றிய புரிதலை மேம்படுத்துவதற்காக OMP ஊழியர்களுக்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டு நடாத்தப்பட்டது.

மேற்கூறிய இரண்டு செயலமர்வுகளும் நீதி அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை விசாரணை செய்யும் ஆணைக்குழு (CIABOC), தேசிய சமாதான சபை, ICRC மற்றும் பல்வேறு தேசிய பல்கலைக்கழகங்களுடன் இணைந்து வெற்றிகரமாக ஏற்பாடு செய்யப்பட்டன.

## 5. முக்கிய சாதனைகள்

### 5.1 காணாமல் போன ஆட்களின் கோப்புகளை விளங்கித் தீர்த்தல்

காணாமல் போன ஆளின் இருப்பிடத்தை விசாரிக்க தடமறிதல் மற்றும் புலனாய்வுப் பிரிவு சிறைச்சாலைக்கு விஜயம் செய்தது. காணாமல் போனவர் தொடர்பான வாக்குமூலங்களைப் பெற யாழ்ப்பாண மாவட்டத்திற்கு விஜயம் செய்யப்பட்டது, மனித எச்சங்களை அகழ்வாராய்ச்சி செய்வதற்காக துறைமுக நகரத்திற்கு ஒரு தள விஜயமும் ஏற்பாடு செய்யப்பட்டது.

மேலும், தடமறிதல் மற்றும் புலனாய்வுப் பிரிவு, மேலதிக விசாரணைக்கான தகவல்களைக் கோரி யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களில் உள்ள 35 மருத்துவமனைகளை உள்ளடக்கிய ஒரு கண்டறிகை நடவடிக்கையையும் மேற்கொண்டது. போரின் போதும் போருக்குப் பின்னரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்கள் தொடர்பான தகவல்கள் இதில் அடங்கும்.

மேலும், அடையாளம் காண முடியாத மற்றும் அடையாளம் காணக்கூடிய எச்சங்களைக் கையாள்வதற்கான OMP சட்டத்தின் பிரிவு 13 (ஓ) (iii) இன் கீழ், காணாமல் போனவர்களை மற்றும் அடையாளம் காணப்படாத உடல்களை இணைப்பதற்கான நடைமுறையை உருவாக்குவது தொடர்பாக இலங்கை மருத்துவ சட்ட சங்கத்தின் பிரதிநிதியுடன் 2024 ஆகஸ்ட் 20 ஆந் திகதி ஒரு முன்முயற்சி கலந்துரையாடல் இடம்பெற்றது.

## 5.2 “காணாமல் ஆக்கப்பட்டோரை நினைவுகூரும் சர்வதேச தினம் - இலங்கை அத்தியாயம்” நினைவு நாள்

2024 ஆகஸ்ட் 27 அன்று, காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் “காணாமல் ஆக்கப்பட்டோரை நினைவுகூரும் சர்வதேச தினத்தை ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் பிரதான கேட்போர் கூடத்தில் ஒரு பிரதான நிகழ்வாக அனுஷ்டித்தது. கௌரவ நீதி அமைச்சர், கௌரவ சட்டமா அதிபர் மற்றும் சுவிட்சர்லாந்து மற்றும் தென்னாபிரிக்காவின் தூதர்கள் உட்பட விசேட விருந்தினர்களின் முன்னிலையில் இந்த நிகழ்வு நடந்தேறியது.

இந்த நிகழ்வில் காணாமல் போன ஆட்களின் குடும்பங்கள், காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் பிராந்திய ஊழியர்கள் மற்றும் பல்வேறு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்பட பல்வேறு குழுக்கள் இணைந்திருந்தன. அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து தூதரகங்கள், வெளி விவகார அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, முப்படைகள், சிறைச்சாலைத் திணைக்களம், புனர்வாழ்வுப் பணியகம், பதிவாளர் நாயகத்தின் திணைக்களம், இழப்பீடுகளுக்கான அலுவலகம், சட்ட உதவி ஆணைக்குழு மற்றும் ஏனைய முக்கிய அரச நிறுவனங்களின் பணியாளர்கள் அந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

அந்த நினைவு நாள் நிகழ்வில் காணாமல் போனவர்களின் நினைவை போற்றுவது, காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு நீதி வழங்குவதற்கான உறுதிப்பாட்டை வலுப்படுத்துவது ஆகிய விடயங்கள் மீது கவனம் செலுத்தப்பட்டது. பல்கலைக்கழகங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பகுதியளவலான அரசாங்க நிறுவனங்கள் உட்பட பல்வேறு நிறுவனங்கள் இந்த அர்த்தமுள்ள நிகழ்வில் பங்கேற்றன, இலங்கையில் காணாமல் போனவர்களின் தற்போதைய பிரச்சினையை நிவர்த்தி செய்வதில் கூட்டு முயற்சியை அவை மேலும் வலியுறுத்தின.

இந்த நிகழ்வு காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்குள் உள்ள ஏனைய சம்பந்தப்பட்ட பிரிவுகளின் ஆதரவுடன் முதன்மையாக கண்டறிகை மற்றும் புலனாய்வுப் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## 14. பாதுகாப்புப் பிரிவு


பாதுகாப்புப் பிரிவு என்பது OMP இன் முக்கிய கூறுகளில் ஒன்றாகும், மேலும் இது பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான ஒரு முறைமையை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல், தனிநபர்களைப் பாதுகாத்தல் மற்றும் OMP இன் செயற்பாடுகளில் தமது செயற்பாட்டு ரீதியான பங்களிப்பை வழங்குதல் ஆகியவற்றை உள்ளடக்கியது.

பாதுகாப்புப் பிரிவு தனியாட்களின் பௌதிக ஒருமைப்பாட்டைப் பாதுகாத்தல், பரந்தளவிலான பாதுகாப்பு பிரச்சினைகள், உளவியல்-சமூக நல்வாழ்வு போன்ற விடயங்களில் அக்கறை கொண்டு செயற்படுகின்ற பிரிவாகும். இப்பிரிவு குறித்த அவ்விடயங்களை ஏனைய பிரிவுகளுடன் இணைந்து தீர்த்துவைக்கும்.

இந்தப் பிரிவு வினைத்திறனுள்ள வகையில் செயற்படுவதற்கு, ஆவணப்படுத்துதல், முன்னாயத்த திட்டமிடல் மற்றும் பாதுகாப்புசார் அம்சங்களை நிறுவுதல் மற்றும் வடிவமைத்தல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், நியமமான செயற்பாட்டு நடைமுறைகள் (SOP) மற்றும் விதிமுறைகளை செயற்படுத்துதல், இடர் மதிப்பீடு, சம்பவங்களில் பாதிக்கப்பட்ட நபர்களைத் தொடர்ச்சியாகக் கண்காணித்துப் பேணிவருதல் (நபர்களின் பாதுகாப்புக்குத் துணைபுரிதல்) மற்றும் அவர்களுக்காகப் பரிந்துரை செய்தல் ஆகியவற்றை இது வலியுறுத்துகிறது.

பாதுகாப்புப் பிரிவு எதிர்கொள்ளும் முக்கிய சவால்களில் ஒன்று நிரந்தர ஊழியர்கள் இல்லாமை ஆகும். எனவே, இது ஒரு மூத்த பாதுகாப்பு அதிகாரியின் கீழ் செயற்படுகின்றது. இந்தப் பணியாளர் பற்றாக்குறை தொடர்புடைய நடவடிக்கைகளில் சிரமங்களுக்கு வழிவகுத்துள்ளது. மேலும் புதிய முறைப்பாடுகளைப் பெறுதல், கடப்பாட்டுக்கு எட்படாத வகையிலான இல்லாத விசாரணைகளை நடத்துதல், கண்காணிப்பு அட்டவணையை தொடர்ந்து புதுப்பித்தல், ஊடகக் கட்டுரைகளைச் சேகரித்தல் மற்றும் காணாமல் போனவர்கள் தொடர்பான போராட்ட சம்பவங்கள் குறித்த பகுப்பாய்வுகளை மேற்கொள்ளல், மனிதப் புதைகுழிகள் அகழ்வாராய்ச்சி பற்றிய வழக்குகளில் கண்காணிப்பாளராகப் பணியாற்றுதல் மற்றும் அரச அதிகாரிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்வுகளில் கலந்துகொள்வது ஆகியவற்றுடன் இந்தப் பிரிவு இணைந்து பணியாற்ற வேண்டியிருந்தது.

2020 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை, பாதுகாப்புப் பிரிவு கண்காணிப்பு அட்டவணையை தொடர்ந்து புதுப்பித்து வந்துள்ளது. 2024 ஆம் ஆண்டில், கண்காணிப்பு அட்டவணையில் ஏற்கனவே 67 வழக்குகள் புதுப்பிக்கப்பட்டிருந்தன. அவை காணாமல் போனவர்கள், காணாமலாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் காணாமல் போன அல்லது இறப்பு சம்பவம் தொடர்பாக போராட்டத்தை நடத்துதல் என்று வகைப்படுத்தப்பட்டுள்ளன:




இந்தப் பிரிவு 549 முறைப்பாடுகளைப் பெற்றுள்ளது. மொத்தத்தில், 31 வழக்குகள் மீண்டும் மீண்டும் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் எனக் கண்டறியப்பட்டன. மேலும், 14 வழக்குகள் கடப்பாட்டுக்குள் உள்ளடங்காத அமைந்திருந்தன. எனவே, 2024 ஆம் ஆண்டில் 504 வழக்குகள் புதிய முறைப்பாடுகளாகப் பதிவு செய்யப்பட்டு, காணாமல் போன திகதிகள் அது எந்த வகைப்பாட்டுக்குள் அடங்கும் என்ற வகையின்படி விசாரணைகளுக்காக முன்வைக்கப்பட்டன.

காணாமல் போன ஆட்களின் 6,449 குடும்பங்களுடன் நடாத்தப்பட்ட விசாரணைகளின் படி அவ்விசாரணைச் செயன்முறையுடன் தொடர்புபட்ட அனைத்து விடயங்களையும் பிரதானமாகக் கவனிக்கின்றது. அதாவது குடும்பங்கள், விசாரணைக் குழு உறுப்பினர்கள், விசாரணை வளாகங்கள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் போன்றவற்றை இலங்கைக் காவல்துறை மற்றும் இராணுவ அதிகாரிகளுடன் இணைந்து OMP இன் முழு செயற்பாட்டு செயன்முறை தொடர்பான பாதுகாப்பு ஆகியவற்றிற்கான விசாரணைகளின் முழு பாதுகாப்பு செயன்முறையையும் பாதுகாப்புப் பிரிவே முக்கியமாகக் கவனித்துக்கொள்கிறது. 2024 ஆகஸ்ட் 27 அன்று கண்காணிப்புப் பிரிவுடன் இணைந்து "காணாமலாக்கப்பட்டோர் நினைவு நாள்" நிகழ்வை ஏற்பாடு செய்வதில் பாதுகாப்புப் பிரிவு ஈடுபட்டுள்ளது.

மேலும், பாதுகாப்புப் பிரிவு மேலும் தகவல் மற்றும் சரிபார்ப்பு செயன்முறையைத் தேடுவதில் ஈடுபட்டது. தொடர்புறும் வழக்குகளுக்காக சிவில் சமூக நிறுவனங்கள்/அரச திணைக்களங்கள் மற்றும் இலங்கை காவல்துறையினருடன் கூட்டத்தை நடத்துதல் மற்றும் பாதுகாப்புப் பிரிவால் சேமிக்கப்பட்ட/பகிரப்பட்ட பிற தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் தகவல்கள் ஆகியவற்றை வரைதல் போன்ற விடயங்களை இப்பிரிவு மேற்கொண்டது. 2024 ஆம் ஆண்டில், பாதுகாப்புப் பிரிவு நாடு முழுவதும் 08 சிவில் சமூகக் கூட்டங்களை நடத்தி, பங்குதாரர்களுடன் OMP திட்ட வரைபடத்தின் சாதகமான தன்மை பற்றி கலந்துரையாடியது. (இந்த கட்டத்தில் கொழும்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு மற்றும் மாத்தறை மாவட்டங்களை உள்ளடக்கியதாக அது அமைந்திருந்தது.)

மறுபுறம், பாதுகாப்புப் பிரிவு, நீதி அமைச்சின் ஆதரவுடன், மனிதப் புதைகுழிகள் அகழ்வாராய்ச்சி செயன்முறையை விரைவுபடுத்துவதற்காக, குறிப்பாக மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்கள், நீதிமன்றங்கள், சட்ட மருத்துவத் திணைக்களங்கள் ஆகியவற்றில் அரசாங்க அமைப்புகளுடன் ஒரு கண்காணிப்பாளராக செயற்பட்டு முக்கிய பங்கு வகிக்கிறது. இந்தப் பயிற்சியில் பணிபுரியும் OMP, 15 மனித புதைகுழிகள் உள்ள இடங்களின் தகவல்களைப் பதிவு செய்துள்ளது, தற்போது பாதுகாப்புப் பிரிவு அத்தகைய மாவட்டங்களில் 04 மனித புதைகுழிகள் உள்ள இடங்களுடன் நெருக்கமாக இணைந்து பணியாற்றி வருகிறது. (கொழும்பு 01, முல்லைத்தீவு 01 மற்றும் மன்னார் 02)

ஒட்டுமொத்தமாக, காணாமல் போனவர்களின் குடும்பங்கள், OMP ஊழியர்கள், தொடர்புடைய அதிகாரிகள், தரவு அல்லது OMP தொடர்பான வேறு எந்த வளாகங்களுக்கும் பாதுகாப்பைக் கொண்டுவருவதற்கான OMP இன் பணியில் பாதுகாப்புப் பிரிவு முக்கிய பங்கு வகிக்கிறது. 2024 ஆம் ஆண்டில், OMP 05 ஊடக சந்திப்புகள், 10 ஊடக வெளியீடுகள் மற்றும் 02 நேர்காணல்களை நடத்தியது, இதில் OMP இன் முன்னேற்றம் பொதுமக்களுக்கு எடுத்துக்காட்டப்பட்டதுடன் ஆரம்பகட்ட விசாரணைச் செயன்முறை தொடர்பான தவறான கருத்து தெளிவுபடுத்தப்பட்டது. 2024 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டத்தினால் வழங்கப்பட்ட இலக்கை அடைவதற்காகப் பாதுகாப்பு பிரிவு ரூ. 1,268,156.50 தொகையை செலவிட்டுள்ளது.

### 15. தகவல் அறியும் உரிமை

2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் OMP இல் காணப்படும் தகவல்களை அணுகுவதற்கான வசதியை OMP கொண்டிருத்தல் வேண்டும் என்று தேவைப்படுத்தப்படுகின்றது.

| இல. | விடயம் | வேண்டுகோள்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தகவல்களுக்கான கோரிக்கைகளின் எண்ணிக்கை | 12 |
| 2 | தகவல்கள் பூரணமாக வழங்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை | 10 |
| 3 | தகவல்கள் பகுதியளவில் வழங்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை | 2 |
| 4 | சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் மறுக்கப்பட்ட அல்லது நிராகரிக்கப்பட்ட தகவற்கோரிக்கைகளின் எண்ணிக்கை | 1 |

| | | |
|---|---|---|
| 5 | சட்டத்தின் பிரிவு 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களை விட வேறு காரணங்களுக்காக தகவற்கோரிக்கைகள் மறுக்கப்பட்ட அல்லது நிராகரிக்கப்பட்ட எண்ணிக்கை | 0 |
| 6 | தகவற்கோரிக்கைஒன்றுக்குப் பதிலளிக்க எடுத்துக்கொள்ளப்பட்ட சராசரி நேரம் (வேலைந ாட்களின் எண்ணிக்கை)? நாட்கள் | 14 |
| 7 | தபால் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவற் கோரிக்கைகளின் எண்ணிக்கை யாது? | 8 |
| 8 | மின்னஞ்சல் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவற் கோரிக்கைகளின் எண்ணிக்கை யாது? | 4 |
| 9 | தபால் அல்லது மின்னஞ்சல் போன்றவற்றை விடுத்து வேறு ஏதேனும் வழிமுறைகள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவற் கோரிக்கைகளின் எண்ணிக்கை யாது? | 0 |

## 16. பாராட்டுகள்

ஒட்டுமொத்த வேலைத் திட்டத்தின் அடிப்படையில் முன்னேற்றத்தை அடைவதிலும், நிறுவனத்தை வலுப்படுத்துவதிலும் OMP மகத்தான பணியை ஆற்றியுள்ளது. 2023 ஆம் ஆண்டில் OMP தயாரித்த மூலோபாயத் திட்டத்தை இந்த ஆண்டில் இறுதி செய்ய முடிந்தது. அதில் கட்டம் 1 இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளில் 92% க்கும் அதிகமானவை விண்ணப்பதாரர்கள் மற்றும் சாட்சிகளின் சாட்சியங்களின் மூலம் சாட்சியமளிக்கப்பட்டுள்ள முறைப்பாடுகளாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன. மேலும் கண்டறிகை மற்றும் விசாரணைப் பிரிவு மற்றும் குடும்பங்களுக்கான ஆதரவு வழங்கல் பிரிவு ஆகியவை ஒரு பணியாட்டொகுதியினர் குழுவாக நிறுவப்பட்டுள்ளன. இருப்பினும், பொது மக்களுக்கும் OMP நிறுவனத்துக்கும் இடையிலான ஒப்பந்தக் கடப்பாடுகளை வலுப்படுத்த, பாதிக்கப்பட்ட சமூகத்தை குணப்படுத்தக்கூடிய வகையில் இன்னும் உறுதியான நடவடிக்கைகளை OMP மேற்கொள்ள வேண்டும். இறுதியாக, OMP இன் நிருவாக சபை உறுப்பினர்கள், ஊழியர்கள் மற்றும் கூட்டாண்மை நிறுவனங்களால் வகுக்கப்பட்ட இந்த அடித்தளம் நிச்சயமாக அதிக சாதனைகள் மற்றும் OMP இன் கடப்பாட்டினைச் சிறப்பாக நிறைவேற்றுவதற்கான புதிய பாதைகளைத் திறந்துகொடுக்கும்.

17. நிதிசார் கூற்று

| விவரங்கள் | வரவுசெலவுத் திட்ட ஏற்பாடு (ரூ. மில்) | கட்டுநிதி பெற்றுக்கொள்ளப்பட்டது (ரூ. மில்) | செலவினம் (ரூ. மில்) | செலவினம் (%) |
|---|---|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | | | | |
| சம்பளங்கள் ஆளணி வேதனாதிகள் | 50,460 | 56,680 | 45,982 | 91 |
| ஏனைய செயற்பாட்டுச் செலவினங்கள் | 63,000 | 44,310 | 61,269 | 97 |
| **கூட்டுத் தொகை** | 113,460 | 100,990 | 107,161 | 94 |
| **மூலதனச் செலவினம்** | | | | |
| ஏனையவை | 16,200 | 7,500 | 9,487 | 59 |
| **கூட்டுத் தொகை** | 129,660 | 108,490 | 116,648 | 90 |

தவிசாளர்,

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்

**காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் 31.12.2022 ஆந் திகதியுடன் நிறைவுற்ற நிதிக் கூற்றுகள் தொடர்பிலும் ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குறுத்தல் ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பிலும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகம் வழங்கும் அறிக்கை.**

---

1. **நிதிசார் கூற்றுகள்**

1.1. **தகுதிபெறும் அபிப்பிராயம்**

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் 31.12.2022 ஆந் திகதியுடன் நிறைவுற்ற ஆண்டுக்கான நிதிசார் கூற்றுகளின் கணக்காய்வு 31.12.2022 ஆந் திகதி வரையிலான வருமானம் மற்றும் செலவினங்களின் கூற்றினையும், ஒப்புரவு ரீதியான மாற்றங்கள் பற்றிய கூற்றினையும், காசுப் புழக்கம் பற்றிய கூற்றினையும் உள்ளடக்கி முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் விவரத் தொகுப்பினை உள்ளடக்கிய நிதிசார் கூற்றுகள் பற்றிய குறிப்புகளையும் கொண்டு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 154 (1) உடன் சேர்த்து வாசிக்கக் கூடிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அமைவாக எனது வழிகாட்டலின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இந்த அறிக்கையில் காணப்படும் நான் கருத்திற்கொள்கின்ற எனது அவதானிப்புகளும் அபிப்பிராயங்களும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

1.2. எனது அபிப்பிராயத்தின் அடிப்படையில், இந்த அறிக்கையின் **தகுதிபெறும் அபிப்பிராயத்திற்கான அடிப்படைகள்** என்ற பிரிவில் விவரிக்கப்பட்ட விடயங்களின் செயல்வலு தவிர, நிறுவனத்தின் 31.12.2022 ஆந் திகதி வரையில் உள்ள நிதிசார் நிலைமை பற்றிய உண்மையானதும் நியாயமானதுமான பார்வையை நிதிக் கூற்றுகள் வழங்குகின்றன. அத்துடன் நிறுவனத்தின் நிதிசார் செயற்பாடுகளும் காசுப் புழக்கங்களும் இலங்கையின் அரச துறையின் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாகவே நிறைவுற்றுள்ளது.

1.2.1. **தகுதிபெறும் அபிப்பிராயத்திற்கான அடிப்படைகள்**

(i) பின்பற்றப்பட்ட கணக்கீட்டு நியமம் நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்படல் அவசியமாக இருக்கின்ற போதிலும் அலுவலகம் இலங்கை அரச துறையின் கணக்கீட்டு நியமங்களையே பின்பற்றியுள்ளது. எனவே அது நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்படவில்லை.

(ii) மதிப்பாய்வுக்குட்பட்ட ஆண்டுக்கான வாகனப் படிகளுக்கான கணக்கு ரூபா.2,383,333.00 ஆகக் காணப்படுகின்ற போதிலும் கணக்குகளில் ரூபா.2,433,633.00 தொகை காட்டப்பட்டுள்ளது. அந்த வகையில் வாகனப் படிகளுக்கான தொகை ரூபா.50,300 மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

(iii) தவிசாளருக்கும் ஏனைய ஆணையாளர்களுக்கும் செலுத்த வேண்டிய 2021 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதத்துக்கான மாதாந்த படி ரூபா.169,840 மதிப்பாய்வுக்குட்பட்ட ஆண்டுக்கான செலவினக் கணக்குகளில் கொண்டு வந்து சேர்க்கப்பட்டுள்ளது. அத்தொகையைக் கொண்டு மதிப்பீட்டு ஆண்டின் மாதாந்த படிகளின் செலவினங்கள் பற்றிய கணக்கு மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

(iv) 2021 ஆம் ஆண்டுக்கான கணக்குகளில் சேர்க்கப்பட வேண்டிய 9 கூறுகளுக்குச் செலுத்தப்பட்ட தொகையான ரூபா.366,551.00 மதிப்பீட்டு ஆண்டின் செலவினக் கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது. இதன் விளைவாக குறித்த தொகையைக் கொண்டு ஆண்டுக்கான மிகைக் கொடுப்பனவுகள் குறைவாகக் கணக்குகளில் காட்டப்பட்டுள்ளன.

(v) மதிப்பீட்டு ஆண்டிற்குட்பட்ட அலுவலகத்தின் பொருட்களின் தேய்மானத் தொகையாக ரூபா.477,600.00 உள்ளது. ஆனால் கணக்குகளில் அவை ரூபா.469,750.00 ஆகக் காட்டப்பட்டுள்ளன. அந்த வகையில் ஆண்டுக்கான தேய்மானப் பெறுமதியாக ரூபா. 7,850.00 குறை மதிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

(vi) அலுவலகத்தின் கணக்குப் புத்தகங்களில் வாகனங்களின் பெறுமதிகள் உள்ளடக்கப்படாதுள்ள போதிலும் மூன்று வாகனங்களுக்கான பழுதுபார்ப்புச் செலவாக அலுவலகத்தினால் ரூபா. 302,722.00 தொகை செலவு செய்யப்பட்டுள்ளது.

(vii) மதிப்பீட்டு ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட அட்டுறு செலவினப் பதிவாகிய ரூபா. 3,843,088.00 இற்கு அமைவாக, அட்டுறு செலவினமாகிய ரூபா. 67,183.00 தொகையானது ஆண்டிற்கு மேலும் சேர்க்கப்பட்டுள்ளதுடன் அவ்வாறு சேர்க்கப்பட்ட பெறுமதித் தொகை பற்றிய ஏனைய குறிப்புகள் பற்றிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், இவ்வாண்டின் அட்டுறு செலவினத் தொகை ரூபா. 3,446,513.00 தீர்ப்பனவு செய்யப்பட்டு ஆண்டு இறுதியில் ரூபா. 463,758.00 தொகை அட்டுறு செலவினமாகக் காட்டப்பட்டுள்ள போதிலும், மதிப்பீட்டு ஆண்டிற்குட்பட்ட தற்போதைய பொறுப்புகள் என்ற விடயத்தின் கீழ் கணக்குகளில் அத்தொகையைக் காட்டுவதற்குப் பதிலாக தேறிய சொத்துகள் என்ற பகுதியில் அத்தொகையானது உள்ளடக்கப்பட்டுள்ளது.

ய. ரூபா. 663,015 தொகையினை மதிப்பீட்டு ஆண்டில மீட்டுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அது 31.12.2021 வரையில் இழப்பீடுகளுக்கான அலுவலகத்திடமிருந்து மீள்செலுத்தப்பட்டிருக்க வேண்டும். அது தேறிய சொத்துகளிலிருந்து தள்ளுபடி செய்யப்பட்டு கழிக்கப்பட்டுள்ளது. அதன் விளைவாக, குறித்த தொகை மூலம் தேறிய சொத்துகள் குறைமதிப்பாகக் காட்டப்பட்டுள்ளன. மேலும், குறித்த தொகையைத் தள்ளுபடி செய்வதற்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட அனுமதி கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாகவே எனது கணக்காய்வை மேற்கொண்டுள்ளேன். அத்தகைய நியமங்களின் கீழான எனது பொறுப்புகள் எனது அறிக்கையின் நிதிசார் கூற்றுகள் தொடர்பில் கணக்காய்வு மேற்கொள்ளும் போது கணக்காய்வாளர் கொண்டிருக்க

வேண்டிய பொறுப்புகள் என்ற பகுதியில் மேலதிகமாக விவரிக்கப்பட்டுள்ளன. எனது தகுதிவாய்ந்த அபிப்பிராயத்தை மேற்கொள்வதற்கான அடிப்படையாக கணக்காய்வுக்காக நான் பெற்றுக்கொண்ட சான்றுகள் போதுமானவையாகவும் பொருத்தமானவையாகவும் உள்ளன என்றும் நம்புகின்றேன்.

### 1.3. நிறுவனத்தின் ஆண்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்குப் பிறகு எனக்கு அனுப்பப்படும் என எதிர்பார்க்கப்படுகின்ற நிதி நிலைமை பற்றிய அறிக்கைகள் மற்றும் எனது கணக்காய்வு அறிக்கையில் சேர்க்கப்படாமல், நிறுவனத்தின் ஆண்டு அறிக்கை 2020 இல் சேர்க்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் நிறுவனத்தின் ஏனைய தகவல்கள் என்றே கொள்ளப்படும். ஏனைய மற்ற தகவல்களுக்கு முகாமைத்துவமே பொறுப்பேற்க வேண்டும்.

நிதிக் கூற்றில் உள்ள எனது அபிப்பிராயத்தில் வெளிப்படுத்தப்படாதுள்ள ஏனைய தகவல்கள் தொடர்பில் எத்தகைய உறுதிப்பாட்டையும் அல்லது கருத்தையும் நான் தெரிவிக்கமாட்டேன்.

எனது கணக்காய்வில் உள்ள நிதிக் கூற்றுகள் மீதான எனது பொறுப்பு, மேலே குறிப்பிடப்பட்ட அடையாளம் காணப்பட்ட அல்லது வேறு வழியில் பெறப்பட்ட தகவல்களைப் பெற்று அவற்றை எனது அறிவிற்குட்பட்ட வகையில் படித்து, அது நிதிக் கூற்றுகளுடன் அளவுகோலாக சரி செய்யப்படவில்லையா என்பதைதைச் சரிபார்ப்பது அறிக்கையிடுவதாகும்.

நிறுவனத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான ஆண்டு அறிக்கையைப் படிக்கின்ற போது, முனைப்பழியுள்ள பிழைகள் அதில் உள்ளதாக நான் முடிவுறுத்தினால் அத்தகைய விடயங்களைத் திருத்திக்கொள்வதற்காக கட்டுப்படுத்தும் திறத்தவர்களுடன் அவ்விடயங்களைக் கலந்துரையாடுதல் வேண்டும். திருத்தப்படாதுள்ள பிழைகள் மேலும் தென்படுமாயின் அவை என்னால் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் அரசியலமைப்பின் உறுப்புரை 154 (6) இற்கு அமைவாக உள்ளடக்கப்படும்.

### 1.4. நிதிசார் கூற்றுகள் தொடர்பில் முகாமைத்துவமும் நிர்வாகப் பொறுப்பாளிகளும் கொண்டுள்ள பொறுப்புகள்

இலங்கையின் அரச துறையின் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக உண்மையாகவும் நியாயமான முறையிலும் நிதிக் கூற்றுகளைத் தயாரிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. மோசடியான முறையிலோ அல்லது பிழையான வகையிலோ ஆவணங்களின் மூலம் பிழையாக அறிக்கையிடப்படாத வகையிலான நிதிக் கூற்றுகளைத் தயாரிப்பதற்கு வசதியாக அத்தகைய உள்ளக கட்டுப்பாடானது முகாமைத்துவம் நிர்ணயிக்கின்றவாறு அமைவது அவசியமானதாகும்.

நிதிக் கூற்றுகளைத் தயாரிக்கின்ற சந்தர்ப்பத்தில் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைக்கவோ அல்லது செயல்பாடுகளை நிறுத்தவோ விரும்பாத வரையில், அல்லது நிலவும் பிரச்சினையுடன் தொடர்புடைய விடயங்களை வெளிப்படுத்துதல் மற்றும் கணக்கியலில் நிலவும் பிரச்சினைகளின் அடிப்படையைப் பயன்படுத்துதல் போன்றவற்றின் திறனை மதிப்பிடுவது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிர்வாக நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான ஆட்களே நிறுவனத்தின் நிதிசார் அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்வதற்கும் பொறுப்பாளர்களாவர்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் உப பிரிவு 16 (1) இன்படி, நிறுவனம் தனது வருமானம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய சரியான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளைப் பராமரிக்க வேண்டும், இது நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலமுறை நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிக்க உதவுகிறது.

1.5. **கணக்காய்வாளரின் பொறுப்பு**

நிதிக் கூற்றுகள் மோசடியான முறையில் அல்லது பிழையான முறையில் ஆவணங்கள் மூலம் பிழையாக அறிக்கையிடப்படாது உள்ளனவா என்பது குறித்த நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கையினை வெளியிடுவதுமே எனது குறிக்கோள் ஆகும். நியாயமான உறுதிப்பாடு என்பது உச்சபட்ச உறுதிப்பாடாகும். ஆயினும் இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட ஒரு கணக்காய்வு ஆவண ரீதியில் பிழையாக அறிக்கையிடப்பட்டுள்ளமையினை, அவ்வாறு தென்படுமிடத்து, எப்போதும் அவற்றைக் கண்டறியும் என்பதற்கான உத்தரவாதம் கிடையாது. பிழையான அறிக்கையிடல் என்பது மோசடியின் மூலமாகவோ அல்லது பிழை மூலமாகவோ மாத்திரம் ஏற்படுகின்றது. இந்த நிதிக் கூற்றுகளின் அடிப்படையில் தீர்மானம் மேற்கொள்கின்ற பயனர்களது பொருளாதாரத்தில் தனிப்பட்ட வகையிலோ அல்லது கூட்டாகவோ செல்வாக்குச் செலுத்துவதற்கு நியாயமான வாய்ப்பு உள்ளதாகக் எதிர்பார்க்கப்படுகின்ற பட்சத்தில் அவ்விடயங்கள் பிழையான அறிக்கையிடல்களாகக் கொள்ளப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைவான கணக்காய்வு ஒன்றின் ஓர் அங்கமாக, கணக்காய்வு முழுவதும் தொழில்முறைசார் நீதியைப் பிரயோகித்து தொழில்முறைசார் ஐயத்தையும் பேணுகின்றேன். மேலும்

- மோசடி அல்லது பிழை காரணமாக, நிதிக் கூற்றுகள் தவறான முறையில் ஆவண ரீதியாக அறிக்கையிடப்படும் அபாயங்களைக் கண்டறிந்து மதிப்பிடுகிறேன், அந்த அபாயங்களுக்கு பதிலளிக்கும் வகையில் கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்து செயற்படுத்துகிறேன், மேலும் எனது அபிப்பிராயத்துக்கான அடிப்படையை வழங்குவதற்குப் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெறுகிறேன். மோசடி என்பது சதிமோசம், போலி ஆவணப்படுத்தல், வேண்டுமென்ற புறக்கணிப்பு, தவறாகப் பிரதிநிதித்துவம் செய்தல் அல்லது உள் கட்டுப்பாட்டை மீறுதல் ஆகியவற்றுடன் தொடர்புபடும் என்பதால், மோசடியின் விளைவாக ஏற்படும் தவறான அறிக்கையைக் கண்டறியாமல் இருப்பதால் நேரும் ஆபத்து பிழையின் விளைவாக ஏற்படும் ஆபத்தை விட உயர்ந்த ஆபத்தாகும்.
- கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக சூழ்நிலைகளுக்குப் பொருத்தமானவையாக அமைகின்ற கணக்காய்வு தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய புரிதலை நான் பெற்றுள்ளேன், ஆனால் நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் செயற்றிறன் குறித்த கருத்தை வெளிப்படுத்தும் நோக்கத்திற்காக அல்ல.
- நான் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் சரியான தன்மை மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் செய்யப்பட்ட தொடர்புடைய வெளிப்பாடுகள் போன்றவற்றை மதிப்பீடு செய்கிறேன்.

- கணக்கியல் மற்றும் பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில், முகாமைத்துவத்தின் சரியான பயன்பாட்டின் சரியான தன்மையை முடிவு செய்கிறேன், நிறுவனத்தில் நிலவும் பிரச்சினை ஒன்று தொடர்கின்ற வகையில் நிறுவனத்தின் செயற்றிறனில் குறிப்பிடத்தக்க சந்தேகத்தை ஏற்படுத்த வாய்ப்பு உள்ளவாறு நிறுவனத்தின் நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பான ஆவணங்களில் நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பதையும் முடிவு செய்கின்றேன். ஒரு நிச்சயமற்ற தன்மை இருப்பதாக நான் முடிவு செய்தால், நிதிக் கூற்றுகளில் உள்ள சம்பந்தப்பட்ட வெளிப்பாடுகள் அல்லது அத்தகைய வெளிப்பாடுகள் போதுமானதாக இல்லாவிட்டால், எனது அபிப்பிராயத்தை மாற்றுவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையில் அவ்விடயம் குறித்த கவனத்தை ஈர்ப்பது எனக்கு அவசியமாகின்றது. எனது கணக்காய்வாளர் அறிக்கையின் திகதி வரையில் பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையிலேயே எனது முடிவுகள் உள்ளன. எனினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிபந்தனைகள் ஆகியன நிறுவனத்தை ஒரு பிரச்சினையாகக் காட்டுவதை நிறுத்தக்கூடும்.
- நிதிக் கூற்றுகளின் ஒட்டுமொத்த சமர்ப்பணம், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம், வெளிப்படுத்தல்கள் உட்பட, நிதிக் கூற்றுகள் நியாயமான சமர்ப்பிப்பை அடையும் விதத்தில் அடிப்படைக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனவா என்பதையும் மதிப்பீடு செய்கிறேன்.

  எனது கணக்காய்வின் போது நான் கண்டறிந்த உள்ளகக் கட்டுப்பாட்டில் உள்ள குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உட்பட, குறிப்பிடத்தக்க கணக்காய்வுக் கண்டறிகைகள் தொடர்பாக, ஏனைய விடயங்களுடன் சேர்த்து ஆளுகைக்கு பொறுப்பானவர்களுடன் நான் தொடர்பு கொள்கிறேன்.

## 2. சட்டரீதியான மற்றும் ஒழுங்குறுத்தல் ரீதியான தேவைப்பாடுகள் குறித்த அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் பின்வரும் தேவைப்பாடுகளுக்காக திட்டவட்டமான ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது.

2.1.1 பாதகமான அபிப்பிராயத்தை வழங்குவதற்கான காரணியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் விளைவைத் தவிர, கணக்காய்வுக்குத் தேவையான அனைத்து தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுள்ளேன், மேலும் எனது மதிப்பாய்வில் அவதானிக்கப்பட்ட வரையில், 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (அ) இன் தேவைப்பாடுகளக்கு அமைவாக அலுவலகத்தால் தேவைக்கேற்ப முறையான கணக்குப் பதிவுகள் பேணப்பட்டுள்ளன.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (ஙை) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு அமைவாக அலுவகத்தின் நிதிக் கூற்றுகள் கடந்த வருடத்திற்கு ஒப்பான நிலையில் உள்ளன.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (ஐ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு அமைவாக கடந்த வருடத்தில் என்னால் முன்னெடுக்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சிகளின் அடிப்படையில் போதுமான விடயங்களை வரையறுத்து கீழ் குறிப்பிட்ட வெளிப்படுத்தல்களை மேற்கொள்ள எவ்விடயமும் எனது கவனத்திற்கு உட்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாட்டிற்கு அமைவாக அலுவலகத்தின் நிர்வாக சபையின் எவரேனும் உறுப்பினர் ஒருவருக்கு அலுவலகத்துடன் தொடர்புடைய ஏதேனும் உடன்படிக்கை பற்றி நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சாதாரண வியாபாரத்திற்கு அப்பாற்பட்ட தொடர்பு உள்ளதெனவும்

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாட்டிற்கு அமைவாக கீழ் குறித்த அவதானிப்பு தவிர்ந்து ஏதேனும் உரிய எழுத்து மூலமான சட்டம் அல்லது அலுவலகத்தின் நிர்வாக சபையினரால் வெளியிடப்பட்ட வேறு பொதுவான அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் செயற்பட்டுள்ளனர் எனவும்.

| சட்டதிட்டங்கள்.'. விதிமுறைகள் பற்றிய குறிப்பு | | அவதானம் |
|---|---|---|
| (அ) 2020 ஆகஸ்ட் மாதம் 28 ஆந் திகதிய அரசாங்க நிதி சுற்றுநிருப இல 01.'.2020 | | |
| (i) | 9.1 (ஆ) அத்தியாயம் | அலுவலகத்தினால் பதவி நிலை அல்லாத அலுவலர்களுக்கு 8 தடவைகளில் மொத்தமாக ரூபா. 571,730 தற்காலிக இடைக்கால முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) | 9.1 (ஆ) மற்றும் நிதிப்பிரமாணம் 371 (5) | கட்டுநிதி வழங்கப்பட்ட பின்னர் உரிய செயற்பாடு நிறைவடைந்து 10 நாட்களினுள் அப்பணம் மீள வழங்கவேண்டி இருந்தாலும், காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் அலுவலர்கள் 14 தடவைகளில் பெற்றுக்கொண்ட இ கட்டுநிதியைச் செலுத்த 21 தொடக்கம் 245 நாட்கள் வரையான காலப்பகுதி தாமதப்படுத்தப்பட்டிருந்தது. |
| (iii) | 9.1 (ஆ) மற்றும் நிதிப்பிரமாணம் 371 (2) | நிதிப்பிரமாணத்தை மீறி 22 தடவைகளில் 11 அலுவலர்களுக்கு மொத்தமாக ரூபா. 11,892,081 கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. |
| (iv) | 9.1 (ஆ) அத்தியாயம் | ரூபா. 100,000 இற்கும் அதிமாக 22 தடவைகளில் ரூபா. 11,892,081 கட்டுநிதி வழங்கப்பட்டதுடன் அதற்கான அனுமதியை திறைசேரியில் இருந்து பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (v) | 9.1 (இ) மற்றும் நிதிப்பிரமாணம் 371 (4) | குறிப்பிட்ட மற்றும் தேவையற்ற பணிகளுக்கு கட்டுநிதி எடுக்கக்கூடாது என்று கணக்கெடுப்பு அதிகாரி கூறியிருந்தாலும், 2022ம் ஆண்டு ஜனவரி மாதம் 24ம் திகதி அலுவலர் ஒருவரால் பெறப்பட்ட ரூபா. 25,000.'.- தொகை செலவின்றி 2022ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10ம் திகதி அன்று மீண்டும் பணமாக செலுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) 2016 டிசம்பர் மாதம் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றுநிருபத்தின் 3 ஆம் பந்தி | | அலுவலகத்தில் பயன்படுத்தப்படும் வாகனங்கள் தொடர்பாக, சுற்றுநிருபத்திற்கு அமைவான எரிபொருள் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2011 பெப்ரவரி மாதம் 09 ஆந் திகதிய 13/2008 (ஐ) ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றுநிருபம் மற்றும் 2019 மே 31ஆந் திகதிய 13/2008 (எ) ஆம் இலக்க திருத்தம்செய்யப்பட்ட அரசாங்க நிர்வாக சுற்றுநிருபம் | (i) | சுற்றுநிருபத்தின் நிபந்தனைகளை மீறி இரு அலுவலர்களுக்கு ரூபா. 47,995 இற்கு எரிபொருள் கொடுப்பனவு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. |
| | (ii) | பெற்றோல் ஒரு லீற்றரின் விலை ரூபா. 254 ஆக இருக்கையில் ரூபா. 338 என கணக்கிட்டமையின் காரணத்தினால் ஏப்ரல் மாதத்தில் அலுவலர் ஒருவருக்கு ரூபா. 12,180 கொடுப்பனவு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட ''நு/ஊழு/ழுடுஜ/ஊஜசுஊருடுயுசுஒ மற்றும் 2015 மே மாதம் 25 ஆந் திகதிய அரசாங்க முயற்சியாண்மை சுற்றுநிருபம் ''நுனு1/2015 இன் 3.5ம் பந்தி | (i) | அலுவலகத்தில் போக்குவரத்து மற்றும் எரிபொருள் கொடுப்பனவைப் பெறும் நான்கு அலுவலகர்கள் கையிருப்பு வாகனங்களை பயன்படுத்தும் போது சுற்றுநிருப அறிவுறுத்தல்களை பின்பற்றவில்லை. |
| | (ii) | 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25 ஆந் திகதி தொடக்கம் பெப்ரவரி மாதம் 01 ஆந் திகதி வரை வட மாகாணத்தில் இடம்பெற்ற நடமாடும் சேவையில் பங்குபற்ற போக்குவரத்துக் கொடுப்பனவைப் பெற்றுக்கொண்ட இரு அலுவலர்கள் தனியார் நிறுவனம் ஒன்றில் இருந்து இரு கார் வண்டிகளை வாடகைக்கு பெற்றுக்கொண்டதுடன் அதற்காக அலுவலகத்தினால் ரூபா. 141,860 தொகை செலவழிக்கப்பட்டது. |
| (உ) அரச நிதிப்பிரமாணக் கோவை (i) நிதிப்பிரமாணம் 1646 | | காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தினரிடம் காணப்படும் மூன்று வாகனங்கள் தொடர்பான நாளாந்த வாகன ஓட்டற் படிவங்களும் மாதாந்த விவரத் தொகுப்புகளும் கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 1645 (அ) | அலுவலகத்தில் பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கு, நிதிப்பிரமாணத்தின் படியான தினசரி குறிப்பு (லொக்) புத்தகங்களை இற்றைப்படுத்தி பேணுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்காமை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 110 | நிதிப்பிரமாணத்தின் படி சேதங்கள் மற்றும் இழப்புகள் பற்றிய ஆவணம் இற்றைப்படுத்தி பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 315<br>நிதிப்பிரமாணம் 880<br>2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28 ஆந் திகதிய 01.'.2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 9 ஆம் பந்தி | பிணை வைப்புச்செய்ய வேண்டிய அலுவலக உத்தியோகத்தர்கள் பிணைத் தொகையை வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. |
| (v) | நிதிப்பிரமாணம் 395 (ஆ) | தயார் செய்யப்பட்ட வங்கி ஒப்பீடுகள் கணக்காய்வாரள நாகத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 01.'.2021ம் இலக்க மற்றும் 2021ம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆந் திகதிய அரசாங்க முயற்சியாண்மைக்கான நிர்வாக கட்டுப்பாடு பற்றிய வழிகாட்டல் |
| (i) | அத்தியாயம் 04 | வழிகாட்டல்களின் படி கணக்காய்வு குழுக்களை அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை |
| (எ) | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் 16 (2) | சட்டத்திற்கமைய வருடாந்த நிதிக் கூற்றுகளுடன் வருடாந்த செயலாற்றல் அறிக்கையை சமர்ப்பிப்பதற்கானநடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. |

2.2.3 2018ம் ஆண்டின் 19ம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) உறுப்புரையில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கமைய கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானங்கள் தவிர்ந்த அலுவலகத்தின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு பொருந்தாத வகையில் செயற்பட்டுள்ளனர் எனவும்

| | அதிகாரங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகள் | அவதானங்கள் |
|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (நிறுவுதல், நிர்வாகம் மற்றும் பணிகளை நிறைவேற்றுதல்) சட்டத்தின் பிரிவு ஐஐ இன் 10 | 2022ம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்திற்கு ஏற்றவாறு, அப்பிரிவுகளால் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. நிறுவனம் அமைக்கப்பட்டதன் முக்கிய நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கு தேவையான வகையில் |

| | | |
|---|---|---|
| | (1) இல் காட்டப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்ற அலுவலகத்தின் பிரதான 3 பிரிவுகளான தேடுதல் மற்றும் விசாரணை, தொடர்பாடல் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு, மற்றும் நிதி மற்றும் வழங்கல் பிரிவுகளில் நேரடியாக தொடர்புபடல் | இம்மூன்று பிரிவுகளும் செயற்படாமையின் காரணமாக அலுவலகத்தின் நோக்கங்களையும் இலக்குகளையும் அடைந்துகொள்ள முடியாமல் போனமை அவதானிக்கப்பட்டது. |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் நிறுவுதற்குரிய சட்டத்தின் பிரதான பணிகளுள், காணாமல் போன ஆட்கள் தொடர்பான சம்பவங்கள் பற்றிய உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்கு உரிய அதிகாரிக்கு பரிந்துரைகளை சமர்ப்பித்தல் மற்றும் காணாமல் போன ஆட்கள் மற்றும் அவர்களின் உறவினர்களின் உரிமைகளைளையும் பிணைப்புக்களையும் பாதுகாத்தல் | 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வரையாக அலுவலகத்திற்கு மொத்தமாக 14,988 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதுடன் அன்றைய தினம் வரையில் 2,389 முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட்டிருந்தன. அதற்கமைய, கிடைக்கப்பெற்ற மொத்த முறைப்பாடுகளை ஒப்பிட்டுப்பார்க்கும் போது விசாரணைசெய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை நூற்றுக்கு 15 சதவீதம் என்ற குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. |

**2.2.4** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கமைய கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானங்கள் தவிர்ந்த அலுவலகத்தின் வளங்களை சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதிமிக்கவையாகவும் உரிய காலப்பகுதியினுள் உரிய சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டு கொள்முதல் செய்து பயன்படுத்தவில்லை எனவும்

(அ) 2022 ஆம் ஆண்டினுள் செயற்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த ரூபா. 5,425,000 இற்குரிய 15 செயற்பாடுகளுள் எச்செயற்பாடும் மதிப்பீட்டு ஆண்டினுள் செயற்படுத்தப்படவில்லை.

(ஆ) செயற்பாட்டுத் திட்டமிடல் மற்றும் அதன் முன்னேற்றம் தொடர்பில் ஆராய்ந்துபார்க்கும் போது 5 பிரிவுகளுக்குரிய 21 செயற்பாடுகளுக்கு உரிய வகையில் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அதன் முன்னேற்றமும் நூற்றிற்கு 50 சதவீதத்திற்கும் குறைவான அளவில் காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டது.

(இ) செயற்பாட்டுத் திட்டத்தில் பல்வேறு செயற்பாடுகளில் பௌதீக முன்னேற்றம் காணப்படினும், நிதிசார் முன்னேற்றம் குறிப்பிடப்படவில்லை.

(ஈ) 2022 ஆம் ஆண்டினுள் ரூபா. 9,000,000 செலவில் விசாரணைப் பிரிவின் ஒத்துழைப்புடன் விசாரணை நடாத்துவதற்கும் 9,000 கோப்புக்களை இற்றைப்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தாலும், அவ்வருடத்தின் இறுதியில் ரூபா. 20,580,368 செலவழித்து 2389 கோப்புக்கள் மாத்திரமே இற்றைப்படுத்தப்பட்டிருந்தன. அதன்படி மதிப்பிடப்பட்ட தொகையை விட நூற்றுக்கு

226 சதவீதத்தினால் தொகை அதிகரித்திருந்ததுடன் அதன்படி உரியவகையில் தொகை மதிப்பிடப்பட்டிருக்கவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.

(உ) அலுவலகத்தின் மானிட வளங்கள் மற்றும் நிர்வாகப் பிரிவினரால் அலவலர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை நடாத்துவதற்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்திற்கு ரூபா. 148,638 தொகை செலுத்தப்பட்டிருந்தாலும் வருடத்தினுள் எப்பரீட்சையும் நடாத்தப்படவில்லை.

### 2.3 வேறு விடயங்கள்

பின்வரும் அவதானங்களும் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மட்டக்களப்பு மற்றும் மாத்தறை அலுவலகங்களுக்காக முறையே ரூபா. 100,000 மற்றும் ரூபா. 150,000 மாதாந்த கூலி அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டடங்களுக்கான குத்தகை ஒப்பந்தங்கள் முறையே 2022 ஆகஸ்ட் மாதம் 2022 ஜுன் மாதங்களில் முடிவடைந்தாலும், மீண்டும் அக்குத்தகை ஒப்பந்தங்களை புதுப்பிப்பதற்கோ வேறு கட்டடங்களுக்கு இடம்மாறிச் செல்வதற்கோ அலுவலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) 2022 ஆம் ஆண்டு ஏப்பிரல் 26 ஆந் திகதிய அரச செலவினங்களை கட்டுப்படுத்துவது தொடர்பான 03/2022 ஆம் இலக்க தேசிய வரவுசெலவு சுற்றுநிருபத்தின் பந்தி 2 இற்கமைய அரச செலவினங்களை மட்டுப்படுத்தல் அரச நிறுவனங்களினால் கடுமையாக பின்பற்றப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தாலும் அதனை மீறிய செலவுகளுடன் ஐந்து பிராந்திய அலுவலகங்களுக்காக மதிப்பீட்டு வருடத்தில் அலுவலகத்தினால் ரூபா. 20,629,346 செலவிடப்பட்டதுடன், அவ்வருடத்தினுள் இப்பிராந்திய அலுவலகங்களுக்காக 274 முறைப்பாடுகள் மாத்திரம் பதிவுசெய்தல் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

(இ) அங்கீகரிக்கப்பட்ட பதவி வெற்றிடத்தில் 7 மொழிபெயர்ப்பாளர்கள் இருப்பினும், ஒருவரையேனும் ஆட்சேர்ப்புசெய்யாமையின் காரணமாக 2022ம் ஆண்டில் வெளியில் இருந்து தெரிவுசெய்த 10 மொழிபெயர்ப்பாளர்களுக்கு ரூபா. 3,082,880 தொகைப் பணம் மொழிபெயர்ப்புக் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2022 ஆம் ஆண்டினுள் கட்டட வாடகையாக அலுவலகத்தினால் ரூபா. 22,377,622 வெளித்தரப்பினருக்கு செலுத்தப்பட்டிருப்பதுடன், இதற்கு மேலதிகமாக இக்கட்டடத்திற்காக ஒரு வருடத்தினுள் துப்புரவு செய்தல் சேவைக் கட்டணங்கள், பாதுகாப்பு சேவைகள், தூய்மைப்படுத்தல் செயற்பாடுகள், தண்ணீர் மற்றும் மின்சாரத்திற்கென ரூபா. 4,620,934 செலுத்தப்பட்டுள்ளன. இச்செலவுகள் 15 அலுவலர்கள் போன்ற சிறு எண்ணிக்கையினருக்கு மேற்கொள்ளப்பட்ட செலவுகளாக கண்டறியப்பட்டுள்ளன.

(உ) அலுவலக ஆரம்பத்தில் 255 அலுவலர்களுடனான ஊழியர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தாலும், தற்போது இந்நிறுவனத்தின் செயற்பாடுகள் 31 அலுவலர்களுடன் குறைவான எண்ணிக்கையினரால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றமையால் உரிய வசதிகளை ஏற்படுத்துகையில் இவ்விடயம் பற்றி கவனத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

டபிள்யு.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் நாயகம்

# நிதி அறிக்கை
# 2024
# காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்

**காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்**

**உள்ளடக்கம்**

1. கணக்காய்வாளர் நாயகத்துக்கு
2. நிதியியல் நிலைமைக் கூற்று
3. நிதியியல் செயலாற்றல் கூற்று
4. காசுப் பாய்ச்சல் கூற்று
5. நிதியியல் கூற்றுக்கான குறிப்புக்கள்
I. சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள்
II. பெறுகைக்குட்பட்டவை
III. பணிக்கொடை வழங்கல்
IV. அட்டுறு செலவுகள்
V. தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் பற்றிய கூற்று
VI. வருமானம்
VII. தனியாள் செலவுகள்
VIII. விநியோகங்கள்/ பயன்படுத்தப்படும் நுகர்ச்சிப்பொருட்கள்
IX. பராமரிப்புச் செலவுகள்
X. சேவைகள்
XI. 2024 ஆண்டிற்கான தேய்மானம்
XII. காசுப் பாய்ச்சல் கூற்றிற்கான குறிப்புக்கள்
XIII. வரவுசெலவு மற்றும் உண்மைச் செலவுகள் - 2024
XIV. நிதி அமைச்சிடமிருந்தா காசு அல்லா மானியம் - 2024

6. கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் வெளிப்படுத்தலின் சுருக்கம்

## காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்

இல. 40, 03ம் மாடி,
புத்தகமுவ வீதி,
இராஜகிரிய

எனது இல }                    உமது இல}                    திகதி } 2025.05.21

கணக்காய்வாளர் நாயகத்துக்கு

**நிதிக் கூற்றுக்கள் தொடர்பிலான முகாமைத்துவப் பிரதிநிதித்துவம்**

01 ஜனவரி 2024 முதல் 31 டிசம்பர் 2024 வரையிலான காலகட்டத்தில் நிதி நிலை மற்றும் செயற்பாடுகளின் முடிவுகள் ஆகிய அனைத்து பொருள்சார் விடயங்கள் தொடர்பிலும் நிதிக் கூற்றுக்கள் நியாயமான வகையில் முன்வைக்கப்பட்டுள்ளதா என்பது தொடர்பிலான ஒரு கருத்தை வெளிப்படுத்தும் நோக்கம்கருதி காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் (OMP) 31 டிசம்பர் 2024 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக இந்தக் கடிதத்தை வழங்குகிறோம். காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (OMP) இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக செயற்படுகின்றது. இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க, நிதி நிலை, செயற்பாடுகளின் முடிவுகள் ஆகியவற்றின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பிலான நியாயமான பிரதிநிதித்துவத்துக்கு நாங்கள் பொறுப்பு என்பதை உறுதிப்படுத்துகிறோம்.

இந்தக் கடிதத்தில் உள்ள சில பிரதிநிதித்துவங்கள் பொருள் சார்ந்த விடயங்களுக்கு மட்டுமே வரையறுக்கப்படுகின்றன. இங்கு பொருட்கள் எனக்கருதப்படுவது அளவைப் பொருட்படுத்தாமல் விடயப் பொருட்களினையே ஆகும். கணக்கீட்டு தகவலின் தவிர்ப்பு அல்லது தவறான கூற்றை இப்பொருட்கள் உள்ளடக்கியிருந்தால், சூழவுள்ள சூழ்நிலைகளின் அடிப்படையில் பார்க்கும்போது இத்தகவலை சார்ந்திருக்கும் ஒரு நியாயமான நபரின் தீர்ப்பானது அத்தகைய தகவலின் தவிர்ப்பு அல்லது தவறான கூற்றினால் மாற்றமுறுவதற்கும் அல்லது செல்வாக்குக்கு உட்படுவதற்கும் வாய்ப்புள்ளது.

31.12.2024 இன் படி, கணக்காய்வின் போது உங்களுக்குச் செய்யப்பட்ட பின்வரும் பிரதிநிதித்துவங்களை நாங்கள் எங்கள் அறிவுக்குட்பட்ட வகையிலும் மற்றும் நம்பிக்கைக்கு அமைவாகவும் உறுதிப்படுத்துகிறோம்.

1. மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிதிக் கூற்றுகள் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நியாயமான முறையில் முன்வைக்கப்பட்டுள்ளதுடன் முந்தைய ஆண்டுக்கு இணங்கவும் தயாரிக்கப்பட்டுள்ளன.

2. கணக்காய்வாளர் நாயகத்துக்கு அனைத்து ஆவணங்களையும் நாங்கள் சமர்ப்பித்துள்ளோம். அவ்வகையில்,

அ. கணக்காய்வாளர் நாயகத்தால் கோரப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் ஏனைய தகவல்கள்

ஆ. 31 டிசம்பர் 2024 இல் முடிவடையும் ஒரு வருட காலத்திற்கான நிதிக் கூற்றுக்கு ஒப்புதல் அளித்த பணிப்பாளர் சபையின் 137 ஆவது நீடிக்கப்பட்ட சபைக் கூட்டத்தின் கூட்ட அறிக்கைகள்

3. நிதி அல்லது பிற அறிக்கையிடல் நடைமுறைகளுக்கு இணங்காமை குறித்து அல்லது குறைபாடுகள் தொடர்பில் ஒழுங்குறுத்தல் முகவர்களிடமிருந்து எந்த தகவல்களும் பெறப்படவில்லை.

4. நிதிக் கூற்றுகளின் அடிப்படையிலான கணக்கீட்டு அறிக்கைகளில் சரியாகப் பதிவு செய்யப்படாத பொருள்சார் பரிவர்த்தனைகள் எதுவும் இல்லை.

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் 2016 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலக (ஸ்தாபனம். நிர்வாகம் மற்றும் செயல்பாடுகளை நிறைவேற்றுதல்) சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஒரு நிரந்தர நிறுவனமாகும்.

பொதுவான தொலைபேசி இல: மின்னஞ்சல் ompsrilanka@gmail.com

5. பின்வருவன எவையும் இந்நிறுவனத்தில் இல்லை:

அ. உள்ளக கட்டுப்பாட்டில் குறிப்பிடத்தக்க வகிபங்கினைக் கொண்ட மோசடியான தொழில் பெறுநர்களோ அல்லது முகாமைத்துவமோ இங்கில்லை.

ஆ. நிதிக் கூற்றுகளில் பொருள்சார் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவாறான மோசடியான ஏனைய நபர்களும் இங்கில்லை.

6. நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அக்கறையில்லாத பணிப்பாளர் சபையின் எந்தவொரு உறுப்பினருக்கும் நிறுவனத்துக்கும் இடையே உள்ள அனைத்து ஒப்பந்தங்களும் தரப்பட்டுள்ளன..

7. நிதிக் கூற்றுகளில் பின்வருபவை முறையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன அல்லது வெளிப்படுத்தப்பட்டுள்ளன:

அ. காசுப் பற்றுச்சீட்டுக்கள், கொடுப்பனவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள், தொடர்புடைய தரப்பினர்களுக்கான பெறத்தக்கவைகளும் செலுத்தத்தக்கவைகளும் உள்ளிட்ட உரிய தரப்பினர் கொடுக்கல்வாங்கல்கள்

8. பின்வருவன எவையும்:

அ. சட்டங்கள் அல்லது ஒழுங்குமுறைகளின் மீறல்கள் அல்லது சாத்தியமான மீறல்கள் அவற்றின் விளைவுகள் நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்படுவதைக் தற்செயலாக இடம்பெற்றதாக கருத்திற்கொள்ள வேண்டியவாறான மீறல்கள் எதுவும் இடம்பெறவில்லை.

ஆ. பெறப்பட அல்லது வெளிப்படுத்தப்பட தேவைப்படும்வாறாக தற்செயலான ஏனைய பொறுப்புகள் அல்லது ஆதாயம் அல்லது இழப்பு என எதுவும் இல்லை.

9. இணக்கமின்மையின் போது நிதிக் கூற்றுகளில் பொருள்சார் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒப்பந்த உடன்படிக்கைகளின் அனைத்து அம்சங்களையும் இந்த நிறுவனம் தொகுத்துள்ளது.

எங்களது அறிவு மற்றும் நம்பிக்கைக்கமைய, மேற்கூறிய நிதிக் கூற்றுகளில் சரிசெய்தல் அல்லது வெளிப்படுத்துதல் ஆகியவற்றை தேவைப்படுத்தும் நிகழ்வுகள் எதுவும் ஐந்தொகைத் திகதியைத் தொடர்ந்தும் இந்தக் கடிதத்தின் திகதியிலும் இடம்பெறவில்லை.

……………………………………

J.P.N.C ஜயகொடி (பதில்) பணிப்பாளர் (நிதி மற்றும் கொள்வனவு)

**காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலக சபையின் சார்பாக**

…………………………………..

மகேஷ் கட்டுலந்த LLM, சட்டத்தரணி
தலைவர்

……………………

S.D.A தாஸிம்
சபை உறுப்பினர்

……………………
கலாநிதி. அஜித் தென்னகோன்
சபை உறுப்பினர்

திகதி: 21/05/2025

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் 2016 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (ஸ்தாபனம். நிர்வாகம் மற்றும் செயல்பாடுகளை நிறைவேற்றுதல்) சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஒரு நிரந்தர நிறுவனமாகும்.

பொதுவான தொலைபேசி இல: மின்னஞ்சல் ompsrilanka@gmail.com

**காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுலவகம்**
**நிதியியல் நிலைமைக் கூற்று**

**2024 திசெம்பர் 31 இறுதியிலுள்ளவாறு**

| <u>**சொத்துக்கள்**</u> | குறிப்பு | 2024 ரூ. | 2023 ரூ. |
|---|---|---|---|
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| சரக்குகள் - நுகர்ச்சிப்பொருட்கள் | | 527,090 | 161,214 |
| **நடைமுறையில் அல்லாத சொத்துக்கள்** | | | |
| சொத்து, ஆலை மற்றும் உபகரணம் | 1 | 25,414,974 | 19,661,152 |
| பெறுகைக்குட்பட்டவை | 2 | 137,692 | 137,692 |
| **மொத்த சொத்துக்கள்** | | **26,079,756** | **19,960,057** |
| <u>**பொறுப்புகள்**</u> | | | |
| **நடைமுறையில் அல்லாத பொறுப்பு** | | | |
| பணிக்கொடை வழங்கல் | 3 | 3,688,220 | 2,460,503 |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| அட்டுறு செலவுகள் | 4 | 1,248,864 | 7,767,755 |
| **மொத்த பொறுப்புகள்** | | **4,937,084** | **10,228,258** |

<u>**தேறிய சொத்துக்கள்/ஒப்புரவு**</u>

| | | | |
|---|---|---|---|
| தேறிய சொத்துக்கள் | | 21,142,672 | 9,731,800 |
| மொத்த தேறிய சொத்துக்கள் | 5 | 21,142,672 | 19,960,057 |

**தெளிவுபடுத்தல்**

தரப்பட்டுள்ள மேற்படி நிதியியல் கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இலுள்ளவாறு அலுவல்களின் உண்மையானதும் நியாயமானதுமான நோக்காகும் என உறுதிப்படுத்துகின்றோம்.

ஜே.பி.என்.சி. ஜயகொடி
பணிப்பாளர் (நிதி மற்றும் கொள்முதல்) பதில்

கலாநிதி ஜே. தற்பரன்
நிறைவேற்றுப் பணிப்பாளர்

நிதியியல் கூற்றுக்களைத் தயாரித்து வழங்குவது பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும். இந்நிதியியல் கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பாக கையொப்பமிடப்பட்டுள்ளன.

……………………………………
மகேஷ் கட்டுலந்த LLM, சட்டத்தரணி
தலைவர்

……………………
கலாநிதி அஜித் தென்னகோன்
சபை உறுப்பினர்

……………………
S.D.A தாஸிம்
சபை உறுப்பினர்

## காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்
## 2024 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதியியல் செயலாற்றல் பற்றிய கூற்று

| | குறிப்பு | 2024 (ரூ) | 2023 (ரூ) |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| நிதிஅமைச்சிடமிந்தானவருமானதேறிய காசு மானியம் | 6 | 116,649,958 | 77,762,417 |
| **மொத்த வருமானம்** | | **116,649,958** | **77,762,417** |
| **செலவுகள்** | | | |
| தனியாள் செலவுகள் | 7 | 45,727,123 | 31,012,002 |
| பிரயாணச் செலவுகள் | | 33,429 | 2,463,907 |
| விநியோகங்கள்/ நுகர்ச்சிப் பாவனை | 8 | 6,394,764 | 3,699,097 |
| பராமரிப்புச் செலவுகள் | 9 | 6,270,911 | 1,476,286 |
| சேவைகள் | 10 | 46,958,362 | 44,801,923 |
| தேய்மானம் | 11 | 7,413,480 | 5,854,577 |
| **மொத்த செலவுகள்** | | **112,798,069** | **89,307,792** |
| மிகைக் கட்டணம்/ குறிப்பிட்ட காலத்திற்கான துண்டுவிழும் தொகை | | 3,851,889 | (11,545,375) |

**காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்**
**காசுப் பாய்ச்சல் கூற்று**
**2024 திசெம்பர் 31 இறுதியிலுள்ளவாறு**

| | குறிப்பு | 2024 (ரூ) | 2023 (ரூ) |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | |
| நிதி அமைச்சிடமிந்தான தேறிய காசுப் பாய்ச்சல மானியம் | | 108,450,699 | 86,819,561 |
| **மொத்த பற்றுச்சீட்டுக்கள்** | | **108,450,699** | **86,819,561** |
| தனியாள் செலவுகள் | **12** | 45,892,797 | 31,440,566 |
| பிரயாணச் செலவுகள் | **13** | 69,909 | 2,631,390 |
| விநியோகங்கள்/ நுகர்ச்சிப் பாவனை | **14** | 6,849,961 | 3,517,947 |
| பராமரிப்புச் செலவுகள் | **15** | 6,375,183 | 1,442,661 |
| சேவைகள் | **16** | 43,603,218 | 38,729,852 |
| **மொத்த செலவுகள்** | | **102,791,068** | **77,762,417** |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்** | | **5,659,631** | **9,057,144** |

| | | | |
|---|---|---|---|
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | |
| தளபாடங்கள் மற்றும் பொருத்துதல்கள் | 49,265 | | - |
| அலுவலக உபகரணங்கள் | 86,553 | | - |
| இலத்திரனியல் உபகரணங்கள் | 1,864,869 | | - |
| இணைய மற்றும் முறைமை அபிவிருத்தி | 3,658,944 | 5,659,631 | 9,057,144 |
| **காசு மற்றும் காசுக்குச் சமனானவைகளில் தேறிய காசு அதிகரிப்பு/ குறைவு** | | - | - |
| **காலப்பகுதி ஆரம்பத்தில் காசு அல்லது காசுக்குச் சமனானவை** | | - | - |
| **காலப்பகுதி நிறைவில் காசு அல்லது காசுக்குச் சமனானை** | | - | - |

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்
நிதியியல் கூற்றுக்கான குறிப்புக்கள்
2024 திசெம்பர் 31 இறுதியிலுள்ளவாறு

| குறிப்பு 1 | சொத்து ஆலை மற்றும் உபகரண வகை | 01.01.2024 இலுள்ளவாறு மீதி (ரூ.) | மேலதிக ரூ. | மறு மதிப்பீட்டு ஒதுக்கு (ரூ.) | சீராக்கல் (ரூ.) கூடிய | (ரூ.) குறை | 31.12.2024 இலுள்ளவாறு மீதி (ரூ.) |
|---|---|---|---|---|---|---|---|
| மோட்டார் வாகனங்கள் | | | | 8,000,000 | | | 8,000,000 |
| கட்டடம் மற்றும் கட்டமைப்புக்கள் | | 2,320,641 | | | | 484,479 | 1,836,162 |
| தளபாட வீட்டு உபகரணங்கள் | | 10,506,497 | 49,265 | | | | 10,555,762 |
| கணினி மற்றும் தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் | | 20,754,907 | | | | | 20,754,907 |
| அலுவலக உபகரணங்கள் | | 10,371,884 | 86,553 | | | | 10,458,437 |
| தொடர்பாடல் உபகரணங்கள் | | 228,327 | | | | | 228,327 |
| இலத்திரனியல் உபகரணங்கள் | | | 1,864,869 | | | | 1,864,869 |
| இணைய மற்றும் முறைமை அபிவிருத்தி | | | 3,658,944 | | | | 3,658,944 |
| மொத்தம் | | **44,182,256** | **5,659,631** | **8,000,000** | **-** | **484.479** | **57,357,408** |
| **திரண்ட தேய்வு** | | | | | | | |
| கட்டடம் மற்றும் கட்டமைப்புக்கள் | | 159,728 | 91,808.00 | | | | 251,536 |
| தளபாட வீட்டு உபகரணங்கள் | | 5,375,502 | 1050650 | | | | 6,426.152 |
| கணினி மற்றும் தகவல் | | 13,565,06 | 4,150,981.00 | | | | 17,716,087 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தொழில்னுட்ப உபகரணங்கள் | | | | | |
| அலுவலக உபகரணங்கள் | 1,854,926 | 665,678.00 | 7850 | | 2,528,454 |
| தொடர்பாடல் உபகரணங்கள் | 158,051 | 45,665.00 | | | 203,716 |
| இலத்திரனியல் உபகரணங்கள் | 3,407,790 | 1,408,699.00 | | | 4,816,489 |
| இணைய மற்றும் முறைமை அபிவிருத்தி | | | | | - |
| **மொத்தம்** | 24,521,103 | 7,413,481 | 7,850 | - | 31,942,434 |
| | | | எழுதிக் குறைக்கப்பட்ட மதிப்பு | | 25,414,974 |

குறிப்பு 2 பெறத்தக்கவை

| | |
|---|---|
| பிணை உண்டியல் திசெம்பர் 2022 OR இலிருந்து திருப்பிச்செலுத்துதல் | 113,338 |
| APIT முற்கொடுப்பனவு | 8,939 |
| கிடைக்கப்பெறும் வரிப் பகுதி | 15,415 |
| மொத்தம் | 137,692 |

| Note 3 | பணிக்கொடை வழங்கல் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பெயர் | அடிப்படைச் சம்பளம் | COL. (ரூ.) | தொழில்சார் அனுகூலத் தொகை | ஊ.சே.நிதியத்திடமிருந்தான மொத்த வருமானங்கள் | ஆண்டுள் (ரூ.) | மொத்தம் (ரூ). | 50% ரூ. | (ரூ.) |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஜே.தட்பரன் | 91,405 | 22,800 | 3,000 | 117,205 | 6 | 703,230 | 351,615 | |
| | ஏ என் நுவான் | 84,835 | 22,800 | 3,000 | 110,635 | 6 | 663,810 | 331,905 | |
| | டபிள்யு.ஜி. எஸ்.சி.சம்பத் | 80,295 | 22,800 | 3,000 | 106,095 | 1 | 106,095 | 53,048 | |
| | பி.ஜி.எம்.எஸ்.ஆர்.டபிள்யு.குணவர்தன | 80.295 | 22,800 | 3,000 | 106,095 | 1 | 106,095 | 53,048 | 789,616 |
| | மொத்தம் | | | | | | | | |
| | பி.ஏ. ரோமினி | 53,175 | 22,800 | 3,000 | 78,975 | 1 | 78,975 | 39,488 | |
| | கே.டி.ஹேவாவிதாரன | 53,175 | 22,800 | 3,000 | 78,975 | 1 | 78,975 | 39,488 | |
| | எச்.எல்.டி எஸ்.ஜினாவந்தி | 53,175 | 22,800 | 3,000 | 78,975 | 1 | 78,975 | 39,488 | |
| | எப்.ஆர்.எம்.முபாரக் | 57,300 | 22,800 | 3,000 | 83,100 | 1 | 83,100 | 41,550 | |
| | டி.செல்வகுமார் | 60,050 | 22,800 | 3,000 | 85,850 | 6 | 515,100 | 257,550 | |
| | கே.டி.கெஎஷல்யா | 53,175 | 22,800 | 3,000 | 78,975 | 1 | 78,975 | 39,488 | |
| | எஸ்.ஏ.கே. கே.ஜயவர்தன | 53,175 | 22,800 | 3,000 | 78,975 | 1 | 78,975 | 39,488 | 496,538 |
| | மொத்தம் | | | | | | | | |
| கனிஷ்ட முகாமைத்துவம் | | | | | | | | | |
| என்.ஆர். துரம் | | 45,620 | 22,800 | | 68,420 | 6 | 410,520 | 205,260 | |
| ஆர்.ஏ.ஏ. எக்மல் | | 45,620 | 22,800 | | 68,420 | 6 | 410,520 | 205,260 | |
| வி.நிஷாந்தன் ஜூட் பீரிஸ் | | 45,620 | 22,800 | 13,294 | 81,714 | 6 | 490,282 | 245,141 | |
| ஏ.எம்.குலாஸ் | | 44,865 | 22,800 | 13,294 | 80,959 | 6 | 485,753 | 242,876 | |
| ஆர்.எம்.கே.என. ரத்னாயக | | 42,600 | 22,800 | | 65,400 | 1 | 65,400 | 32,700 | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கே.எம்.எப்.நுஸ்லா | | 42,600 | 22,800 | | 65,400 | 1 | 65,400 | 32,700 | |
| வை.முரலி | | 42,600 | 11,400 | | 54,000 | 1 | 54,000 | 27,000 | |
| எல்.ஏ.ஐ.கே.பெரேரா | | 42,600 | 22,800 | | 65,400 | 1 | 65,400 | 32,700 | |
| வை.ஜி.எஸ்.எம்.விக்ரமசிங்க | | 43,355 | 22,800 | | 66,155 | 1 | 66,155 | 33,078 | |
| எச்.ஏ.எஸ்.இ.ஹெட்டிஆரச்சி | | 43,355 | 22,800 | | 66,155 | 1 | 66,155 | 33,078 | |
| டி.கே.காலிந்தி | | 43,355 | 22,800 | | 66,155 | 1 | 66,155 | 33,078 | |
| டபிள்யு.ஜ ி.எஸ்.ஏ.சேனாரத்ன | | 43,355 | 22,800 | | 66,155 | 1 | 66,155 | 33,078 | |
| எஸ்.டபிள்யு.எஸ்.பி.சோமசிறி | | 43,355 | 22,800 | | 66,155 | 1 | 66,155 | 33,078 | |
| என்.டி.மாரசிங்க | | 43,355 | 22,800 | | 66,155 | 1 | 66,155 | 33,078 | |
| வி.பி.எஸ்.எஸ்.பாலசூரிய | | 42,600 | 22,800 | | 65,400 | 1 | 65,400 | 32,700 | |
| எஸ்.என்.விதானபதிரன | | 42,600 | 22,800 | | 65,400 | 1 | 65,400 | 32,700 | 1,287,502 |
| | மொத்தம் | | | | | | | | |
| முகாமைத்துவ உதவியாளர்கள் | | | | | | | | | |
| எஸ்.கே.ஏ.எஸ்.டி.சமரசிங்க | 29,110 | 22,800 | | 51,910 | 6 | 311,460 | 155,730 | | |
| ஆர்.கோபிகா | 29,110 | 22,800 | | 51,910 | 6 | 311,460 | 155,730 | | |
| ஆர்.ஜெஸ்னி | 29,110 | 22,800 | | 51,910 | 6 | 311,460 | 155,730 | | |
| எப்.சபானா சஹறதுல்லாஹ் | 29,110 | 22,800 | | 51,910 | 6 | 311,460 | 155,730 | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜே.என்.எ ன். குமாரி | 29,110 | 22,800 | | 51,910 | 6 | 311,460 | 155,730 | | |
| ஏ.மிலானி | 29,110 | 22,800 | | 51,910 | 6 | 311,460 | 155,730 | | |
| டி.என்.கு லாஸ் | 28,810 | 22,800 | | 51,610 | 6 | 309,660 | 154,830 | | |
| என்.டபிள் யு.எம்.ஹ மீதுல் | 27,910 | 22,800 | | 50,710 | 1 | 50,710 | 25,355 | 1,114,56 5 | |
| | | | | | | | | | |
| | மொத்தம் | | | | | | | | 3,688,220 |
| | | கூட்டு மொத்தம் | | | | | | | |

குறிப்பு 4

| அட்டுறு செலவுகள் விபரம் | 2023 ஆண்டு (ரூ) | 2024 ஆண்டு (ரூ) |
|---|---|---|
| குழு உறுப்பினர்கள் கொடுப்பனவு மட்டக்களப்பு 26.05.2023 பற்றுச்சீட்டு மீளப்பெறல்கள் பற்றுச்சீட்டு இல 721277 | | |
| பற்றுச்சீட்டு இல. 721277 | 37,975 | |
| தெவ்மி விதானகே சம்பளம் | 29,922 | |
| தெவ்மி விதானகே ஊ.சே.நி 12% | 3,402 | |
| தெவ்மி விதானகே ஊ.ந.நி 3% | 851 | |
| **மின்சாரம் - இலங்கை மின்சார சபை** | | |
| மட்டக்களப்பு | 3,339 | |
| மன்னார் | 12,052 | |
| கிளிநொச்சி | 5,950 | 21.342 |
| **நீர் - தேசிய நீர் வழங்கல் மற்றும்வடிகாலமைப்புச் சபை** | | |
| மாத்தறை | 1,075 | |

| | | | | |
|---|---|---|---|---|
| மட்டக்களப்பு | | 3,300 | | |
| மன்னார் | | 1,620 | | |
| | | | 5,995 | |
| **தூய்மைப்படுத்தல்** | | | | |
| | | 33,320 | | |
| ரக்னா லங்கா தூய்மைப்படுத்தல் சேவை | | 33,790 | | |
| விராஜ் தூய்மைப்படுத்தல் சேவை | | 23,909 | | |
| நய்ஸ் மற்றும் தூய்மை பராமரிப்புச் சேவைகள் | | 26,140 | | |
| விம்பன் தூய்மைப்படுத்தல் மற்றும் மனிதவள சேவை | | 22,460 | | |
| க்ரவுன் துணைச் சேவைகள் | | 119,400 | | |
| | | | 259,019 | |
| **தொலைபேசி** | | | 64,768 | |
| **பாதுகாப்பு** | | | 515,591 | |
| **கணக்காய்வு கட்டணங்கள்** | | | 310,000 | |
| மொத்தம் | **72,150** | - | **1,176,714** | **1,248,864** |

குறிப்பு 5

தேறிய சொத்துக்ல் மாற்றங்கள் பற்றிய கூற்று

| | | திரண்ட மிகை/ துண்டுவிழும் தொகை ரூ. | மீள்மதிப்பீடு/ ஒதுக்கு ரூ. | 2024 ஆம் ஆண்டிற்கான மிகை ரூ. | மொத்த தேறிய சொத்துக்கள் ரூ. |
|---|---|---|---|---|---|
| 01/01/2024 இலுள்ளவாறு மீதி ரூ. | | 9,731,800 | | | 9,731,800 |
| **சேர்க்க** | | | | | |
| **முன்னைய ஆண்டிற்கான சீராக்கம** | | | | | |
| கட்டட வாடகை-2023 | 423,146 | | | | |
| நீதியமைச்சிடமிருந்தான காசல்லா மானியம்-2023 | 6,615,760 | | | | |
| ஆட்டுறு செலவுகள் | | 7,338,906 | | | 7,338,906 |
| மட்டக்களப்பு | 300,000 | | | | |
| குறைந்த | | | | | |
| கட்டிடம் மற்றும் கட்டமைப்புகள் | 7,850 | | | | |
| காசல்லா மானியம்-2023 | 6,615,760 | | | | |
| கணக்காய்வுக் கட்டணம் 2023 | 8,688 | | | | |
| கட்டிடம் மற்றும் கட்டமைப்புகள் | 484,479 | | | | |
| கட்டிட வாடகை மன்னார்-2022 | 423,146 | | | | |
| கட்டிட வாடகை மன்னார்-2023 | 240,000 | 7,779,923 | | | 7,779,923 |
| சேர்க்க | | | | | |
| மோட்டார் வாகனம் மீள்மதிப்பீடு/ ஒதுக்கு | | | 8,000,000 | | 8,000,000 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2024 ஆண்டிற்கான மிகை | | | | 3,851,889 | 3,851,889 |
| | மொத்தம் | **9,290,783** | **8,000,000** | **3,851,889** | **21,142,672** |

குறிப்பு 6 வருமானம்

| | 2024 (ரூ) |
|---|---|
| **நீதியமைச்சிடமிருந்து பெற்ற காசு மானியம்** | **108,490,524** |
| குறைந்த 31.12.2024 இலுள்ளவாறு நீதியமைச்சிற்கு மீளளித்த காசு மீதி | 39,825 |
| **சேர்க்க** | |
| நீதியமைச்சிடமிருந்தான காசல்லா மானியம்-2023 | 8,199,259 |
| மொத்த தேறிய மானியம் | **116,649,958** |

குறிப்பு 7

| தனியாள் செலவுகள் | | (ரூ.) |
|---|---|---|
| சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள் | 22,054,913.14 | |
| ஊழியர் சேமலாப நிதியம் | 3,598,415.23 | |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் | 899,603.81 | |
| மேலதிக நேரம் மற்றும் விடுமுறை கொடுப்பனவு | 231,878.32 | |
| ஏனைய கொடுப்பனவுகள் | 18,942,312.96 | |
| | | 45,727.123 |

**பயணச் செலவுகள்**

| | |
|---|---|
| பயணச் செலவுகள் | 33,429 |

குறிப்பு 8 **விநியோகங்கள் மற்றும் நுகர்ச்சிப் பாவனைகள்**

| | | |
|---|---|---|
| எழுதுகருவிகள் மற்றும் அலுவலக தேவைகள் | 854,626 | |
| எரிபொருள் | 3,908,816 | |
| உணவு மற்றும் சீருடைகள் | 798,925 | |
| ஏனைய விநியோகங்கள் | 832,398 | |
| | | **6,394,764** |

குறிப்பு 9 **பராமரிப்புச் செலவுகள்**

| | | |
|---|---|---|
| வாகனப் பராமரிப்பு | 1,078,106 | |
| ஆலை, இயந்திரப் பராமரிப்பு | 1,291,400 | |
| கட்டிடம் மற்றும் கட்டமைப்புக்கள் பராமரிப்பு | 3,675,576 | |
| மென்பொருள் பராமரிப்பு | 203,621 | |
| மின்தூக்கி பராமரிப்பு | 22,208 | |
| | | **6,270,911** |

குறிப்பு 10 **சேவைகள்**

| | | |
|---|---|---|
| சேவைகள் | 27,752,899 | |
| குடும்ப ஆதரவு | 764,584 | |
| சட்ட சேவை | 121,500 | |
| சர்வதேச தினம் | 289,094 | |
| கணக்காய்வு கட்டணம் | 310,000 | |
| தொலைபேசி விசாரணை | 11,079,326 | |
| விசாரணைக்குழு கொடுப்பனவு | 4,972,200 | |
| அச்சிடுதல் மற்றும் மொழிபெயர்ப்பு | 426,757 | |
| வங்கிக் கட்டணங்கள் | 14,285 | |
| பணிக்கொடை | 1,227,717 | |
| | | **46,958,362** |

குறிப்பு 11 2024 ஆண்டுக்கான தேய்மானம்

| | செலவு<br>ரூ. | தேய்மான வீதம்<br>% | ஆண்டுத் தேய்மானம்<br>ரூ. |
|---|---|---|---|
| கட்டிடம் மற்றும் கட்டமைப்புக்கள் | 1,836,162 | 5 | 91,808 |
| தளபாடம் வீட்டு உபகரணங்கள் | 10,506,497 | 10 | 1,050,650 |
| கணினி மற்றும் தகவல்தொடர்பாடல் உபகரணங்கள் | 20,754,907 | 20 | 4,150,981 |
| அலுவலக உபகரணங்கள் | 10,371,884 | 20 | 2,074,377 |
| தொடர்பாடல் உபகரணங்கள் | 228,325 | 20 | 45,664 |
| | | | **7,413,480** |

காசுப் பாய்ச்சல் கூற்றுக்கான குறிப்புக்கள்

குறிப்பு-12-தனியாள் செலவுகள்

| | 2024 (Rs.) | | 2023 (Rs.) | |
|---|---|---|---|---|
| சம்பளங்களும் கூலிகளும் | 22,171,805 | | 19,003,410 | |
| ஊ.சே.நி | 3,602,506 | | | |
| ஊ.ந.நி | 900,626 | | | |
| மேலதிக நேரம் மற்றும் விடுமுறைக் கொடுப்பனவு | 233,625 | | 70,815 | |
| ஏனைய அனுகூலத்தொகை | 18,984,235 | | 12,366,342 | |
| | | **45,892,797** | | **31,440,566** |

குறிப்பு-13

| | | | | |
|---|---|---|---|---|
| பயணச் செலவுகள் | 69,909 | | 2,631,390 | |
| | | 69,909 | | 2,631,390 |

குறிப்பு 14- விநியோகங்கள்/ நுகர்ச்சிப் பொருட்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| காகிதாதி மற்றும் அலுவலக தேவைப்பாடுகள் | 1,255,862 | | 729,932 | |
| எரிபொருள் | 3,908,816 | | 2,601,249 | |
| உணவுகள் மற்றும் சீருடைகள் | 798,925 | | 186,766 | |
| ஏனைய விநியோகங்கள் | 886,358 | | | |
| | | **6,849,961** | | **3,517,947** |

குறிப்பு 15- பராமரிப்புச் செலவுகள்

| | | | | |
|---|---|---|---|---|
| வாகனப் பராமரிப்பு | 1,078,106 | | 260,161 | |
| ஆலை, இயந்திரப் பராமரிப்பு | 1,291,400 | | 1,122,710 | |
| கட்டிடம் மற்றும் கட்டமைப்புக்கள் பராமரிப்பு | 3,802.056 | | 59,790 | |
| மென்பொருள் பராமரிப்பு | 203,621 | | | |
| | | **6,375,183** | | **1,442,661** |

குறிப்பு 16 சேவைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| போக்குவரத்து | 448,949 | | 1,878,558 | |
| அலுவலர்களுக்கான வாகன அனுகூலத் தொகை | 4,936,555 | | | |
| தபால் மற்றும் தொடர்பாடல் | 1,629,719 | | 1,833,719 | |
| விளம்பரம் மற்றும் பத்திரிகைகள் | | | 46,300 | |
| மின்சாரம் மற்றும் நீர் | 1,586,485 | | 996,101 | |
| வாடகை மற்றும் உள்நாட்டு வரிகள் | 6,764,863 | | 3,388,935 | |

| | | | | |
|---|---|---|---|---|
| தூய்மை மற்றும் துப்புரவுச் சேவை | 2,102,522 | | 2,008,074 | |
| பாதுகாப்புச் சேவை | 5,008,788 | | 6,748,896 | |
| ஏனைய சேவைக் கட்டணம் | | | 2,093,910 | |
| APIT | | | 8,939 | |
| ஊழியர் பயிற்சி | | | 138,306 | |
| குடும்ப ஆதரவு | 764,584 | | | |
| சட்டச் சேவை | 121,500 | | | |
| சர்வதேச தினம் | 289,094 | | 36,117 | |
| கணக்காய்வுக் கட்டணம் | 598,488 | | | |
| | 2,102,413 | | 479,338 | |
| | 8,976,913 | | 10,535,173 | |
| தொலைபேசி விசாரணை | | | | |
| விசாரணைக்குழு கொடுப்பனவு | 7,799,597 | | 8,222,877 | |
| அச்சிடுதல் மற்றும் மொழிபெயர்ப்பு | 458,462 | | 314,609 | |
| வங்கிக் கட்டணங்கள் | 14,285 | | | |
| | | **43,603,219** | | **38,729,852** |

வரவுசெலவுத்திட்டம் மற்றும் உண்மைச்செலவுகள்- 2024

| குறியீடு | விவரணம் | | வுழங்கல் ரூ. | உண்மைச் செலவினம் ரூ. | செலவினம் % |
|---|---|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | | | | | |
| 1503 | தனியாள் ஊதியச்செலவுகள் | | 50,460,000 | 45,892,798 | 91 |
| 1509 | ஏனைய தொழிற்பாட்டுச் செலவினம் | | 63,000,000 | 61,269,550 | 97 |
| | | **மொத்தம்** | 113,460,000 | 107,162,348 | 94 |
| மூலதனம்-செலவினம் | | | 16,200,000 | 9,487,611 | 59 |
| 2509 | ஏனைய | | | | |
| | | **கூட்டு மொத்தம்** | **129,660,000** | **116,649,959** | **90** |

| 18 நீதி அமைச்சிடமிருந்தான காசு அல்லா மானியம் - 2024 மாதம் | வாடகை ரூ. | மின்சாரம் ரூ. | நீர் ரூ. | பாதுகாப்பு ரூ. | மின்தூக்கி கட்டணம் ரூ. | மொத்த ரூ. |
|---|---|---|---|---|---|---|
| சனவரி | 455,142 | 138,241 | 6,389 | - | | 599,772 |
| பெப்புருவரி | 455,142 | 161,306 | 7,105 | 84,038 | | 707,592 |
| மாச்சு | 455,142 | 173,616 | 7,096 | 87,229 | | 723,084 |
| ஏப்பிறல் | 455,142 | 153,437 | 7,358 | - | | 615,937 |
| மே | 455,142 | 149,079 | 6,831 | 89,771 | | 700,823 |
| யூன் | 455.142 | 138,175 | 6,386 | 88,651 | | 688,355 |
| யூலை | 455,142 | | | 173,838 | | 628,981 |
| ஓகத்து | 455,142 | 266,896 | 13,311 | 173,536 | | 908,885 |
| செத்தெம்பர் | 455,142 | 123,650 | | 86,443 | | 665,235 |
| ஒத்தோபர் | 455,142 | 118,009 | | | | 573,151 |
| நவம்பர் | 455.142 | 107,681 | | 174,625 | 22.208 | 759,656 |
| திசெம்பர் | 455,142 | 88,790 | | 83,856 | | 627,788 |
| மொத்தம் | **5,461,709** | **1,618,880** | **54,477** | **1,041,987** | **22,208** | **8,199,259** |

**31 டிசம்பர் 2024 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்கீட்டுக் கொள்கையின் விவரத் தொகுப்பு மற்றும் வெளிப்படுத்துகை**

**பொருந்தக்கூடிய சட்டம்:**
காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகமானது 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டதுடன் 2017 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்டது.

## 1. பொது கணக்கீட்டு கொள்கைகள்.

### 1.1 தயாரிப்பின் அடிப்படை.

1.1.1 நிதிக் கூற்றறிக்கைகளானது நிதி நிலை பற்றிய அறிக்கை, நிதிசார் செயற்றிறன் பற்றிய அறிக்கை மற்றும் தேறிய சொத்துக்கள்/ ஒப்புரவு ரீதியான மாற்றங்கள் பற்றிய அறிக்கை, பணப்புழக்க அறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்கள் பற்றிய குறிப்பு ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இவ்வகை அறிக்கையானது இலங்கையின் பட்டய கணக்காளர்கள் நிறுவகத்தால் வழங்கப்பட்ட இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு (SLPSAS) இணங்க தயாரிக்கப்பட்டது.

1.1.2 தொடர்புடைய குறிப்புகளின் கீழ் நியாயமான மதிப்பு தொடர்பாக பொருத்தமான வெளிப்பாடுகள் செய்யப்படும் சந்தர்ப்பங்களை தவிர, நிதிக்கூற்றுக்கள் வரலாற்று செலவு அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன. சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் அவற்றின் தொடர்புடைய கையிருப்பிலுள்ள சொத்துக்களின் நிலவரத்தை பிரதிபலிக்கும் வகையில் தொகுக்கப்பட்டுள்ளதுடன் 1 ஜனவரி 2024 முதல் 31 டிசம்பர் 2024 வரையிலான 12 மாதங்களுக்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

1.1.2. **சொத்து மற்றும் உபகரணம்**
**அங்கீகாரம் மற்றும் அளவீடு**
சொத்து மற்றும் உபகரணங்களானது விலை அல்லது குறைவாக திரட்டப்பட்ட தேய்மானத்திலான நியாயமான மதிப்பு ஆகியவற்றில் குறிப்பிடப்படுகின்றன. சொத்து மற்றும் உபகரணங்கள் ஆகிய அனைத்து பொருட்களும் செலவில் ஆரம்பமாக பதிவு செய்யப்படுகின்றன.

**தேய்மானம்**
அத்தகைய சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள பொருளாதார ஆயுட்காலம் மீது அத்தகைய தொகைகளை எழுதுவதற்கு நேர்கோட்டு முறையைப் பயன்படுத்தி தேய்மானத்திற்கான ஒதுக்கீடு கணக்கிடப்படுகிறது. சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலம் பின்வருமாறு.

| சொத்து | தேய்மான வீதம் % |
|---|---|
| கட்டிடம் மற்றும் கட்டமைப்புகள் | 05% |
| மோட்டார் வாகனங்கள் | 20% |
| தளபாடம் மற்றும் வீட்டு உபகரணங்கள் | 10% |
| கணினி மற்றும் தகவல் தொடர்பாடல் உபகரணங்கள் | 20% |
| அலுவலக உபகரணங்கள் | 20% |
| தொடர்பாடல் உபகரணங்கள் | 20% |
| மின் உபகரணங்கள் | 20% |
| இணையம் மற்றும் முறைமை அபிவிருத்தி | 33.3% |

கொள்வனவு இடம்பெற்ற ஆண்டில் தேய்மானத்திற்குரிய ஒதுக்கீடுகள் செய்யப்படாது என்பதுடன் 2ஆவது ஆண்டிலிருந்து முழுத் தேய்மானத்திற்குரிய ஒதுக்கீடுகளும் செய்யப்பட வேண்டும். அகற்றப்பட்ட மாதத்தைப் பொருட்படுத்தாமல், அகற்றப்பட்ட ஆண்டில் முழுத் தேய்மானமும் இடம்பெற வேண்டும்.

3. **ஊழியர்களுக்கான பயன்கள்**

**பணிக்கொடைக்கான ஏற்பாடு**

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்தின் அடிப்படையில் ஒரு வருடசேவைக் காலத்தைப் பூர்த்தி செய்த காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலக ஊழியர்களுக்கு பணிக்கொடைக்கான ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

**வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள்**

ஒரு வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டத்தின் கீழ் நிறுவனமானது ஒவ்வொரு ஊழியர்களுக்கும் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு (EPF) சம்பளத்தில் 12% ஐயும் ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு (ETF) சம்பளத்தில் 3% ஐயும் பங்களிக்கின்றது.

OMP இன் ஒவ்வொரு ஊழியரும் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு (EPF) சம்பளத்தில் 8% பங்களிப்பார்கள்.

4. **மானியங்களுக்கான கணக்கீடு**

2023 ஜனவரி முதல் டிசம்பர் வரை, மூலதனம் மற்றும் மீண்டெழும் மானியம் வழங்குதல் தொடர்பிலாக நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சினூடாக திறைசேரியால் வெளியிடப்பட்ட அளிப்புகள், நிதிக்கூற்றுகளில் வருமானம் என்ற பகுதியின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

5. **கையிருப்பு**

கையிருப்பில் எழுதுபொருட்கள் மட்டுமே உள்ளன. ஒவ்வொரு பொருளின் விலையையும் பொருட்களை வழங்கும் முறையையும் அடையாளம் காண அலுவலகம் FIFO முறையைப் பயன்படுத்துகிறது. இதன் விளைவாக, காலத்தின் முடிவில் கையிருப்பு பட்டியலில் சரக்குகளில் மீதமுள்ள பொருட்கள் மிக சமீபத்தில் வாங்கப்பட்டவையாகும்.

6. **வருமானம் மற்றும் செலவு**

6.1 பொதுவானதும் ஏற்றுக்கொள்ளக்கூடியதுமான கணக்கீட்டு கொள்கைகளுடன் இணங்கும்வகையில் மேலே குறிப்பிடப்பட்ட நிதிக் கூற்றுக்கள் நியாயமாக வழங்கப்படுள்ளன. அமைச்சின் திறைசேரி மானியங்கள் பண அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய வருமானங்கள் உத்தேச அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

6.2 தற்கால கணக்கீட்டு ஆண்டு தொடர்பான அனைத்து செலவுகளும் உத்தேச அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

7. **பணப்புழக்க அறிக்கை**

நேரடி முறையைப் பயன்படுத்தி பணப்புழக்கக் கூற்று தயாரிக்கப்பட்டு, செயல்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய மிகைக்கட்டணம்.'. (துண்டு) சாதாரண நடவடிக்கைகளில் இருந்து தேறிய பணப்புழக்கங்களின் இணக்கம் குறிப்புகள் பிரிவின் கீழ் காட்டப்பட்டுள்ளன.

8. **விளக்கக்காட்சி நாணயம்**

நிதிநிலைக் கூற்றுக்கள் இலங்கை ரூபாயில் முன்வைக்கப்படுகின்றன.

9. **மோட்டார் வாகனத்தின் மீள்மதிப்பீடு**

மோட்டார் வாகன இல. WP-CAO-4458 மற்றும் இல. PKS-3955 ஒவ்வொன்றும் நான்கு மில்லியன் ரூபாவாக மொத்தம் எட்டு மில்லியன் ரூபாவிற்கு மீள்மதிப்பீடுசெய்யப்பட்டன. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் காப்புறுதிசெய்யப்பட்ட ஒவ்வொரு வாகனத்தினது பெறுமதிக்காக கவனத்திற்கொள்ளப்பட்டது.